உ

சிவமயம்

திருத்தொண்டர் வரலாறு

(பெரிய புராணச் சுருக்கம்)



வெளியிடுவோர் :

பன்னிரு திருமுறை மன்றம்

ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்,

தெற்காடி வீதி, மதுரை-625 001.

திருச்சிற்றம்பலம்

வெளியீடு எண் : 187

திருத்தொண்டர் வரலாறு

(பெரிய புராணச் சுருக்கம்)



54 ஆவது ஆண்டு நிறைவு விழா வெளியீடு

பொருள் உதவும் புண்ணியர் :

அருள்நெறிச் செல்வர்

திரு. S.K. செந்தியப்ப நாடார்

வெளியிடுவோர் :

பன்னிரு திருமுறை மன்றம்

அ/மி. மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில்,

தெற்காடி வீதி, மதுரை-1.

திருச்சிற்றம்பலம்

மன்றப் பணிகள்

1. ஞாயிறு, புதன், வெள்ளி ஆகிய கிழமைகளில் காலை 7 மணி முதல் 8.30 மணி வரை ஆடி வீதிகளில் திருமுறை ஓதி வலம் வரல்.
2. நாயன்மார் குருபூஜை நாட்களில் காலையில் வழிபாடும் மாலையில் பெரியபுராணச் சிந்தனையும்.
3. வெள்ளி மாலை 6 மணிக்கு திருமுறை வகுப்பு.
4. அன்பர்கள் விரும்பி அழைப்பின் அவர்கள் இல்லங்களில் திருமுறைப் பாராயணம் செய்தல்.
5. தமிழ்ப் புத்தாண்டு முதல் நாளில் திருப்பரங்குன்றத்திற்கு புனித நடைப்பயணம்.
6. ஆங்கில மாத முதல் ஞாயிறுகளில் திருமுறை முற்றோதல்.
7. சமய வெளியீடுகளை இலவசமாக வழங்கல்.
8. 'உழவாரம்' சமய இதழ் வெளியிடல்.
9. ஆண்டில் இருமுறை பாடல் பெற்ற தலங்களில் வழிபாடும் உழவாரப் பணியும் நிகழ்த்துதல்.

உறுப்பினராகி உதவுக !

பதிப்புரை

42

அன்புடையீர்! வணக்கம்.

பன்னிரண்டாவது திருமுறையாக விளங்குவது திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணம். சேக்கிழார் பெருமானால் அருளப் பெற்றது. ஓதுபவர் உள்ளங்களைப் பத்தி நெறியில் ஈடுபடச் செய்ய வல்லது. அறுபத்து மூன்று நாயன்மார்களின் அருள் வரலாறுகளை இயம்புவது. சைவ மெய்யடியார்களின் குறிக்கோள் நிறைந்த வாழ்வியல் பாங்குகளை உரை நடையின் மூலம் எல்லோரும் அறிந்து கொள்ள வேண்டும் என்னும் நோக்கில் இச்சுருக்க நூல் வெளி வருகின்றது.

இதனை மன்றத்தின் வழியாக உபகரிக்கின்றவர்கள் வணிகர் பெருமகனாரும் உழவாரம் புரவலரும் ஆகிய அருள்நெறிச் செல்வர் திரு. எஸ்.கே. செந்தியப்ப நாடார் அவர்கள். மன்றப் பொன்விழாவின் போது மன்றப் புரவலராக அமைந்து மன்றப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் நல்கி வருவதுடன் மன்ற ஆண்டு விழாக்களில் மாகேசுவர பூஜையைத் தொடர்ந்து நடத்தி வருகிறார்கள். மன்றத்தின் வாயிலாக திருவிளையாடல் புராண நூலினை வெளியிட்டு மகிழ்ந்த அவர்கள் தற்போது இந்நூலை வெளியிடுகிறார்கள். அவர்களும் அவர்தம் குடும்பத்தாரும் எல்லா நலன்களும் பெற்று வாழ இறைவனை வேண்டுகிறேன். இச்சுருக்க நூலை எழுதி உதவிய 'உழவாரம்' இதழ் பதிப்பாளர் சித்தாந்தப் புலவர் திருமதி சிவ. பார்வதி அவர்களுக்கு வாழ்த்து. இந்நூலுள் திருத்தொண்டத்தொகை, திருத்தொண்டர் திருவந்தாதி, திருத்தொண்டர் புராணசாரம், போற்றிக் கலிவெண்பா மற்றும் நாயன்மார் சரித விளக்கப் படங்களும் தொகுக்கப் பெற்றுள்ளன.

பெற்றுப் படித்து சைவ நெறியைப் பின்பற்ற வேண்டுகிறேன்.

அன்பன்,

நீ.சி. சுந்தரராமன்,

தருமையாதீனப் புலவர்

(கூடல் சுந்தரன்)

செயலர்,

பன்னிரு திருமுறை மன்றம்,

மதுரை. 09.12.2007

உ

திருச்சிற்றம்பலம்

துதிகள்

விநாயகர்

வானுலகு மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

சைவ சமயாசாரியர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம் போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள் போற்றி.

திருத்தொண்டர்கள், சேக்கிழார் நாயனார்

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம் போற்றி
ஒல்லையவர் புராணகதை உலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

– உமாபதி சிவாசாரியார் – சேக்கிழார் நாயனார் புராணம்.

வாழ்த்து

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நில வுலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம். – சேக்கிழார்.

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராணச் சருக்கம்

(சேக்கிழார்)

திருத்தொண்டத்தொகை

பண் - கொல்லிக் கௌவாணம்

(சுந்தரமூர்த்தி நாயனார்)

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

இலைமலிந்த வேல்நம்பி எறிபத்தர்க் கடியேன்
ஏனாதி நாதன்றன் அடியார்க்கும் அடியேன்
கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்
கடவூரிற் கலயன்றன் அடியார்க்கும் அடியேன்
மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்
எஞ்சாத வாட்டாயன் அடியார்க்கும் அடியேன்
அலைமலிந்த புனல்மங்கை ஆனாயர்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 2

மும்மையால் உலகாண்ட மூர்த்திக்கும் அடியேன்
முருகனுக்கும் உருத்திர பசுபதிக்கும் அடியேன்
செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்
திருக்குறிப்புத் தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்
மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டெழுந்த தாதைதாள் மழுவினா லெறிந்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 3

திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக் கரையன்ற னடியார்க்கும் அடியேன்
பெருநம்பி குலச்சிறைதன் னடியார்க்கும் அடியேன்
பெருமிழலைக் குறும்பர்க்கும் பேயார்க்கும் அடியேன்
ஒருநம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்
ஒலிபுனல்சூழ் சாத்தமங்கை நீலநக்கர்க் கடியேன்
அருநம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 4

வம்பறா வரிவண்டு மணம்நாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கும் அடியேன்
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கும் அடியேன்
நம்பிரான் திருமூல னடியார்க்கும் அடியேன்
நாட்டம்மிகு தண்டிக்கும் மூர்க்கர்க்கும் அடியேன்
அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 5

வார்கொண்ட வனமுலையாள் உமைபங்கன் கழலே
மறவாது கல்லெறிந்த சாக்கியர்க்கும் அடியேன்
சீர்கொண்ட புகழ்வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்
செங்காட்டங் குடிமேய சிறுதொண்டர்க் கடியேன்

கார்கொண்ட கொடைக்கழறிற் றறிவார்க்கும் அடியேன்
கடற்காழிக் கணநாத னடியார்க்கும் அடியேன்
ஆர்கொண்ட வேற்கூற்றன் களந்தைக்கோ னடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 6

பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்
பொழிற்கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்க் கடியேன்
மெய்யடியான் நரசிங்க முனையரையர்க் கடியேன்
விரிதிரைசூழ் கடல்நாகை அதிபத்தர்க் கடியேன்
கைதடிந்த வரிசிலையான் கலிக்கம்பன் கலியன்
கழற்சத்தி வரிஞ்சையர்கோ னடியார்க்கும் அடியேன்
ஐயடிகள் காடவர்கோ னடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 7

கறைக்கண்டன் கழலடியே காப்புக் கொண் டிருந்த
கணம்புல்ல நம்பிக்குங் காரிக்கும் அடியேன்
நிறைக்கொண்ட சிந்தையால் நெல்வேலி வென்ற
நின்றசீர் நெடுமாற னடியார்க்கும் அடியேன்
துறைக்கொண்ட செம்பவளம் இருளகற்றுஞ் சோதித்
தொன்மயிலை வாயிலா னடியார்க்கும் அடியேன்
அறைக்கொண்ட வேல்நம்பி முனையடுவார்க் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 8

கடல்சூழ்ந்த உலகெலாங் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழற்சிங்க னடியார்க்கும் அடியேன்
மடல்சூழ்ந்த தார்நம்பி இடங்கழிக்கும் தஞ்சை
மன்னவனாஞ் செருத்துணைத னடியார்க்கும் அடியேன்
புடைசூழ்ந்த புலியதள்மேல் அரவாட ஆடிப்
பொன்னடிக்கே மனம்வைத்த புகழ்த் துணைக்கும் அடியேன்
அடல்சூழ்ந்த வேல்நம்பி கோட்புலிக்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 9

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்க ளெல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க் கடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிச்சார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 10

மன்னியசீர் மறைநாவன் நின்றவூர்ப் பூசல்
வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்
தென்னவனாய் உலகாண்ட செங்கணார்க் கடியேன்
திருநீல கண்டத்துப் பாணனார்க் கடியேன்
என்னவனாம் அரனடியே அடைந்திட்ட சடையன்
இசைஞானி காதலன் திருநாவ லூர்க்கோன்
அன்னவனாம் ஆரூர னடிமைகேட் டுவப்பார்
ஆரூரி லம்மானுக் கன்பரா வாரே. 11

நம்பி என்ற திருப்பதிகம்

பண் - தக்கேசி (சுந்தரமூர்த்தி நாயனார்)

மெய்யை முற்றப்பொடிப் பூசியோர் நம்பி
வேதம்நான் கும்விரித் தோதியோர் நம்பி
கையிலோர் வெண்மழு வேந்தியோர் நம்பி
கண்ணுமூன் றுமுடை யாயொரு நம்பி
செய்ய நம்பிசிறு செஞ்சடை நம்பி
திரிபுரந் தீயெழச் செற்றதோர் வில்லை
எய்த நம்பியென்னை ஆளுடை நம்பி
எழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 1

திங்கள் நம்பிமுடி மேல்அடி யார்பாற்
சிறந்த நம்பிபிறந் தவுயிர்க் கெல்லாம்
அங்கண் நம்பியருள் மால்விசும் பாளும் அ
மரர் நம்பிகும ரன்முதற் றேவர்
தங்கள் நம்பிதவத் துக்கொரு நம்பி
தாதை யென்றுன் சரண்பணிந் தேத்தும்
எங்கள் நம்பியெனை ஆளுடை நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண்டாயே. 2

வருந்த அன்றுமத யானை யுரித்த
வழக்கு நம்பிமுழக் குங்கடல் நஞ்சம்
அருந்து நம்பியம ரர்க்கமு தீந்த
அருளென் நம்பிபொரு ளால்வரு நட்டம்
புரிந்த நம்பிபுரி நூலுடை நம்பி
பொழுதும்விண் ணும்முழு தும்பல வாகி
இருந்த நம்பியென்னை யாளுடை நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 3

ஊறு நம்பிஅமு தாஉயிர்க் கெல்லாம்
உரியநம் பிதெரி யம்மறை யங்கங்
கூறும் நம்பிமுனி வர்க்கருங் கூற்றைக்
குமைத்தநம் பிகுமை யாப்புல னைந்துஞ்
சீறு நம்பிதிரு வெள்ளடை நம்பி
செங்கண்வெள் ளைச்செழுங் கோட்டெரு தென்றும்
ஏறு நம்பியென்னை யாளுடை நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 4

குற்ற நம்பிகுறு காரெயில் மூன்றைக்
குலைத்தநம் பிசிலை யாவரை கையில்
பற்று நம்பிபர மானந்த வெள்ளம்
பணிக்கும்நம் பியெனப் பாடுத லல்லால்

மற்று நம்பியுனக் கென்செய வல்லேன்
மதியி லேன்படு வெந்துய ரெல்லாம்
எற்று நம்பியென்னை யாளுடை நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 5

அரித்த நம்பிஅடி கைதொழு வார்நோய்
ஆண்டநம்பி மன்னை யீண்டுல கங்கள்
தெரித்த நம்பியொரு சேவுடை நம்பி
சில்பலிக் கென்றகந் தோறுமெய் வேடந்
தரித்த நம்பிசம யங்களின் நம்பி
தக்கன்றன் வேள்விபுக் கன்றிமை யோரை
இரித்த நம்பியென்னை யாளுடை நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 6

பின்னைநம் பும்புயத் தான்நெடு மாலும்
பிரமனும் என்றிவர் நாடியுங் காணா
உன்னை நம்பியொரு வர்க்கெய்த லாமே
உலகுநம் பியுரை செய்யும தல்லால்
முன்னை நம்பிபின்னும் வார்சடை நம்பி
முழுதிவை யித்தனை யுந்தொகுத் தாண்ட
தென்னை நம்பியெம் பிரானாய நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 7

சொல்லை நம்பிபொரு ளாய்நின்ற நம்பி
தோற்ற மீறுமுத லாகிய நம்பி
வல்லை நம்பிஅடி யார்க்கருள் செய்ய
வருந்தி நம்பிஉனக் காட்செய கில்லார்
அல்லல் நம்பிபடு கின்றதென் நாடி
அணங்கொரு பாகம்வைத் தெண்கணம் போற்ற
இல்ல நம்பியிடு பிச்சைகொள் நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 8

காண்டு நம்பிகழற் சேவடி யென்றுங்
கலந்துனைக் காதலித் தாட்செய்கிற் பாரை
ஆண்டு நம்பியவர் முன்கதி சேர
அருளு நம்பிகுரு மாப்பிறை பாம்பைத்
தீண்டு நம்பிசென்னி யிற்கன்னி தங்கத்
திருத்து நம்பிபொய்ச் சமண்பொரு ளாகி
ஈண்டு நம்பியிமை யோர்தொழு நம்பி
யெழுபிறப் புமெங்கள் நம்பிகண் டாயே. 9

கரத்தி நம்பிகசி யாதவர் தம்மைக்
கசிந்தவர்க் கிம்மையோ டம்மையி லின்பம்
பெருக்கு நம்பிபெரு கக்கருத்தா............ 10

சுந்தரர் வரலாறு
(ஆடிச் சுவாதி)

பொன்னி வடகரை சேர்நாரை யூரில் புழைக்கைமுக
மன்னன் அறுபத்து மூவர் பதிதேம் மரபுசெயல்
பன்னஅத் தொண்டத்தொகைவகை பல்கும்அந் தாதிதனைச்
சொன்ன மறைக்குல நம்பிபொற் பாதத்துணை துணையே.

தொழுதும் வணங்கியும் மாலயன் தேடருஞ் சோதிசென்றாங்
கெழுதுந் தமிழ்ப்பழ ஆவணங் காட்டி யெனக்குன்குடி
முழுதும் அடிமைவந் தாட்செ யெனப்பெற்ற வன்முரல்தேன்
ஒழுகும் மலரின்நற் றாரெம்பி ரான்நம்பி யாரூரனே.

அருட்டுறை யத்தற் கடிமைப்பட் டேனினி யல்லனென்னும்
பொருட்டுறை யாவதென் னேயென்ன வல்லவன் பூங்குவளை
இருட்டுறை நீர்வயல் நாவற் பதிக்கும் பிரானடைந்தோர்
மருட்டுறை நீக்கிநல் வான்வழி காட்டிட வல்லவனே.

நிதியார் துருத்திதென் வேள்விக் குடியாய் நினைமறந்த
மதியேற் கறிகுறி வைத்த புகர்பின்னை மாற்றிடென்று
துதியா வருள்சொன்ன வாறறி வாரிடைப் பெற்றவன்காண்
நதியார் புனல்வயல் நாவலர் கோனென்னும் நற்றவனே.

நந்திக்கு நம்பெரு மாற்குநல் லாரூரில் நாயகற்குப்
பந்திப் பரியன செந்தமிழ் பாடிப் படர்புனலில்
சிந்திப் பரியன சேவடி பெற்றவன் சேவடியே
வந்திப் பவன்பெயர் வன்றொண்ட னென்பரிவ் வையகத்தே.

துணையு மளவுமில் லாதவன் தன்னரு ளேதுணையாக்
கணையுங் கதிர்நெடு வேலுங் கறுத்த கயலிணையும்
பிணையும் நிகர்த்தகண் சங்கிலி பேரமைத் தோளிரண்டும்
அணையு மவன்திரு வாரூர னாகின்ற அற்புதனே.

கூற்றுக் கெவனோ புகல்திரு வாரூரன் பொன்முடிமேல்
ஏற்றுத் தொடையலு மின்னடைக் காயு மிடுதருமக்
கோற்றொத்து கூனனுங்கூன்போய்க்குருடனுங் கண்பெற்றமை
சாற்றித் திரியும் பழமொழி யாமித் தரணியிலே.

கொடுத்தான்முதலைகொள்பிள்ளைக்குயிரன்றுபுக்கொளியூர்த்
தொடுத்தான் மதுர கவியவி நாசியை வேடர்சுற்றம்
படுத்தான் திருமுரு கன்பூண் டியினில் பராபரத்தேன்
மடுத்தா னவனென்பர் வன்றொண்ட னாகின்ற மாதவனே.

தகுமகட் பேசினோன் வீயவே நூல்போன சங்கிலிபால்
புகுமணக் காதலி னாலொற்றி யூருறை புண்ணியன்தன்
மிகுமலர்ப் பாதம் பணிந்தரு ளாலிவ் வியனுலகம்
நகும்வழக் கேநன்மை யாப்புணர்ந் தான்நாவ லூரரசே.

செழுநீர் வயல்முது குன்றினில் செந்தமிழ் பாடிவெய்ய
மழுநீள் தடக்கைய னீந்தபொன் னாங்குக்கொள் ளாதுவந்தப்
பொழில்நீ டருதிரு வாரூரில் வாசியும் பொன்னுங்கொண்டோன்
கெழுநீள் புகழ்த்திரு வாரூர னென்றுநாம் கேட்பதுவே.

ஞானஆ ரூரரைச் சேரரை அல்லது நாம் அறியோம்
மானவ ஆக்கை யொடும்புக்(கு) அவரை வளரொளிப்பூண்
வானவ ராலும் மருவற்(கு) அரிய வடகயிலைக்
கோனவன் கோயிற் பெருந்தவத் தோர்தங்கள் கூட்டத்திலே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

எல்லாம் வல்ல பரம்பொருளாகிய சிவபெருமான் விரும்பி வசிக்கும் திருக்கயிலாய மலையில் அவருக்குத் திருத்தொண்டு புரியும் ஆலால சுந்தரர் என்னும் அடியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். ஒருநாள் அவர் ஈசனுக்குப் பூசனை புரியும் மலர் கொய்வதற்கு மலர்வனத்தை அடைந்தார். அங்கு உமாதேவியாரின் சேடியர்களாகிய அநிந்திதை, கமலினி என்பவர்கள் மலர் பறிக்க வந்திருந்தார்கள். அப்பெண்மணிகள் இருவரையும் கண்டு ஆலால சுந்தரர் ஆசை கொண்டார். அவர்களும் அவர்மீது விருப்பம் கொண்டனர். எல்லாம் உணர்ந்த இறைவன், 'நீ பெண்கள் மீது ஆசை கொண்டாய். ஆகையால் நீ நிலவுலகத்தில் தோன்றி அவர்கள் இன்பத்தைப் பெறக் கடவாய்' என்றார். அதனைக் கேட்ட ஆலாலசுந்தரர் மனம் நடுங்கி, உடல் ஒடுங்கி, இறைவனை வணங்கி, 'ஐயனே, அடியேன் குற்றத்தைப் பொறுத்தருள வேண்டும். நான் உலக மாயையில் சிக்கி அலையும் போது தடுத்தாட் கொள்ளுதல் வேண்டும்' என்று இறைஞ்சினார். சிவபெருமானும் அவ்வாறே அருள் புரிந்தார்.

பின்னர் ஆலாலசுந்தரர், தமிழ் நாட்டில் திருநாவலூர் என்னும் புண்ணியப் பதியில் ஆதிசைவர் குடும்பத்தைச் சார்ந்த சடையனார் என்னும் சிவாச்சாரியாருக்கும், அவர்தம் மனைவியாராகிய இசைஞானியாருக்கும் ஓர் அருமை மைந்தராகத் தோன்றினார். பெற்றோர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. அம் மகனுக்குப் பெற்றோர் நம்பியாரூரர் என்னும் பெயரிட்டு அழைத்தனர். நம்பியாரூரர் நரசிங்க முனையரையர் என்னும் மன்னரால் வளர்க்கப் பெற்றார். கல்வித் துறைகள் எல்லாவற்றிலும் வல்லவராய் விளங்கினார். நாளடைவில் அவர் திருமணப் பருவத்தை அடைந்தார்.

சடையனார், புத்தூர் என்னும் ஊரில் வாழும் சடங்கவி சிவாசாரியார் என்னும் அந்தணரின் மகளை மணம் பேசிவரப் பெரியோர்கள் சிலரை விடுத்தார். திருமண நாள் குறிக்கப்பட்டது. திருமண நாளன்று நம்பியாரூரரை மணக்கோலம் செய்வித்து திருமணப் பந்தலில் நிறுத்தினர். உற்றாரும் உறவினரும் சான்றோரும் அங்குக் கூடியிருந்தனர்.

சுந்தரரைத் தடுத்தாட் கொள்வதாகத் தாம் முன்பு கூறியதை எண்ணிய சிவபிரான், அவ்வாறே செய்வதற்காக ஒரு முதிய அந்தணர் வேடம் தாங்கி திருமணம் நடைபெறும் வீட்டை அடைந்தனர். அவர் தோற்றத்தைக் கண்டவர்கள்,

"மொய்த்துவளர் பேரழகு மூத்தவடி வேயோ?
அத்தகைய மூப்பெனு மதன்படிவ மேயோ?
மெய்த்தநெறி வைதிகம் விளைந்த முதலேயோ
இத்தகைய வேடமென ஐயமுற வெய்தி".

என்று கூறி ஐயுற்றனர். வேதியர் திருமணப் பந்தலில் சென்று நம்பியாரூரரை நோக்கி, 'உனக்கும் எனக்கும் ஒரு வழக்கு உள்ளது. அதனைத் தீர்த்த பின்னரே நீ திருமணம் செய்து கொள்ளலாம்' என்று முறையிட்டார். அதுகேட்ட நம்பியாரூரர் மிக்க வியப்புற்று அது என்னவென்று கேட்டார். அதற்கு வேதியர் சபையில் உள்ளவர்களை நோக்கி, 'பெரியோர்களே, இந்த நம்பியாரூரன் எனக்கு அடிமையாவான். இவன் பாட்டனார் எனக்கு அடிமைச் சாசனம் எழுதிக் கொடுத்துள்ளார்' என்று முறியோலை காட்டினார். வேதியர்கள் அதுகேட்டு நகைத்தனர். அவர்கள் யாவரும் அந்தணரைப் பார்த்து, 'அந்தணருக்கு அந்தணர் அடிமையாதலை இதுவரை அறியோம். தங்கள் பேச்சு புதுமையாக இருக்கின்றது' என்றார்கள். ஆரூரர் மிகுந்த சினம் கொண்டு, "நீர் ஒரு பித்தரோ?" என்று கூறி அவர் கையிலிருந்த ஓலையைப் பிடுங்கிக் கிழித்து எறிந்தார். அந்தணர் ஆரூரரை எளிதாக விடுவதாயில்லை. வேதியர்கள் அவரை நோக்கி, 'வீண் வழக்கிடும் நீங்கள் யார்? எந்த

ஊர் ?' என்று கேட்க, அவர், 'திருவெண்ணெய்நல்லூர்' என்றார். உடனே அவர்கள், 'அங்ஙனமாயின் அவ்வூருக்கே சென்று அங்குள்ள வேதியர் பால் உங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளுங்கள்' என்றனர். அந்தணர் ஆரூரரைத் திருவெண்ணெய் நல்லூருக்கு அழைத்துச் சென்று அங்குத் தம் வழக்கைக் கூறி, மூல ஓலை ஒன்றைக் காட்டி அதில் ஆரூரரின் பாட்டனாருடைய கையெழுத்துச் சரியாக இருப்பதைப் புலப்படுத்தினார். அது கண்ட வேதியர்கள், ஆரூரர் அக்கிழ அந்தணருக்கு அடிமையாவதே முறை என்றனர். அவரும் உடன்பட்டார். அந்தணர்கள் கிழவேதியரை நோக்கி, 'பெரியீர், இந்த ஊரில் தங்கள் வீடு எங்குள்ளது ? காட்ட வேண்டும்' என்றனர். அவரும் காட்டுவதாக அவர்களை அழைத்துச் சென்று அருட்டுறை என்னும் ஆலயத்தில் மாயமாய் மறைந்தனர். எல்லோரும் திகைத்தார்கள். சிவபெருமான் இடபாரூடராகத் தோன்றி, ஆரூரரைத் தடுத்தாட் கொள்ளவே அவ்வேடத்தில் வந்ததாகக் கூறினார். பின்பு அவர் ஆரூரரை நோக்கி, 'நீ என்பால் வன்சொல் கூறினமையால் வன்றொண்டன் எனப் பெயர் பெறுவாய். அன்றியும் என்னை முன்னர்ப் பித்தன் என்று அழைத்தாய். ஆதலால் 'பித்தா' என்று தொடங்கிப் பாமாலைகள் பாடுவாயாக' என்று கூறி மறைந்தார். ஆரூரரும் இறைவன் திருவருளால்,

> பித்தா பிறைசூடி பெரு மானே அருளாளா
> எத்தான் மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
> வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூர்அருட்டுறையுள்
> அத்தா உனக்(கு) ஆளாய்இனி அல்லேன் எனல் ஆமே!.


என்று தொடங்கிப் பதிகங்கள் பாடினார். பின்னர் சிவத் தலங்கள் தோறும் சென்று இறைவனைக் குறித்துப் பதிகங்கள் பாடி வழிபடுவாராயினார். அவர் திருவாரூர் சென்று அங்கு சிவபெருமானால் 'தம்பிரான் தோழர்' என்னும் திருப்பெயர் பெற்றார்.

இஃது இவ்வாறிருக்க, முன்னர், திருக்கயிலாயத்தில் சுந்தரரைக் கண்டு காதல் கொண்ட கமலினியார் திருவாரூரில் உருத்திர கணிகையர் குலத்தில் பரவையாராக அவதரித்தார். அவர் ஒருநாள்

சிவபெருமானை வழிபட்டுச் சிவாலயத்திலிருந்து திரும்பி வரும்போது நம்பியாரூரரைக் கண்டார். ஆரூரரும் அம்மையாரைப் பார்த்தார். இருவருக்கும் காதல் உண்டாயிற்று. இறைவன் திருவருளால் அவர்கள் திருமணம் புரிந்து இல்லறம் என்னும் நல்லறம் ஆற்றினர்.

பின்னர் நம்பியாரூரர் திருத்தொண்டர்களின் பெருமைகளை விளக்கித் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை இயற்றினார். அவ்வூரிலிருந்து கோளிலி சென்று குண்டையூர்க் கிழார் கொடுத்த நெல் மலையைத் திருவாரூரில் சேர்ப்பிக்கும்படி இறைவனை வேண்டினார். சிவகணங்கள் அதனைத் திருவாரூரில் சேர்த்தன. ஒரு சமயம் திருப்புகலூரில் இருந்தபோது திருவாரூரில் நடைபெற்ற உத்திரத் திருநாளில், பரவையாரின் செலவுக்குப் பணம் இன்றி ஆரூரர் வருந்தினார். இறைவன் திருவருளால் அவருக்குத் தலையணையாக இருந்த செங்கற்கள் பொன் கற்களாக மாறின. திருமுதுகுன்றத்தில் பெற்ற 12 ஆயிரம் பொன் காசுகளை அவற்றை மணிமுத்தா நதியில் இட்டுத் திருவாரூர் சென்று அங்குள்ள (ˊ ﾞத்தில் தேடி எடுத்துக் கொண்டார்.

கயிலையில் சுந்தரரைக் கண்டு ஆசை கொண்ட அநிந்திதையார் ஞாயிறு என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் சங்கிலியார் என்னும் திருப்பெயருடன் தோன்றினார். அவர் மணப் பருவத்தை அடைந்ததும் திருவொற்றியூர் சென்று இறைவனுக்குப் பூமாலை தொடுத்துக் கொடுக்கும் திருப்பணியில் ஈடுபட்டிருந்தார். நம்பியாரூரர் அத்தலத்தை அடைந்தபோது சங்கிலியாரைக் கண்டு மையல் கொண்டார். சிவபெருமானின் கட்டளைப்படி எப்போதும் பிரிவதில்லை என்று மகிழ மரத்தடியில் சத்தியம் செய்து சங்கிலியாரைத் திருமணம் செய்து கொண்டார். சிலகாலம் சென்றபின், திருவாரூர் வசந்த விழாவை எண்ணித் திருவொற்றியூரை விட்டுச் செல்லுகையில் அவர் உறுதி தவறியதால் தம் இருகண் பார்வையையும் இழந்தார். கண்ணிழந்து திருமுல்லை வாயிலை வணங்கித் திருவெண்பாக்கத்தை அடைந்தார். அங்குத் திருக்கோயில் உள்ளீரோ? என்று பாட, இறைவன் 'உளோம்



சுந்தரமூர்த்தி சுவாமிகள் சங்கிலியாருக்கு மகிழின் கீழ் சபதம் செய்து கொடுத்தல்.




சுந்தரர் சங்கிலி நாச்சியார் திருமணக்காட்சி.

போகீர்' என்று திருவாய் மலர்ந்து ஊன்றுகோல் ஒன்றைக் கொடுத்தார். பின்பு காஞ்சிபுரத்தை அடைந்து இறைவனை வேண்டி இடக்கண் பெற்றார். திருவாரூர் அடைந்து வலக்கண்ணும் பெற்றுப் பரவையாரின் ஊடலைத் தணிக்க இறைவனையே இருமுறை தூதாக அனுப்பினார்.

இச்செய்தியை அறிந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார், ஆரூரர் சிவபெருமானையே ஏவல் கொண்டமையால் அவர்மீது சினம் கொண்டு அவரைப் பார்க்கலாகாது என்று விரதம் பூண்டார். அதனை அறிந்த சிவபெருமான் இருவரையும் ஒற்றுமைப்படுத்த எண்ணங் கொண்டு கலிக்காம நாயனாருக்குச் சூலை நோய் தந்து அதனைத் தீர்ப்பதற்காக நம்பியாரூரரை அங்கே செல்லுமாறு ஏவினார். அவர் வருகையைக் கேள்விப்பட்ட கலிக்காமனார் அவரைப் பார்க்க மனமின்றி உடைவாளால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிர் துறந்தார். நம்பியாரூர்ர், நானும் உயிர் துறப்பேன் என்று உடைவாளை எடுத்தார். இறைவன் திருவருளால் கலிக்காமர் உயிர்பெற்று எழுந்து ஆரூரரைத் தடுத்தார். இருவரும் நண்பராயினர். பின்பு சேர மண்டலத்தில் வாழ்ந்த சேரமான் பெருமாள் நாயனார் என்பவரும் ஆரூரரின் அன்பராயினார். இருவரும் பல தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டனர்.

ஒருசமயம் ஆரூரர் திருப்புக்கொளியூர் என்னும் தலத்தை அடைந்தார். அங்கு ஒரு வீதியில் இரண்டு வீடுகளில் ஒன்றில் மங்கல ஒலியும், மற்றொன்றில் அழுகை ஒலியும் அவர் கேட்டார். அழுகை ஒலிக்குக் காரணமாகிய முதலை உண்ட பாலனை வரவழைத்துக் கொடுத்தார். ஆரூரர் பின்னர் திருவஞ்சைக் களம் என்னும் சேரநாட்டுத் தலத்தை அடைந்தார். அங்கு இறைவன் திருவருளால் தேவர்கள் அனுப்பிய வெள்ளை யானைமீது ஏறிக் கயிலைக்குச் சென்றார். செல்லும் வழியில் தம் நண்பராகிய சேரமான் பெருமானை நினைத்தார். சேரமானும் குதிரையின் மீதேறி அவருடன் திருக்கயிலையை அடைந்தார்.



பரவை நாச்சியார்பால் சிவபெருமான் தூது செல்லல்.



சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருக்கயிலைக்குச் சென்று சிவபெருமானைத் தொழுது மீண்டும் தொண்டாற்றல். உடன் குதிரையில் சேரமான் பெருமாள் நாயனார் கயிலை சேர்தல்.

தண்கயிலை யதுநீங்கி நாவலூர்வாழ் சைவனார்
சடையனார் தனயனாராய்
மண்புகழ அருட்டுறையானோலைகாட்டி மணம்விலக்க
வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய ஆரூர்மேவி நலங்கிளரும்
பரவைதோ ணயந்துவைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண்டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பினாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்லழைத்துத் திருப்புகலூர்ச்
செங்கல்செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற்றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலி தோள் சார்ந்துநாத
னொப்பிறனித் தூதுவந்தா றூடுகீறி யுறுமுதலை
சிறுமதலை யுமிழ நல்கி,
மெய்ப்பரிய களிறேறி யருளாற்சேர
வேந்தருடன் வடகயிலை மேவினாரே.

1. தில்லை வாழ் அந்தணர்

(சித்திரை - முதல்நாள்)

செப்பத் தகுபுகழ்த் தில்லைப் பதியிற் செழுமறையோர்
ஒப்பப் புவனங்கள் மூன்றினும் உம்பரின் ஊர்எரித்த
அப்பர்க்(கு) அமுதத் திருநடர்க்(கு) அந்திப் பிறையணிந்த
துப்பர்க்(கு) உரிமைத் தொழில் புரி வோர்தமைச் சொல்லுதுமே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர்கள் தில்லையில் நடராசப் பெருமானுக்கு வழிபாடு புரியும் விருப்புடன் திருக்கயிலையில் இருந்து எழுந்தருளிய சிவகணத்தவர் ஆவர். இவர்களைத் தெய்வத் தன்மை வாய்ந்த மூவாயிர வேதியர்கள்

என்று சைவ மெய்யன்பர்கள் போற்றுவர். ஞானம், தானம், மானம், பொறுமை, தவம் முதலிய எல்லா நற்குணங்களும் இவர்கள்பால் பொருந்தியிருந்தன. தில்லைவாழ் அந்தணர்களின் பெருமையைச் சேக்கிழார்,

ஞானமே முதலா நான்கும் நவையறத் தெரிந்து மிக்கார்
தானமும் தவமும் வல்லார் தகுதியின் பகுதி சார்ந்தார்
ஊனமேல் ஒன்றும் இல்லார் உலகெல்லாம் புகழ்ந்து போற்றும்
மானமும் பொறையும் தாங்கி மனையறம் புரிந்து வாழ்வார்.

என்று புகழ்ந்து போற்றியுள்ளார். சுந்தரமூர்த்தி நாயனாரும் இவர்களைப் புகழ்ந்து பாடியுள்ளார்.

திருத்தொண்டர் புராண சாரம்

நல்லவா னவர்போற்றுந் தில்லைமன்று ளாடகுஞ்செய்
பெருமானுக் கணியார் நற்பொற்
றொல்லைவான் பணியெடுத்தற் குரியார்வீடுந்
துறந்தநெறி யார் தொண்டத் தொகைமுன்பாடத்
தில்லைவா ழந்தணரென் றெடுத்துநாதன் செப்புமரு
ளுடையார் முத் தீயார்பத்திக்
கெல்லைகாண் பரியாரொப் புலகிற்றாமே
யேய்ந்துளா ரெண்மயாள வாய்ந்துளாரே.

2. திருநீலகண்ட நாயனார்

[தை - விசாகம்]

சொல்லச் சிவன்திரு வாணைதன் தூமொழி தோள்நசைஇய
ஒல்லைத் துறந்துரு மூத்ததற் பின்உமை கோன் அருளால்
வில்லைப் புரைநுத லாளோ(டு) இளமைபெற்(று) இன்பமிக்கான்
தில்லைத் திருநீல கண்டக் குயவனாம் செய்தவனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

நான் வாங்க மாட்டேன். நீயே அந்த ஓட்டைத் திருடி இருக்கிறாய். நீ அதனைக் களவு செய்யவில்லையாயின் உன் ஆசைக்குரிய மகனைப் பிடித்துக் கொண்டு குளத்தில் மூழ்கிக் கூறுக' என்றார். திருநீலகண்டர், "ஐயனே, எனக்கு மகன் இல்லையே! என் செய்வேன்" என்றார். அதனைக் கேட்ட சிவயோகியார், 'அப்படியாயின் நீ உன் மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு குளத்திலே மூழ்கி ஓட்டினைத் திருடவில்லை என்று சத்தியம் செய்' என்றார். அவ்வாறே உடன்பட்டு இருவரும் மூங்கிலின் முனைகளைப் பிடித்துக் கொண்டு திருக்குளத்தில் மூழ்கி எழுந்தனர்.

மூழ்கி எழுந்த அளவில் இருவரும் முதுமைப் பருவம் நீங்கி இளமைப் பருவம் பெற்றனர். சிவயோகியாராக வந்த சிவபெருமான் மறைந்து உமாதேவியாரோடு காட்சியளித்து அவ்விருவரையும் நோக்கி, 'நீங்கள் இருவரும் பெற்ற இந்த இளமைப் பருவம் என்றும் நீங்காதவாறு எம்மிடத்தில் இருப்பீர்களாக' என்று திருவ ப் மலர்ந்து மறைந்தார். அவ்வாறே இருவரும் சிவலோகம் அடைந்து பேரின்பப் பெருவாழ்வை எய்தினர்.

திருத்தொண்டர் புராண சாரம்

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்தராகித் தீண்டிலெமைத்
திருநீல கண்டமென்று.
சொல்லுமனை யாடனையே யன்றிமற்றுந் துடியிடையா
ரிடையின்பந் துறந்துமூத்தங்
கெல்லையிலோ டிறைவைத்து மாற்றிநாங்க ளெடுத்திலமென்
றியம்புமென விழிந்து பொய்கை
மெல்லியலா ளுடன்மூழ்கி யிளமையெய்தி விளங்குபுலீச்
சரத்தரனை மேவினாரே.

3. இயற்பகை நாயனார்

(மார்கழி - உத்திரம்)

செய்தவர் வேண்டிய(து) யாதும் கொடுப்பச் சிவன்தவனாய்க்
கைதவம் பேசிநின் காதலி யைத்தரு கென்றலுமே
மைதிகழ் கண்ணியை ஈந்தவன் வாய்ந்த பெரும்புகழ்வந்(து)
எய்திய காவிரிப் பூம்பட் டினத்துள் இயற்பகையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் வளம் பெற்ற புகார் என்று புகழப் பெறும் காவிரிப் பூம்பட்டினம் முற்காலத்தில் சோழ நாட்டுத் தலைநகராக விளங்கியது. அங்கு வணிகர் மரபில் ஒரு பெரியார் வாழ்ந்து வந்தார். அவர் அடியார்கள் எதைக் கேட்பினும் இல்லை என்று கூறாத இதயம் படைத்தவர். உலக இயல்புக்குப் பகையாக விளங்கியவர். அவர் 'இயற்பகையார்' என்று பலராலும் அழைக்கப்பட்டார்.

ஒருசமயம் சிவபெருமான் அவர் அன்பை உலகவர் அறியச் செய்ய எண்ணிக் காமுக வேதியர் உருக்கொண்டு வந்தார். அவர் இயற்பகையாரை நோக்கி, "அன்பனே! உன் காதல் மனைவியை எனக்குத் தருக" எனக் கேட்டார். இயற்பகையார், "எனக்குரிய பொருள்களெல்லாம் சிவனடியார்களுக்கே உரியனவாகும்" என்று கூறித் தன் மனைவியைத் தடையின்றிக் கொடுத்தார். வேதியர் அவர் மனைவியை அழைத்துச் செல்லும் வழியில் இயற்பகையாரின் உறவினர்கள்அவரைத் தடுத்து ஆயுதங்களால் தாக்க முயன்றனர். நாயனார், அவர்களை எல்லாம் கொன்று வேதியரைத் திருச்சாய்க்காடு என்னும் தலம் வரை வழியனுப்பினார்.

அவ்வூரை அடைந்தவுடன் வேதியர் ஏதோ பயந்தவர் போலத் தொண்டரை நோக்கி, 'இயற்பகை முனிவனே! இங்கே வா" என்று சொல்லி ஓலமிட்டார்.

"செயற்கருஞ் செய்கை செய்த தீரனே" என்று இயற்பகையாரை ஈசனார் விளித்தாராம்! என்னே! தமது காதல் மனையாளைச் சிவனடியார் ஒருவருக்கு ஈதல் செயற்கரும் செயல் அன்றோ? அவ்வாறு அருஞ்செயல் செய்த இயற்பகையார் தீரர் அல்லரோ?

ஓலமிட்டழைத்த ஓசையைக் கேட்ட இயற்பகையார், "அடியேன் இதோ வந்து விட்டேன். தங்களுக்குத் துன்பம் விளைப்பவர் இன்னும் உளராயின் அவரையும் கொன்று ஒழிக்கிறேன்" என்று ஓடி வந்தார். வேதியர் மறைந்தார். சிவபெருமான் உமாதேவியாரோடு வெள்ளைக் காளையின் மீதேறிக் காட்சி அளித்தார். இயற்பகையார் தம் மனைவியாருடனும் இறந்த சுற்றத்தினருடனும் வீடுபேற்றை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

எழிலாருங் காவிரிப்பூம் பட்டினத்து ளியல்வணிக
ரியற்பகையா ரிருவர்தேட
அழலாய பிரான்றூர்த்த மறையோனாகி ஆயிழையைத்
தரவேண்டி யணையவையன்
கழலாரப் பணிந்துமனைக் கற்பின்மேன்மைக் காதலியைக்
கொடுத்தமர்செய் கருத் தால்வந்த
பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்துமீளப் பிஞ்ஞகனார்
அழைத்தருளப் பெற்றுளாரே.

4. இளையான்குடி மாற நாயனார்

[ஆவணி - மகம்]

இயலா விடைச்சென்ற மாதவற்(கு) இன்னமு தாவிதைத்த
வயலார் முளைவித்து வாரி மனைஅலக் கால்வறுத்துச்
செயலார் பயிர்விழுத் தீங்கறி ஆக்கும் அவன்செழுநீர்க்
கயலார் இளையான் குடியுடை மாறன்எங் கற்பகமே.

– திருத்தொண்டர் திருவந்தாதி



இயற்பகை நாயனார்



இளையான்குடி மாற நாயனார்

ஈண்டிய வளமுடைய பாண்டிய நாட்டில் இளையான்குடி என்ற ஓர் ஊர் உண்டு. அவ்வூரில் நெடுநாட்களுக்கு முன்பு வேளாளர் குலத்தில் மாற நாயனார் என்னும் சிவனடியார் ஒருவர் தோன்றினார். அவர் உழுதொழிலால் மிகுந்த செல்வம் படைத்து அச்செல்வத்தைக் கொண்டு சிவனடியாரைப் பெரிதும் விரும்பி உபசரித்து வந்தார்.

அவர் தமக்கு எதிர்ப்படும் சிவனடியாரைக் கைகூப்பி எதிர் கொண்டழைத்து இன்சொல் கூறித் தம் இல்லத்திற்கு அழைத்துச் செல்வார். அங்கு அவர்தம் அடிகளைத் தூய நீரால் கழுவி உயரிய ஆசனத்தில் அமர்வித்து அவர்தம் பாதங்களைப் பூசித்து அறுசுவை உண்டிகளை வழங்குவார். இதனால் மாறனாருடைய செல்வம் பன்மடங்கு வளர்ந்து பெருகிற்று.

இத்தகைய செல்வச் சிறப்புடன் பலராலும் போற்றப்பட்ட மாறனாரின் பெருமையைச் சிவபெருமான் மக்களறியச் செய்ய விரும்பினார். அதன் விளைவாக மாறனாருடைய செல்வம் சிறிது சிறிதாகச் சுருங்கத் தொடங்கிற்று. செல்வம் சுருங்கிய பின்னும் மாறனார் மனம் சுருங்கவில்லை. அவர்தம் நிலங்களை ஒவ்வொன்றாக விற்றுத் தம்மை நாடிவரும் அடியார்களுக்கு உணவளித்துக் குறைவின்றி உபசரித்து வந்தார்.

ஒருநாள் அவ்வூரில் காலையில் தொடங்கிய மழை விடாமல் பெய்து கொண்டிருந்தது. அன்று மாறனார் வீட்டில் உணவுப் பொருள் ஏதும் இல்லையாதலின் தம்முடைய கடும் பசியைத் தாங்கிக் கொண்டு தெருக் கதவைத் தாளிட்டுப் படுத்துறங்கலானார்.

நள்ளிரவில் தெருக் கதவை யாரோ தட்டும் ஓசை கேட்டுப் படுக்கையில் இருந்த நாயனார் எழுந்து வந்து கதவைத் திறந்தார். அப்போது வாயிற்படியில் மழை நீரால் நனைந்து குளிரால் நடுங்கிக் கொண்டிருந்த பெரியார் ஒருவரைக் கண்ட நாயனார், அவரை வீட்டினுள் அழைத்துச் சென்று அவருடைய உடலைத் துடைத்து வெண்மையான ஆடைகளை உடுக்கச் செய்து இருக்கையும் தந்தார்.

பின்னர் தம் மனைவியிடம் சென்று, "இப்பெரியார் பெரிதும் பசியுடன் இருக்கிறார். என் செய்வோம்?" என்றார். அதுகேட்ட அவர்தம் மனைவியார், "இன்று காலை நாற்றங்காலில் தூவிய முளை நெல்லை வாரிக்கொண்டு வந்தால் அதை முடிந்தவரை பக்குவப்படுத்திச் சோறு சமைக்கலாம்" என்றார். மாறனாரும் அந்நள்ளிரவில் தட்டுத் தடுமாறித் தம் நாற்றங்காலை அடைந்து அதில் படிந்திருந்த முளை நெல்லைச் சேற்றோடும் வாரிக் கூடையில் போட்டு தம் தலைமேல் தூக்கி வந்து தம் மனைவியிடம் கொடுத்தார். அவ்வம்மையாரும் மனமகிழ்வுடன் அதனைக் கழுவி வறுத்து அரிசியாக்கிச் சோறு சமைத்தார். இதற்குள் மாறனார் தம் வீட்டுப் புறத்தில் முளைத்திருந்த பலவிதமான கீரைகளைப் பிடுங்கிக் கழுவி ஆய்ந்து இன்சுவைக் கறியாக்கி வைத்தார். பின்னர் இளைப்புற்றிருந்த விருந்தினரை அமுது உண்ண அழைப்பதற்காக அவர் இருப்பிடத்தை அடைந்தார்.

அச்சமயம், அப்பெரியார் சோதி வடிவாய் மேலெழுந்து தோன்றி நின்றதைக் கண்ட மாறனாரும், அவர் தம் மனைவியாரும் திகைத்து நின்றனர். உடனே சிவபெருமான் தம் அடியவர்களுக்கெல்லாம் அன்புடன் உணவளித்த அவ்வடியார்முன் உமையம்மையாரோடும் விடைமீதிருந்து வானவீதியில் காட்சியளித்து, "அன்பனே, அடியார்க்குக் குறைவின்றி உண்டி வழங்கி உபசரித்த நீ நின் மனையாளுடன் சிவபதம் அடைந்து அங்குக் குபேரனும் நின் ஏவல் கேட்டு நிற்க இன்ப வாழ்வு பெறுவாய்" என்று திருவாய் மலர்ந்தருளி மறைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

மன்னியவே ளாண்டொன்மை யிளசைமாறர் வறுமையா
லுணவுமிக மறந்து வைகி
உன்னருநள் ளிருண்மழையி லுண்டிவேண்டி யும்பர்பிரா
னணையவய லுழுதுவித்துஞ்
செந்நெல்முளை யமுதுமனை யலக்காலாக்கிச்
சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து
பன்னலரு முணவருந்தற் கெழுந்தசோதிப்
பரலோக முழுதாண்ட பான்மையாரே.

5. மெய்ப்பொருள் நாயனார்

[கார்த்திகை - உத்திரம்]

கற்றநன் மெய்த்தவன் போல்ஒரு பொய்த்தவன் காய்சினத்தால்
செற்றவன் தன்னை அவனைச் செறப்புக லும்திருவாய்
மற்றவன் 'தத்தா நமரே' எனச்சொல்லி வான்உலகம்
பெற்றவன் சேதிபன் மெய்ப்பொரு ளாம் என்று பேசுவரே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சேதி நாட்டின் தலைநகரம் திருக்கோவலூர் என்னும் சிறந்த பகுதியாம். அதனை மெய்ப்பொருள் நாயனார் என்பவர் ஆண்டு வந்தார். சிவபெருமானுடைய அடியார்களின் திருவேடத்தை அவர் மெய்ப்பொருளாகக் கருதி வந்தமையால் அவருக்கு அப்பெயர் வந்தது.

அடியார்கள் வேண்டிய பொருள்களையெல்லாம் மனமுவந்து அளித்துப் பேரும் புகழும் பெருவாழ்வும் பெ்று வாழ்ந்த நாயனார் மீது முத்தநாதன் என்னும் ஓர் அரசன் பகைமை கொண்டு பல முறையும் எதிர்த்துத் தோல்வியுற்றான். பின்னர் அவரை வஞ்சனையால் வெல்ல எண்ணி சிவனடியார் வேடம் கொண்டு உடைவாளைப் புத்தகக் கவளி ஒன்றில் வைத்து எடுத்துக் கொண்டு மெய்ப்பொருள் நாயனாரை அடைந்தான். இவ்வாறு வஞ்ச நெஞ்சுடன் முத்தநாதன் வந்து சேர்ந்த பான்மையைச் சேக்கிழார்,

மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டி
கையினில் படைக ரந்த புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடம் கொண்டு புகுந்தனன் முத்த நாதன்.

என்று பாடியுள்ளார்.

நாயனார் அவனை உபசரித்து, "தேவரீர் ஈங்கு எழுந்தருளி உள்ள காரணம் யாது?" என்று கேட்டார். அதற்கு முத்தநாதன்

"சிவபெருமான் அருளிய ஆகம நூல் ஒன்றை உமக்குப் போதிப்பதற்கு வந்துள்ளேன்" என்றான். நாயனார் அவன் சொல்லை உண்மை என்று நம்பி வணங்கி நின்றார். அதுதான் தக்க சமயம் என்று நினைத்து முத்தநாதன் முன்னே தான் நினைத்த அச்செயலைச் செய்து முடித்தான். அப்போதும் மெய்ப்பொருள் நாயனார், "மெய்த்தவ வேடமே மெய்ப்பொருள்" என்று எண்ணி அவ்வஞ்சகனை வணங்கினார். மெய்ப்பொருள் நாயனாரை வீழ்த்த எண்ணி வந்தான் முத்தநாதன். தனது வஞ்ச நெஞ்சத்தில் தீட்டியிருந்த திட்டப்படியே அவன் நாயனாரை வெட்டி வீழ்த்தி விட்டான்.

முத்தநாதன் செய்த கொடுமையைக் கண்ட தத்தன் என்னும் காவலன் அவனைக் கொலை புரிய முயன்றான். இரத்தம் பெருகிக் கீழே விழுகின்ற நாயனார் தம் கைகளை நீட்டி, "தத்தா, அவர் நம்மவர், அவரை ஒன்றும் செய்யாதே" என்று தடுத்து விழுந்தார். தத்தன் அவரைத் தாங்கிக் கொண்டு, 'அரசே! யான் யாது செய்தல் வேண்டும்?' என்று கேட்டுக் கொண்டான். நாயனார் தம்மை வாளால் குத்திய முத்தநாதனை யாரும் தடை செய்யாதவாறு காவல் புரிந்து நகர் எல்லையைக் கடந்து விட்டுவிட வேண்டும்" என்றார். அவனும் அங்ஙனமே செய்தான்.

பின்னர் நாயனார், இளவரசர், அமைச்சர், மனைவியார், உறவினர் ஆகியோரை அழைத்து, "நீங்கள் எல்லோரும் திருநீற்றில் கொண்டுள்ள அன்பைப் பாதுகாத்து அதனை உலகில் பரப்புங்கள்" என்று கூறி இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

நாயனாரை வீழ்த்தியவன் முத்தநாதன். ஆனால் வெற்றி யாருக்கு? முத்தநாதனுக்கு அன்று. வெற்றி பெற்றவர் மெய்ப்பொருள் நாயனாரே ஆவார். துன்பம் செய்தவர்களுக்கு இன்பம் செய்வதுதான் தண்டிக்கும் வழியாகும் என்று வள்ளுவர் கூறியபடி வெற்றி பெற்றவர் மெய்ப்பொருள் நாயனாரே என்னும் உண்மையைச் சுந்தரரும் தம் திருத்தொண்டத் தொகையுள், "வெல்லுமா மிகவல்ல மெய்ப்

பொருளுக்கு அடியேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

திருத்தொண்டர் புராண சாரம்

சேதிபர்நற் கோவலூர் மலாடமன்னர் திருவேட
மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை
நீதியினாரு டன்பொருது தோற்றமாற்றா னெடுஞ்சினமுங்
கொடும்படை நிகழாவண்ண
மாதவர்போ லொருமுறைகொண் டணுகிவாளால்
வன்மைபுரிந் திடம ருண்டு வந்ததத்தன்
காதலுற நமர்தத்தா வென்றுநோக்கிக் கடிதகல்வித்
திறைவனடி கைக்கொண்டாரே.

6. விறன்மிண்ட நாயனார்

[சித்திரை - திருவாதிரை]

பேசும் பெருமையவ் ஆரூ ரனையும் ரானவனாம்
ஈசன் தனையும் புறகுதட் டென்றவன் ஈசனுக்கே
நேசன் எனக்கும்பிரான்மனைக் கேபுக நீடுதென்றல்
வீசும் பொழில்திருச் செங்குன்றம் மேய விறன்மிண்டனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

நிலவளமும் கடல் வளமும் மலைவளமும் மிகுந்த மலையாள நாட்டில் செங்குன்றூர் என்னும் பழைய நகரம் ஒன்று உண்டு. இங்குள்ள வேளாள மரபில் விறன்மிண்ட நாயனார் தோன்றினார்.

ஒருசமயம் அவர் சிவத்தலங்களை எல்லாம் வழிபட்டு, திருவாரூரை அடைந்தார். ஒருநாள் அங்குள்ள தேவாசிரிய மண்டபத்தில் வீற்றிருந்த சிவனடியார்களைச் சுந்தரமூர்த்தி நாயனார் வணங்காமல் செல்வதைக் கண்டு சினம் கொண்ட விறன்மிண்டர், "அடியார்களை வணங்காமல் சென்ற சுந்தரரும் அவரை ஆட்கொண்ட சிவபெருமானும் புறகு (புறம்பானவர்)" என்று கூறி ஏனைய



மெய்ப்பொருள் நாயனார்



விறன்மிண்ட நாயனார்

அடியார்களின் அருளைப் பெற்றார். சுந்தரர் விறன்மிண்டரின் அடியார் பக்தியைக் கண்டு திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடித் திருக்கூட்டத்தை வழிபட்டார். சிவபெருமான் விறன்மிண்டருக்குத் தம் சிவகணத்தவராகும் நிலைமையை அருளினார். சுந்தரரைத் திருத்தொண்டத் தொகை பாடுமாறு செய்த விறன்மிண்ட நாயனாரின் பெருமைதான் என்னே!

திருத்தொண்டர் புராண சாரம்

விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண்டொன்மை
விறன்மிண்டர் திருவாரூர் மேவுநாளில்
வளங்குலவு தொண்டரடி வணங்காதேகும் வன்றொண்டன்
புறகவனை வலிய வாண்ட
துளங்குசடை முடியோனும் புறகென்றன்பாற் சொல்லுதலும்
அவர்தொண்டத் தொகைமுன்பாட
உளங்குளிர வுளதென்றா ரதனாலண்ண லுவகைதர
உயர்கணத்துள் ஓங்கினாரே.

7. அமர்நீதி நாயனார்

(ஆனி - பூரம்)

மிண்டும் பொழில்பழை யாறை அமர்நீதி வெண்பொடியின்
முண்டம் தரித்த பிராற்குநல் லூரின்முன் கோவணம்நேர்
கொண்டிங்கருளென்றுதன்பெருஞ் செல்வமும் தன்னையும்தன்
துண்ட மதிநுத லாளையும் ஈந்த தொழிலினனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

காவிரி வளம் பெருகும் சோழ நாட்டில் பழையாறை என்னும் பழம்பதி ஒன்று உண்டு. அங்கு வணிகர் குலத்தில் அமர்நீதி நாயனார் என்னும் அடியார் ஒருவர் அவதரித்தார். அவர் பொன், முத்து, இரத்தினம், ஆடை முதலிய பொருள்களை விற்றுக் குன்றுபோல்

பெருநிதி சேர்த்துக் குபேரனைப் போல் பெருவாழ்வு வாழ்ந்தார். அவர் எப்போதும் சிவனடியார்களையே ஆதரிக்கும் திருவுள்ளம் படைத்தவர். அவரவர் குறிப்புணர்ந்து போர்வையும் அரைஞாணும் கோவணமும் அளித்து வந்தார்.

அமர்நீதி நாயனார் அடியார்கள் பொருட்டுத் திருநல்லூரில் மடம் ஒன்று கட்டினார். அம்மடத்தில் சிவனடியார்களுக்கு அமுதளித்தல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்து வந்தார். சிவபெருமான் அவருடைய அன்பை உலகறியச் செய்யும் பொருட்டு ஒரு பிரமசாரி வேடம் பூண்டு திருமடத்தை அடைந்தார்.

அமர்நீதி நாயனார் அவரை முகமலர்ந்து வரவேற்று அகமலர்ந்து இன்சொல் கூறி உபசரித்தார். பிரமசாரி தாம் கொண்டு வந்த கோவணத்தை அவரிடம் தந்து, "இதன் பெருமை அளவில்லாதது. இதனைப் பத்திரப்படுத்தி வைப்பாயாக" என்று கூறி நீராடச் சென்றார்.

அமர்நீதியார் பத்திரப்படுத்தி வைத்த கோவணம் சிவபெருமான் மாயையால் மறைந்தது. பிரமசாரி நீராடி மழையில் நனைந்து வந்து அமர்நீதியாரிடம் கொடுத்து விட்டுப்போன கோவணத்தைத் திரும்பக் கேட்டார். அமர்நீதியார் அதைக் காணாமல் "வேறு ஒன்று தருகிறேன்" என்றார். பிரமசாரி கோபம் கொண்டு, "நான் முன் கொடுத்த கோவணத்தை ஒத்த மற்றொரு கோவணம் என்னிடம் உள்ளது. அதன் எடையுள்ள கோவணம் நின்பால் உளதாயின் கொடுத்துவிடுக" என்றார். நாயனார் தம்மிடமிருந்த புதிய கோவணம் ஒன்றை நிறையிட்டார். அது சரி வரவில்லை. தம்மிடம் இருந்த உடைகளையும் பொருள்களையும் ஏனைச் செல்வங்களையும் வைத்தார். அப்போதும் அப்பிரமசாரியின் கோவணத்திற்கு எடை சரியாகவில்லை. முடிவில் நாயனார் தாமும் தம் மனைவியாரும் மகனுமாக ஐந்தெழுத்தை முறைப்படி ஓதிக் கொண்டே தராசுத் தட்டில் ஏறி நின்றார். துலாக் கோலின் இரண்டு தட்டுகளும் சமமாக நின்றன. அனைவரும் வியந்தனர். அமரர்கள் மலர்மாரி பொழிந்தனர். நாயனாரும் அவர்தம் துணைவியாரும் மகனும்

தராசே தெய்வ விமானமாக மாறச் சிவலோகம் அடைந்து இன்புற்று இருந்தனர்.

திருத்தொண்டர் புராண சாரம்

பழையாறை வணிகரமர் நீதியார்பாற் பரவுசிறு
முனிவடிவாய்ப் பயிலு நல்லூர்க்
குழைகாதர் வந்தொருகோ வணத்தைவைத்துக்
கொடுத்ததனை யெடுத்தொளித்துக் குளித்துவந்து
தொழிலாரு மதுவேண்டி வெகுண்டுநீரித் துலையிலிடுங்
கோவணநேர் தூக்குமென்ன
எழிலாரும் பொன்மனைவி யிளஞ்சேயேற்றி
ஏறினர்வா னுலகு தொழ ஏறினாரே.

8. எறிபத்த நாயனார்


(மாசி - அஸ்தம்)

ஊர்மதில் மூன்றட்ட வுத்தமற்கு என்று ஒருயர் தவத்தோன்
தார்மலர் கொய்யா வருபவன் தண்டின் மலர்பறித்த
ஊர்மலை மேற்கொள்ளும் பாகர் உடல்துணி யாக்குமவன்
ஏர்மலி மாமதில் சூழ்கரு வூரில் எறிபத்தனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

அநபாய சோழன் மரபில் தோன்றிய மன்னர்கள் கருவூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தனர். அந்நகரில் தேவரும் போற்றும் பெருமை வாய்ந்த ஆனிலை என்னும் திருக்கோயிலில் சிவபெருமானை நீங்காத அன்புடன் எறிபத்த நாயனார் எனும் அடியார் வழிபட்டு வந்தார். அவர் சிவனடியார்க்கு நேரும் துன்பங்களைத் துடைப்பதற்காகக் கையில் மழுவாயுதம் தாங்கி நின்றார். அதனால் அடியார்தம் பகைவர்களைக் கொன்று சைவத்தை வளர்த்து வந்தார்.

இவ்வாறிருக்கையில், அத் திருக்கோயிலில் சிவகாமியாண்டார்



அமர்நீதி நாயனார்



எறிபத்த நாயனார்

என்னும் தொண்டர், நாள்தோறும் மலர் பறித்து மாலைகள் தொடுத்துப் பெருமானுக்குச் சாத்திப் பக்தியுடன் பரமனை வழிபட்டு வந்தார். ஒருநாள் வழக்கம்போல் மலர் பறித்துத் திருக்கோயிலுக்கு வந்து கொண்டிருந்தார். அவ்வமயம் புகழ்ச்சோழ மன்னனது பட்டத்து யானை நீராடி மதங்கொண்டு தெரு வழியே வந்தது. சிவனடியாரைக் கண்ட யானை அவரைத் தொடர்ந்து சென்று அவர் கூடையைப் பறித்து மலர்களைக் கீழே சிந்தியது. அது கண்ட சிவகாமியாண்டார், யானையைத் தடுக்க முயன்று கீழே விழுந்து, 'சிவதா சிவதா' என்று அரற்றினார். அடியார் கூறிய துயர மொழிகளைக் கேட்ட எறிபத்தர், அவர்க்குத் தீங்கு செய்த யானையின் துதிக்கையைத் தம் மழுவால் வெட்டி வீழ்த்தினார். வெட்டுண்ட யானை கடலெனக் கதறியது. குத்துக் கோல்காரரும், பாகரும் அவரை எதிர்க்கவே அவர்களையும் நாயனார் கொன்றொழித்தார்.

உயிர் தப்பிய பாகரில் சிலர் ஓடிச் சென்று அரண்மனை வாயிற் காவலருக்குச் செய்தியைக் கூற, அவர் நிகழ்ந்ததைப் புகழ்ச் சோழரிடம் முறையிட்டனர். அடங்காச் சினம் கொண்ட அரசன் யானையும் பாகரும் இறந்து கிடந்த இடத்திற்கு விரைந்து வந்தான். அங்குப் பகைவர் எவரையும் காணவில்லை. எறிபத்த நாயனார் இருகை வேழம் போல் தன் ஒரு கையில் மழுவேந்தி நிற்பதைக் கண்டான். சிவக்கோலந் தாங்கிய அவர் அத்தீமையைப் புரிந்திரார் எனக் கருதிய மன்னன், இத்தீவினையைப் புரிந்தவர் யார்? என்று வினவினன். அருகிலிருந்த பாகர் எறிபத்த நாயனாரைக் காட்டினர். அடியாரைக் கண்ட அரசன் யானை தவறு செய்திராவிட்டால் நாயனார் அதனைக் கொன்றிரார் என்று துணிந்தான். நாயனாரிடம் சென்று, 'இவ்யானை செய்த குற்றத்திற்கு இதனைக் கொன்றது மட்டும் போதுமோ! அருள வேண்டும்' என்று வேண்டினன்.

அதுகேட்ட எறிபத்த நாயனார் யானையையும் பாகரையும் கொன்ற காரணத்தை அறிவித்தார். அச்சொற்களைக் கேட்டு மன்னன்

பேரச்சங் கொண்டு சிவனடியார்க்கு நேர்ந்த இக்குற்றத்திற்குத் தன்னையும் கொல்ல வேண்டுமென்று தன் உடைவாளை எறிபத்த நாயனாரிடம் நீட்டினான். வேந்தனின் பேரன்பைக் கண்ட எறிபத்தர் அவ்வாளை வாங்கிக் கொள்ளாவிட்டால் தானே தன் உயிரை அவன் மாய்த்துக் கொள்ளவும் கூடும் எனக் கருதி அவ்வாளை வாங்கிக் கொண்டனர். மன்னர் நாயனாரைப் பணிந்து தன் பிழை நீங்கத் தன்னைக் கொல்லுமாறு கூறினார். ஆனால் எறிபத்தரோ அவ்வாளால் தம்மையே வெட்டப் புகுந்தார். அது கண்ட அரசன் மனம் பதறி அவர் கையைப் பற்றித் தடுத்தனன். அவ்வமயம், இறைவன் அருளால், "அன்புடையீர்! உங்கள் சிவத்தொண்டின் பெருமையை உலகோர் அறியுமாறு செய்யவே மத யானையை மலர்களைச் சிதறுமாறு செய்தோம்" என்ற சொற்கள் வானத்தில் எழுந்தன. இறந்த யானையுடன் பாகரும் உயிர் பெற்றெழுந்தனர்.

திருத்தொண்டர் புராண சாரம்

திருமருவு கருவூரா னிலையார்சாத்துஞ் சிவகாமி
யார்மலரைச் சிந்தயானை
அரனெறியோ ரெறிபத்தர் பாகரோடு மறவெறிய
என்னுயிரு மகற்றீரென்று
புரவலனார் கொடுத்தபடை அன்பால் வாங்கிப்
புரிந்தரிவான் புகவெழுந்த புனிதவாக்காற்
கரியினுடன் விழுந்தாரு மெழுந்தார்தாமுங்
கணநாத ரதுகாவல் கைக்கொண்டாரே.

9. ஏனாதி நாத நாயனார்

[புரட்டாசி - உத்திராடம்]

பத்தனை ஏனாதி நாதனைப் பார்நீ(டு) எயினைதன்னுள்
அத்தனைத் தன்னோ(டு) அமர்மலைந் தான்நெற்றி நீறுகண்டு

கைத்தனி வாள்வீ(டு) ஒழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
நித்தனை ஈழக் குலதீபன் என்பர்இந் நீணிலத்தே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழவள நாட்டில் எயினனூர் என்னும் தலத்தில் ஈழக்குலச் சான்றோர் குலத்தில் ஏனாதிநாத நாயனார் என்னும் பெரியோர் தோன்றினார். அவர் அரசர்க்கு வாட்படை பயிற்றி அதனால் வரும் பொருளைக் கொண்டு சிவனடியார்களை ஆதரித்து வந்தார்.

ஏனாதிநாதருக்குத் தொழில் உரிமைத் தாயபாகம் பூண்ட அதிசூரன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் ஏனாதிநாதரிடம் பகைமை பூண்டு அவரைப் போர் செய்து வெல்வது அரிது என்று உணர்ந்து வஞ்சனையால் வெல்ல வேண்டுமென்று எண்ணினான். அவன் அவருடன் சண்டை செய்யப் புறப்பட்டான். நெற்றியில் திருநீறு அணிந்து அதனைக் கையிலுள்ள கேடயத்தால் மறைத்துக் கொண்டு நாயனாருக்கு முன்னே நின்றான். இருவரும் போரிடத் தொடங்கினர். நாயனார் அதிசூரனைக் கொல்லும் சமயத்தில அவன் தன் நெற்றியை மறைத்துக் கொண்டிருந்த கேடயத்தைப் புறத்தே எடுத்தான். திருவெண்ணீற்றின் பொலிவைக் கண்ட நாயனார் திடுக்கிட்டு, "ஆ! கெட்டேன்! இதற்குமுன் ஒருபொழுதும் இவர் நெற்றியில் காணாத திருவெண்ணீற்றின் பொலிவை இப்போது கண்டேன். இனி வேறு என்ன நினைக்க வேண்டும்? இவர் சிவபெருமானின் சீரடியாரே! இனி அடியேன் இவர்தம் கருத்தின் வழியே நிற்பேன்" என்று கேடயத்தையும் வாளையும் கீழே போடக் கருதினார்.

'நிராயுதரைக் கொன்றார் என்னும் பழி இவருக்கு உண்டாகாது இருக்க வேண்டும்' என்று எண்ணி வாளையும் கேடயத்தையும் தாங்கி எதிர்த்துப் போர் செய்பவரைப் போன்று அதிசூரன் முன்னே நின்றார். அதிசூரன் உடனே தன் கருத்தை நிறைவேற்றிக் கொண்டான்.

சிவபெருமான் ஏனாதிநாதரின் பேரன்பைப் பாராட்டி, தம்மைப்

பிரியாதிருக்கும் பெருவாழ்வை அளித்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

ஈழக் குலச்சான்றா ரெயினனூர்வாழ் ஏனாதி
நாதனா ரிறைவனீற்றைத்
தாழத் தொழுமரபார் படைகளாற்றுந்
தன்மைபெறா வதிசூரன் சமரிற்றோற்று
வாழத் திருநீறு சாத்தக்கண்டு மருண்டார்
தெருண்டார்கை வாள்விடார்நேர்
வீழக் களிப்பார்போ னின்றேயாக்கை விடுவித்துச்
சிவனருளே மேவினாரே.

10. கண்ணப்ப நாயனார்

[தை - மிருகசீரிஷம்]

நிலத்தில் திகழ்திருக் காளத்தி யார்திரு நெற்றியின்மேல்
நலத்தில் பொழிதரு கண்ணிற் குருதிகண் டுள்நடுங்கி
வலத்தில் கடுங்கணை யால்தன் மலர்க்கண் இடந்தப்பினான்
குலத்தில் கிராதன்நம் கண்ணப்ப னாம்என்று கூறுவரே..

— திருத்தொண்டர் திருவந்தாதி

பொத்தப்பி நாட்டில் உடுப்பூர் என்னும் பழம்பதியில் நாகன் என்னும் வேடர் தலைவன் ஒருவன் இருந்தான் அவன் குற்றமே குணமாக நினைப்பவன். கொலைத் தொழிலே தலைத் தொழிலாகக் கொண்டவன். அவன் மனைவி தத்..தை என்பவள். அவர்களுக்கு நெடுநாட்களாக மகப்பேறு இல்லாமல் முருகன் திருவருளால் திண்ணன் என்னும் ஒரு மைந்தன் பிறந்தான்.

திண்ணன் வளர்பிறைபோல வளர்ந்து அறிவும் ஆற்றலும் நிறைந்து வில் தொழிலில் வல்லவனாக விளங்கினான். ஒருநாள் தன்

நண்பர்கள் காடன், நாணன் ஆகியவர்களுடன் கூடி முதன்முதலாக வேட்டைக்குப் புறப்பட்டான். அவர்களுடன் ஒரு பன்றியைத் தொடர்ந்து சென்று கொன்றான். அதனால் களைப்படைந்து தாகத்திற்கு நீர் கேட்டான். அந்த நண்பர்கள் அருகில் பொன்முகிலி ஆற்றுக்கு அவனை அழைத்துச் சென்றனர். பன்றியையும் ஆற்றங்கரைக்கு எடுத்துச் சென்றனர்.

திண்ணனார் அருகிலிருந்த திருக்காளத்தி மலையைக் கண்டு காடனைப் பார்த்து, 'நீ பன்றியைப் பதம் செய்வாயாக' என்று கூறித் தாமும் நாணனும் மலைமேல் ஏறிச் சென்றனர். காளத்தி மலையில் கோயில் கொண்டுள்ள குடுமித் தேவர் என்னும் திருக்காளத்தியப்பரைத் திண்ணனார் கண்டு அனலிலிட்ட மெழுகைப் போல் மனமுருகினார். பின்பு சேயை விட்டுப் பிரியாத தாயைப்போல இறைவனுடன் கொஞ்சிக் குலாவினார். தம் உடன் வந்த நாணனை நோக்கி, "இந்தத் தேவருக்கு இந்தப் பச்சிலையும் மலரும் சாத்தியவர் யாரோ?" என்று கேட்டார். நாணன் திண்ணனாரை நோக்கி, 'நானும் உன் தந்தையாரும் சில நாட்களுக்கு முன் இம்மலைக்கு வந்தோம். அச்சமயத்தில் ஓர் அந்தணர் இவரை நீராட்டி மலர் சூட்டி உணவூட்டுவதைக் கண்டேன்' என்றான்.

திண்ணனார் அதுகேட்டு, "நம் குடுமித் தேவருக்கு இவை பெரிதும் விருப்பமானவை போலும்! நானும் அவ்வாறே செய்வேன்" என்று எண்ணியவாறு காடன் இருக்குமிடத்தை அடைந்தார். அங்கு அவன் பதமாகச் செய்து வைத்திருந்த பன்றி இறைச்சியைச் சுவைத்துப் பார்த்து, சுவையானவைகளைத் தேக்கிலைகளாலான ஒரு தொன்னையில் எடுத்துக் கொண்டு, பொன்முகிலி ஆற்றின் நீரை வாயில் முகந்து, மலர்களைப் பறித்துத் தம் தலையில் வைத்துக் கொண்டு குடுமித் தேவர் மலைக்குத் திரும்பிச் சென்றார்.

திண்ணனாரின் செயல்களை அறிந்த நண்பர்கள் அவரை ஊருக்குத் திரும்புமாறு வலிந்து அழைத்தார்கள். திண்ணனார் அவர்களுடைய அழைப்புக்குச் செவி சாய்க்கவில்லை. அவர்கள் இவன்

அதிக மயக்கம் கொண்டுள்ளான் என்று எண்ணித் தந்தை தாயாருக்குத் தெரிவிப்பதற்காகச் சென்றனர். திண்ணனார், அவர்கள் சென்றதையும் அறியாமல் எம்பெருமானுக்கு அமுதூட்டச் சென்றார்.

திண்ணனார் குடுமித் தேவரைத் திருமஞ்சனமாட்டக் கருதிப் பொன்முகிலி ஆற்றிலிருந்து வாயில் கொண்டுவந்த நீரைத் தம் அன்பினை உமிழ்பவர் போல அத்தேவரின் திருமுடி மேல் கொட்டினார். மலர்களைச் சாத்தினார். தொன்னையில் கொண்டு வந்த இறைச்சிகளைப் படைத்து அவற்றைத் திருவமுது செய்யுமாறு இறைவனுக்கு ஊட்டினார். பின்னர் மேலும் எம்பெருமானுக்கு இறைச்சி வேண்டுமென்று எண்ணினார். அதற்குள் சூரியன் மறைந்தான். காரிருள் வந்தது. இரவு முழுவதும் தேவருக்கு வனவிலங்குகளால் துன்பம் நேருமோ என்று அஞ்சிக் கண்விழித்துக் காவல் புரிந்தார். பொழுது விடிந்த பின்னரே இறைச்சி தேட வெளிச் சென்றார்.

திருக்காளத்தி நாதருக்கு நாடோறும் வழிபாடு செய்யும் சிவகோசரியார் இறைவன் திருமுன்னே இறைச்சிகளும் எலும்புத் துண்டுகளும் சிந்திக் கிடப்பதைக் கண்டு மனம் வருந்தி அவற்றை அப்புறப்படுத்தித் தூய்மை செய்தார். தாம் வழக்கப்படி செய்ய வேண்டிய வழிபாடுகளைச் செய்துவிட்டுத் தம் இருப்பிடத்துக்குத் திரும்பினார். மறுநாளும் முன்போலவே இருப்பதைக் கண்டு மனம் நொந்தார். இறைவனிடம் முறையிட்டுப் புலம்பினார். அன்றிரவு சிவபெருமான் சிவகோசரியாரின் கனவில் தோன்றி, 'அன்பனே, நீ அவனை வேடன் என்று நினைக்க வேண்டாம். அவன் நம்மிடம் செலுத்தும் பேரன்பை நாளைக்குக் காட்டுவோம. நம்மிடத்தில் வந்து நீ மறைந்திருந்து காணலாம்' என்று கூறினார்.

வேதியர் விழித்தெழுந்தார். மனம் வருந்தினார். மறுநாள் தம் வழிபாடு முடிந்தபின் இறைவன் கட்டளைப்படியே மறைந்து நின்று பார்த்திருந்தார். திண்ணனார் சிவபெருமானுக்கு வேண்டிய இறைச்சி முதலியவைகளைத் திரட்டிக் கொண்டு வழிபாட்டுக்குத் திரும்பினார்,



ஏனாதிநாத நாயனார்



கண்ணப்ப நாயனார்

சிவபெருமான் அவரது பேரன்பைச் சிவகோசரியாருக்கு அறிவிக்க நினைத்துத் தம் வலக்கண்ணில் இரத்தம் சிந்துமாறு செய்தனர். அது கண்ட திண்ணனார் பதைபதைத்தார். மதி மயங்கினார். கீழே விழுந்தார். ஒன்றும் தோன்றாமல் பெருமூச்சு விட்டார். எம்பெருமானுக்கு இத்தகைய துன்பத்தைச் செய்தவர்கள் யார்? என எழுந்தார். வில்லில் அம்பைப் பூட்டி நெடுந்தூரம் அலைந்து திரிந்து மீண்டும் இறைவனிடம் வந்தார். பல பச்சிலைகளைக் கண்ணில் பிழிந்தார். அப்போதும் இரத்தம் நிற்கவில்லை. திண்ணனார் இனி என்ன செய்வது? என்று திகைத்து, 'ஊனுக்கு ஊனே உற்ற நோய் தீர்ப்பது' என்று எண்ணித் தம் வலக்கண்ணை அம்பினால் தோண்டி எடுத்துக் காளத்தி நாதரின் கண்ணில் அப்பினார். இரத்தம் நின்றது. அதுகண்டு அவர் இன்பக் கடலில் திளைத்தார். தோள்களைத் தட்டிக் கொண்டு ஆடினார். பாடினார்.

இந்நிலையில் சிவபெருமான் மீண்டும் தம் இடக்கண்ணில் இரத்தம் சோரவிட்டார். திண்ணனார் சிறிதும் மனந்தளராதவராய், "தக்க மருந்து என்பால் உள்ளது" என்று மகிழ்ச்சியுடன் இரத்தம் ஒழுகும் கண் தமக்குத் தெரியுமாறு தமது செருப்புக் காலைக் கடவுளின் திருக்கண்ணின் அருகில் ஊன்றிக் கொண்டு, ஓர் அம்பினால் தமது இடக்கண்ணைத் தோண்ட முயன்றார். உடனே காளத்தி நாதர் தம் திருக்கையை வெளியே நீட்டி, அன்பினால் தன் இடக்கண்ணைத் தோண்டுகின்ற திண்ணனாரைத் தடுத்து, 'நில்லு கண்ணப்ப! நில்லு கண்ணப்ப! என் அன்புடைத் தோன்றல் நில்லு கண்ணப்ப! என்று திருவாய் மலர்ந்து, திண்ணனாரின் கையைத் தடுத்து நிறுத்தினார். பின்னர் அவரைத் தம் வலப்புறம் இருக்கும் பேற்றை ஈசனார் அளித்தார். திண்ணனார் ஆறு நாட்களில் பிறவாப் பெரும் பேற்றை அடைந்தார். அன்று முதல் திண்ணனாருக்குக் கண்ணப்பர் என்ற பெயரே வழங்குவதாயிற்று.

வேடரதி பதிஉடுப்பூர் வேந்தனாகன் விளங்கியசேய்
திண்ணனார் கன்னிவேட் டைக்
காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதருமலருங் காய்ச்சினமென்
றிடுதசையுங் காளத்தியார்க்குத்
தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச் சீறுசிவ
கோசரியுந் தெளியவிழிப் புண்ணீ
ரோடவொரு கண்ணப்பி ஒருகண்ணப்ப
வொழிகவெனு மருள்கொடுஅரு குறநின்றாரே.

11. குங்கிலியக் கலய நாயனார்

[ஆவணி - மூலம்]

ஏய்ந்த கயிறுதன் கண்டத்திற் பூட்டி எழிற்பனந்தாள்
சாய்ந்த சிவன்நிலைத் தான்என்பர் காதலி தாலிகொடுத்(து)
ஆய்ந்தநற் குங்குலி யங்கொண்(டு) ஊ...ற்புகை காலனைமுன்
காய்ந்த அரற்(கு) இட்ட தென்கட வூரில் கலயனையே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வளநாட்டில் திருக்கடவூர் என்னும் திருத்தலம் ஒன்று உண்டு. அங்கு வேதியர் குலத்தில் குங்கிலியக் கலயனார் என்பவர் தோன்றினார். அவர் காலனைக் காலால் உதைத்து மார்க்கண்டேயனுக்கு அருள் புரிந்த, அமிர்த கடேசராகிய சிவபெருமானுக்கு நாடோறும் குங்கிலியத் தூபம் இடும் திருத்தொண்டில் ஈடுபட்டு வந்தார். ஆதலால், அவரை எல்லோரும் குங்கிலியக் கலயர் என்று அழைத்தனர்.

நாயனார் தெய்வச் செயலால் வறுமை அடைந்தார். ஒருநாள் நாயனாரின் மனைவியார், மக்களும் சுற்றமும் பசியால் வருந்துவது கண்டு தமது தாலியைக் கழற்றி நாயனாரிடம் கொடுத்து அரிசி முதலியன வாங்கி வருமாறு அனுப்பினார். நாயனார் தெருவில் செல்லும் போது வழியில் ஒரு வணிகர் குங்கிலியப் பொதியைக் கொண்டு

வருதலைக் கண்டு மனம் மகிழ்ந்தார். தாம் எடுத்துச் சென்ற தாலியை வணிகரிடம் கொடுத்து அம்மூட்டையை வாங்கிக் கொண்டார். அதனை நேராகத் திருக்கோயில் பண்டாரத்தில் சேர்த்தார். தாமும் வீடு செல்லாமல் அங்கேயே இருந்தார்.

அன்று மனைவியாரும் மக்களும் மிக்க பசியினால் வருந்தி அயர்ந்து தூங்கினர். அந்நிலையில் சிவபெருமான் தம் திருவருளால் அவர்கள் வீடு முழுவதும் நெல்லும் பொன்னும் குவியுமாறு செய்தார். அதனை நாயனாரின் மனைவியாரிடத்துத் தெரிவித்து நாயனாரையும் அசரீரி வாக்கால் அழைத்து, "அன்பனே, நீ மிகவும் பசித்தாய். நீ வீடு சென்று பால் உணவு உண்க" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவன் கட்டளைப்படியே நாயனார் வீடு சென்று நெல்லும் பொன்னும் குவிந்திருக்கக் கண்டார். மனைவியார் வாயிலாகச் செய்தியை உணர்ந்து அச்செல்வங்களை எல்லாம் சிவனடியார்களுக்கும் கொடுத்துத் தாமும் அனுபவித்து நலமாக வாழ்ந்து வந்தார்.

அக்காலத்தே திருப்பனந்தாளில் சிவலிங்கம் சாய்ந்திருந்தது. யானை, குதிரை முதலியன கட்டி இழுத்தாலும் அது நிமிராதது கண்டு அரசன் கவலை அடைந்தான். அதனைக் கேள்வியுற்ற நாயனார் தமது கழுத்தில் கயிறு கட்டிப் பூட்டி இழுக்க, அச்சிவலிங்கம் நிமிர்ந்தது. நாயனார் அங்குச் சில நாட்கள் இருந்து திருக்கடவூர் சென்று திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகியோரைக் கண்டு அமுது செய்வித்தார். இவ்வாறு பற்பல திருப்பணிகளைப் புரிந்த நாயனார் சில நாட்களுக்குப் பின்னர் இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

சீலமலி திருக்கடவூர்க் கலயனாராந் திகழ்மறையோர்
பணிவறுமை சிதையா முன்னே
தாலியைநெற் கொளஎன்று வாங்கிக் கொண்டு
சங்கையில்குங் குலியத்தாற் சார்ந்த செல்வர்

ஞாலநிகழ் திருப்பனந்தாள்நாதர்நேரே நரபதியுந்
தொழக் கச்சானயந்துபோதப்
பாலமுத முண்டாரு மரசுமெய்திப் பரிந்தமுது
செயவருள்சேர் பான்மையாரே.

12. மானக்கஞ்சாற நாயனார்
(மார்கழி - சுவாதி)

கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலசெய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்
அலகும் எனக்கரு தாதவள் கூந்தல் அரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாறன் எனும் வள்ளலே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

கஞ்சாறூர் என்னும் தலம் சோழ நாட்டில் வளமிக்க ஓர் ஊராகும். அங்குக் கொம்புத் தேனும் கொழுங்கனிச் சாறும் நிறைந்து விளங்கும். அங்கு வேளாளர் குலத்தில் பிறந்த மானக்கஞ்சாற நாயனார், சிவபெருமான் அடியவர்களுக்கு ஏவல் செய்யும் தொழிலைச் செய்து வந்தார்.

அவருக்குச் சில காலம் மகப்பேறு இல்லாமல் சிவபெருமான் திருவருளால் ஒரு பெண் பிறந்தது. அப்பெண் மணப்பருவம் அடைந்தாள். மானக்கஞ்சாறர் அப்பெண்ணை ஏயர்கோன் கலிக்காம நாயனாருக்கு மணம் புரிவிக்க ஏற்பாடு செய்திருந்தார். கலிக்காமர் அவளை மணம் புரிந்து கொள்ளக் கஞ்சாறூருக்குச் செல்ல முயன்றார்.

அவர் செல்வதற்கு முன்னரே சிவபெருமான் மாவிரதியார் கோலம் பூண்டு மானக்கஞ்சாறர் வீடு சென்று, "அங்கு நடக்கும் மங்கல நிகழ்ச்சி யாது?" என்று வினவினார். நாயனார் தம் மகளுக்குத் திருமணம் என்றார். மாவிரதியார் பெண்ணின் நீண்ட கூந்தலைக் கண்டு, "இப்பெண்ணின் கூந்தல் நமது பஞ்சவடிக்கு உதவும்" என்றார்.



குங்கிலியக் கலய நாயனார்



மானக்கஞ்சாற நாயனார்

திருமணமாவதற்கு முன் அடியார் கேட்டதற்கு மனமுவந்து மானக்கஞ்சாறர் அக்கூந்தலை உள்ளன்போடு அரிந்து கொடுத்தார். சிவபெருமான் மாவிரதியார் வடிவத்திலிருந்து மறைந்து உமாதேவியுடன் காளை வாகனத்தின்மேல் காட்சி அளித்தார்.

கலிக்காமர் கஞ்சாறூருக்கு வந்து முண்டிதமான பெண்ணை மணக்க விதியின்மையால் திரும்ப முயல்வதை அறிந்து, "கலிக்காமா, நீ வருந்துதல் வேண்டா, இப்பெண்ணிற்குக் கூந்தலை மீளக் கொடுத்தருளுவோம். மணம் செய்துகொள்" என்று திருவாய் மலர்ந்தருளினார். கலிக்காமர் அப்பெண்ணுக்கு மீண்டும் கூந்தல் வளர்ந்தமை கண்டு அவளை மணந்து கொண்டார். பின்னர் சுற்றம் சூழத் திருமங்கலம் என்னும் தம் திருநகரினை அவர் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கஞ்சநகர் மானக்கஞ் சாறனார்சீர்க் காதன்மகள்
வதுவைமணங் காணநாதன்
வஞ்சமலி மாவிரதத் தலைவனாகி வந்துபுகுந்
தவள் அளக மகிழ்ந்து நோக்கிப்
பஞ்சவடிக் காமென்ன வரிந்துநீட்டும் பத்தரெதிர்
மறைந்திறைவன் பணித்தவாக்கால்
எஞ்சலில்வண் குழல்பெற்ற பேதைமாதை யேயர்பிராற்கு
உதவியருள் எய்தினாரே.

13. அரிவாட்டாய நாயனார்

[தை - திருவாதிரை]

வள்ளற் பிராற்(கு) அமு தேந்தி வருவோன் உகலும்இங்கே
வெள்ளச் சடையாய் அமுதுசெய் யாவிடில் என்தலையைத்
தள்ளத் தகுமென்று வாட்பூட் டியதடங் கையினன் காண்
அள்ளற் பழனக் கணமங் கலத்(து)அரி வாட்டாயனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ நாட்டுக் கணமங்கலம் என்னும் ஊரில் தாயனார் என்னும் வேளாளர் கற்பில் சிறந்த தம் மனைவியாருடன் இல்லறம் என்னும் நல்லறம் நடத்தி வந்தார். அவர் தினந்தோறும் சிவபெருமானுக்குச் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் படைத்து வந்தார்.

இவ்வாறு ஒழுகி வரும் நாட்களில் அவர் செல்வம் சுருங்கி வறுமை அடைந்தார். அப்போதும் கூலிக்கு வேலை செய்து கிடைத்த செந்நெல் அரிசியை சிவபெருமானுக்குப் படைத்துத் தாம் கார் அரிசி அன்னம் உண்டு வந்தார்.

இந்நிலைமையை மாற்றுவதற்காக இறைவன் அவ்வூர் வயல்களில் எல்லாம் செந்நெல்லே விளையும்படி திருவுளம் கொண்டார். அதனால் அவருக்குக் கூலியாகக் கிடைத்த செந்நெல் முழுவதையும் இறைவனுக்கே படைத்துவிட்டுத் தாம் தம் மனைவியார் சமைத்துக் கொடுத்த கீரை உணவை உண்டு காலம் கழித்தார். பின்னர் கீரை வகைகளும் குறைந்தன. தாயனார் அப்போதும் விரதத்தைக் கைவிடாமல் நீர் முதலியன அருந்திப் பசி தீர்த்தார்.

ஒருநாள் தாயனார் செந்நெல் அரிசியும் செங்கீரையும் மாவடுவும் தாங்கிச் சிவாலயத்திற்குப் புறப்பட்டார். அவர் மனைவியார் பஞ்ச கவ்வியம் தாங்கிப் பின்னே சென்றார். தாயனார் உணவில்லா இளைப்பாலும் அரிசி முதலியவை தாங்கிச் சென்றதாலும் கால் தள்ளாடிக் கீழே விழுந்தார். அவர் பின்னால் சென்ற மனைவியார் அவரைத் தாங்கிக் கொண்டார். ஆயினும் அவர் கையிலிருந்த பொருள்கள் யாவும் தரையில் நிலவெடிப்பில் சிந்தின. இந்நிகழ்ச்சியால் தாயனார் இனிமேல் கோயிலுக்குப் போய்ப் பயனில்லை என்று எண்ணி அரிவாளை எடுத்துக் கழுத்தில் வைத்து ஊட்டியை அறுத்துக் கொள்ளத் தொடங்கினார். அச்செயல் பிறவித் துன்பமாகிய வேரை அறுப்பது போல இருந்தது. அதற்குள் சிவபெருமான் நில வெடிப்பிலிருந்து தம் கையை நீட்டித் தாயனார் கையைப் பிடித்துக் கொண்டு மாவடுவைக் கடிக்கும் 'விடேல் விடேல்' என்னும் ஓசையை

உண்டாக்கினார். அவ்வோசை கேட்டுத் தாயனார் மனம் மகிழ்ந்து சிவபெருமானை வணங்கினார். எம்பெருமான் அவரை 'சிவலோகத்தில் வாழ்ந்திரு' என்று திருவருள் புரிந்து மறைந்தார். தாயனார் அரிவாளால் தம் ஊட்டியை அரிந்தமையால் 'அரிவாட்டாய நாயனார்' எனப் பெயர் பெற்றார்.

திருத்தொண்டர் புராண சாரம்

தாவில்கண மங்கலத்துள் வேளாண் டொன்மைத்
தாயனார்நாயனார் தமக்கேசெந்நெல்
தூஅரிசி யெனவிளைவ தவையேயாகத் துறந்தணவு
வடுவரிசி துளங்குகீரை
ஆவினிளைந் துடன்கொணர வோர்கமரிற்சிந்த
வழிந்தரிவாள் கொண்டூட்டி யரியாமுன்னே
மாவடுவி னொலியும் அரன் கரமுந்தோன்றி
வாள்விலக்கி யமரர்தொழ வைத்ததன்றே.

14. ஆனாய நாயனார்

[கார்த்திகை - அஸ்தம்]

தாயவன் யாவுக்கும் தாழ்சடை மேல்தனித் திங்கள்வைத்த
தூயவன் பாதம் தொடர்ந்துதொல் சீர்துளை யால்பரவும்
வேயவன் மேல்மழ நாட்டு விரிபுனல் மங்கலக்கோன்
ஆயவன் ஆனாயன் என்னை உவந்தாண்(டு) அருளினனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

மழ நாட்டில் மங்கலவூர் என்னும் திருப்பதியில் ஆயர் குலத் திலகமாய் ஆனாயர் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் வேய்ங்குழலில் பஞ்சாட்சரத்தை இசைத்து வருவார். மழைக்காலத்தில் ஒருநாள் பசுக் காத்தல் பொருட்டு பசுக் கூட்டத்துடன் அவர் காட்டுக்குச் சென்றார். அங்கு மிகுதியாகப் பூத்த கொன்றை மரம்



அரிவாட்டாய நாயனார்



ஆனாய நாயனார்

ஒன்றைக் கண்டு அதனடியில் சென்று பஞ்சாட்சரத்தை வேய்ங்குழலில் இசைத்தார். அதனால் சராசரங்கள் எல்லாம் இசையில் ஈடுபட்டு மயங்கி நின்றன.

சாமகீதப் பிரியரான சிவபெருமான் உடனே ஆனாயருக்குத் தரிசனம் தந்து "அன்பனே, நம் அடியார்கள் குழலோசை கேட்கும் பொருட்டு நீ இப்போது இவ்விடத்தில் நின்றபடியே நம்மிடத்திற்கு வருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். ஆனாய நாயனார் சிவபெருமான் பக்கத்தில் குழல் இசைத்துக் கொண்டே திருக்கைலாயத்தை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

மங்கலமா மழநாட்டு மங்கலமாநகருண் மருவுபுக
ழானாயர் வளராமேய்ப்பார்
கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்குசார்ந்து குழலிசையி
னைந்தெழுத்துங் குழைய [illegible]த்துத்
தங்குசரா சரங்களெல்லா முருகாநிற்பத் தம்பிரா
னணைந்துசெவி தாழ்த்தி வாழ்ந்து
பொங்கியவான் கருணைபுரிந் தென்றுமூதப்
போதுகவென் றருளவுடன் போயினாரே.

15. மூர்த்தி நாயனார்
[ஆடி - கார்த்திகை]

அவந்திரி குண் டமண் ஆவதின் மாள்வனென் றன்றாலவாய்ச்
சிவன்திரு மேனிக்குச் செஞ்சந் தனமாச் செழுமுழங்கை
உவந்தொளிர் பாறையில் தேய்த்துல காண்டஒண் மூர்த்தி தன்னூர்
நிவந்தபொன் மாட மதுரா புரியென்னும் நீள்பதியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

பாண்டிய நாட்டிலுள்ள மதுரையில் வைசியர் குலத்தில் மூர்த்தி

நாயனார் தோன்றினார். இவர் தினந்தோறும் சோமசுந்தரக் கடவுளுக்கு சந்தனக் காப்பு இடுதற்குச் சந்தனம் அரைத்துக் கொடுத்து வந்தார்.

கர்நாடக தேசத்து அரசன் பாண்டியனை வென்று அவன் நாட்டைக் கவர்ந்தான். அவன் சமண சமயத்தைத் தழுவுபவன். அதனால் பாண்டி நாட்டு மக்களையும் சமண சமயத்துக்கு அடங்கி நடக்குமாறு செய்ய எண்ணினான். மூர்த்தி நாயனாரையும் அவ்வழியில் திருப்ப எண்ணி, நாயனார் சந்தனக் கட்டைகள் வாங்கும் கடைகளில் சந்தனக் கட்டைகள் கொடுக்காதிருக்குமாறு கட்டளையிட்டான். அதனால் மூர்த்தி நாயனார் மிகவும் துன்பப்பட்டார். சந்தனக் கட்டை எங்கும் கிடைக்காமையால் அவர் ஆலயத்திற்குச் சென்று இறைவனாரை வணங்கி, "அண்ணலே, தாங்கள் அணிதற்கு வேண்டிய சந்தனக் கட்டைக்கு முட்டு வந்தாலும், அதனைத் தேய்க்கும் கைக்கு முட்டு இல்லை" என்று கூறி ஒரு சந்தனக் கல்லில் தமது முழங்கையை வைத்து, எலும்பினுள் இருக்கும் துவாரம் திறந்து, மூளை ஒழுகும் வரையில் அரைத்தார். அவ்வளவில் சிவபெருமான் காட்சி தந்து, 'அன்பனே, நீ இவ்வாறு செய்தல் வேண்டாம். உனக்குத் துன்பம் விளைவித்தவன் விரைவில் இறப்பான். நீயே இந்த நாட்டின் அரசனாக இருந்து, சைவ சமயத்தை வளர்த்து முடிவில் நம் உலகை அடைவாயாக' என்று கூறியருளினார்.

அந்நிலையில் சந்தனம் அரைத்த கை வளர்ந்தது. மறுநாள் மன்னனும் மாண்டான். அமைச்சர்கள் அவனுக்குச் செய்ய வேண்டிய இறுதிக் கடன்களையெல்லாம் செய்து முடித்தனர். அரசனுக்கு மைந்தன் இல்லாமையால் நல்ல அரசனைத் தேர்ந்தெடுப்பதற்காக அவர்கள் பட்டத்து யானையின் கண்ணைக் கட்டி ஏவினர். அந்த யானையோ சொக்கநாதர் சந்நிதியில் இருந்த மூர்த்தி நாயனாரைத் தேர்ந்தெடுத்துத் தன் முடிமீது வைத்துக் கொண்டது. எனவே மூர்த்தி நாயனார் மதுரையின் அரசரானார். அவரது ஆணைப்படியே அமைச்சர்கள் விபூதி, உருத்திராட்சம் முதலியவற்றையே அவரது திருமுடியில் அணிவித்தனர்.

இவ்வாறு மூர்த்தி நாயனார் நெடுங்காலம் அரசாண்டு முத்தி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தியாராம் வணிகர்திரு
வாலவாய் மன்னர் சாத்தத்
தழங்குதிர முழங்கைதரத் தேய்த்தவூறுந் தவிர்ந்தமணர்
வஞ்சனையுந் தவிரமன்னன்
இழந்தவுயி ரினனாக ஞாலநல்க வெழில்வேணி
முடியாக விலங்குவேட
முழங்குபுக ழணியாக விரைநீறாக
மும்மையுல காண்டருளின் முன்னினாரே.


16. முருக நாயனார்

[வைகாசி - மூலம்]

பதிகம் திகழ்தரு பஞ்சாக் கரம்பயில் நாவினன்சீர்
மதியம் சடையால் கலர்தொட் டணிபவன் யான் மகிழ்ந்து
துதியம் கழற்சண்பை நாதற்குத் தோழன்வன் தொண்டன் அம்பொன்
அதிகம் பெறும்புக லூர்முரு கன்எனும் அந்தணனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ நாட்டில் திருப்புகலூர் என்னும் ஊரில் முருகநாயனார் தோன்றினார். அவர் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர். நான்மறைகளை ஓதி உணர்ந்தவர். முருகனார் நாடோறும் சூரியன் உதிப்பதற்கு முன் விழித்தெழுவார். நீராடுவார். பலவகை மலர்களைப் பறித்து மாலைகள் தொடுத்து அவ்வூரிலுள்ள வர்த்தமானீச்சுவரருக்குச் சூடி வழிபடுவார். நாயனார் இவ்வாறு ஒழுகி வரும் காலத்தில் திருஞானசம்பந்தர் திருப்புகலூருக்கு எழுந்தருளினார். முருக நாயனார் அவருக்கு நண்பரானார். பின்பு அவர் திருஞானசம்பந்தரின்



மூர்த்தி நாயனார்



முருக நாயனார்

திருமணத்தில் சிவபெருமானின் திருவடி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

மன்னுதிருப் புகலூர்வாழ் முருகனாரா மறையவர்கோ
வர்த்தமா னீச்சரத்தார்
சென்னியினுக் கழகமரு மலர்கள்கொய்து
திருமாலை புகழ்மாலை திகழச்சாத்திக்
கன்னிமதிற் கழுமலநா டுடையநாதன் காதன்மிகு
மணங்காணுங் களிப்பினாலே
இன்னல்கெட வுடன்சேவித் தருளான்மீளா
திலங்குபெரு மணத்தரனை யெய்தினாரே.

17. உருத்திர பசுபதி நாயனார்

(புரட்டாசி - அசுவனி)

அந்தாழ் புனல்தன்னில் அல்லும் பகலும்நின் றாதரத்தால்
உந்தாத அன்பொ டுருத்திரஞ் சொல்லிக் கருத்தமைந்த
பைந்தார் உருத்திர பசுபதி தன்னற் பதிவயற்கே
நந்தார் திருத்தலை யூர்என்(று) உரைப்பர்இந் நானிலத்தே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ நாட்டில் திருத்தலையூரில் அந்தணர் குலத்தில் பசுபதி என்பவர் ஒருவர் இருந்தார். அவர் சிவ பக்தியில் சிறந்தவர். பசுபதியார் இரவும் பகலும் தாமரை மலர்கள் மலர்ந்த தடாகத்தில் இறங்கிக் கழுத்தளவு உள்ள தண்ணீரில் நின்றுகொண்டு, தலைமேல் குவிந்த கைகளை உடையவராய் திரு உருத்திர பசுபதி மந்திரத்தினை நாடோறும் ஓதி இறைவன் திருவடியை அடைந்தார். அதனால் அவருக்கு உருத்திர பசுபதி நாயனார் என்னும் பெயர் வழங்கி வந்தது.

திருத்தொண்டர் புராண சாரம்

பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர்வாழும் பசுபதியா
ரெனுமறையோர் பணிந்துசெந்தேன்

அங்கமல மடுவினிடை யல்லுமெல்லு மகலாதே
யாகளமா யமர்ந்துநின்று
திங்கள்வளர் சடைமுடியா னடிகள்போற்றித்
திருவெழுத்துமுருத் திரமுந்திகழவோதி
மங்கையிட முடையபிரா னருளான்மேலை
வானவர்க டொழுமுலகின் மன்னினாரே.

18. திருநாளைப் போவார் நாயனார்


(புரட்டாசி - ரோகிணி)

நாவார் புகழ்த்தில்லை அம்பலத் தான்அருள் பெற்றுநாளைப்
போவான் அவனாம் புறத்திருத் தொண்டன்தன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியா அவன்பதிதான்
மாவார் பொழில்திகழ் ஆதனூர் என்பர்இம் மண்டலத்தே.


– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வள நாட்டில் ஆதனூர் என்னும் ஒரு சிற்றூர் உண்டு. அங்குப் புலையர் குலத்தில் நந்தனார் அவதரித்தார். அவர் சிவபக்தி மிகுந்தவராய்ச் சிவாலயங்களில் உள்ள பேரிகை, முழவு, யாழ் முதலிய கருவிகளுக்கு வேண்டிய தோல், வார், நரம்பு, கோரோசனம் முதலியவைகளை உதவி வந்தார். அவர் பல சிவாலயங்களையும் வழிபட்டுத் திருப்புன்கூரை அடைந்தார். அங்கு இறைவனை நேரில் தரிசிக்க எண்ணினார். சிவபெருமான் தமக்கு எதிரில் இருந்த நந்தியை விலக்கி அவருக்குக் காட்சி கொடுத்தார். திருக்குளம் தோண்டினார்.

நந்தனார் சிதம்பரத்தில் உள்ள நடராசப் பெருமானை வழிபட எண்ணி, 'நாளைப் போவேன், நாளைப் போவேன்' என்று கூறி வந்ததால் அவருக்குத் 'திருநாளைப் போவார்' என்று பெயர் வந்தது. பல நாட்களுக்குப் பின் நந்தனார் தில்லையை அடைந்து கோயிலின் உள்ளே செல்லாமல் எல்லையை வலம் செய்து கொண்டு இருந்தார். அச்சமயத்தில் நடராசப் பெருமான் அவர் கனவில் தோன்றி, 'நீ



உருத்திர பசுபதி நாயனார்



திருநாளைப் போவார் நாயனார்

நெருப்பில் மூழ்கி நம்மை வந்து அடைவாயாக' என்று திருவாய் மலர்ந்தருளினார். தில்லைவாழ் அந்தணர்களுக்கும் நந்தனார் வரும் செய்தியைத் தெரிவித்துத் தீ வளர்க்குமாறு கட்டளையிட்டு மறைந்தார். இறைவன் கட்டளைப்படியே தீ வளர்த்து அந்தணர்கள் நந்தனாரிடம் சென்று தெரிவித்தனர். நந்தனார் தீயை வலம் வந்து உள்ளே புகுந்து முனிவர் உருக்கொண்ட வேதியராக வெளிவந்து தோன்றினார். பின்னர் நந்தனார் இறைவனை வழிபட்டு அவர்தம் மலரடிகளைத் தொழுது கொண்டிருக்கும் இன்ப நிலையை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

நன்மைதிகழ் மேற்காநாட் டாதனூர்வாழ் நந்தனார்
    புறத்தொண்டர் நாளைப்போகப்
பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப்
    பொய்கையமைத் தழலேறு பிரியநோக்கி
வன்மதில்சூழ் தில்லையிறை யருளால்வாய்ந்த
    வண்டழலி னிடை மூழ்கி மறையோர் போற்ற
மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்தநாதன் விளங்கு
    நடந்தொழ மன்றுள் மேவினாரே.

19. திருக்குறிப்புத் தொண்ட நாயனார்
[சித்திரை - சுவாதி]

மண்டும் புனற்சடை யான்தமர் தூசெற்றி வாட்டும்வகை
விண்டு மழைமுகில் வீடா தொழியின்யான் வீவன்என்னா
முண்டம் படர்பாறை முட்டும் எழிலார் திருக்குறிப்புத்
தொண்டன் குலங்கச்சி ஏகா லியர்தங்கள் தொல்குலமே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் தொண்டை நாட்டிலுள்ள காஞ்சிபுரத்தில் ஏகாலியர்

குலத்தில் அவதரித்தார். இவர் சிவனடியார்களின் குறிப்பின்படி அவர்களுக்கு ஆடை முதலியவைகளை அழுக்கு நீக்கி உதவுவார்.

ஒருநாள் சிவபெருமான் ஒரு கிழவர் உருவத்தில் அழுக்கடைந்த ஆடையோடு வந்தார். நாயனார் அவரை எதிர்கொண்டு பணிந்து, 'உம்முடைய கந்தையைக் கொடுத்தால் அடியேன் அழுக்கு நீக்கிக் கொடுப்பேன்' என்றார். கிழவர் கந்தை ஒன்றை அவரிடம் கொடுத்து, 'இது கந்தையானாலும் குளிருக்கு ஆதரவானது. பொழுது போவதற்குள் இதனை அழுக்கு நீக்கித் தரவேண்டும்' என்று கூறினார். நாயனார் அவ்வாறே செய்வதாக ஒப்புக் கொண்டு அதை வாங்கி வெள்ளாவியில் வைத்து மீண்டும் கசக்கத் தொடங்கினார். அச்சமயம் வானம் இருண்டது. மழை பெய்தது. அதனால் நாயனார் தமது வாக்குத் தவறும் எனவும் முதியோர் குளிரால் வருந்துவார் எனவும் கருதி தாம் ஆடை துவைக்கும் கருங்கல் பாறையில் தமது தலையை மோதத் துணிந்தார். உடனே சிவபெருமான் அந்தப் பாறையில் தோன்றிய திருக்கரத்தால் நாயனாரின் தலையைப் பிடித்து, 'அன்பனே, உன் அடியார் பக்தியை மூன்று உலகிலும் பரவுமாறு செய்தோம். இனி நீ நம் உலகை வந்தடைக' என்று திருவாய் மலர்ந்தார். நாயனார் எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் திருக்கயிலை மலையை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கொந்தலர்பூம் பொழிற்கச்சி நகரேகாலிக் குலத்தலைவர்
தவர்குறிப்புக் குறித்து ளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீராகின் வருந்துமுட
லெனவாங்கி மாசுநீத்த
கந்தைபுல ராதொழிய மழையுமாலைக் கடும்பொழுதும்
வரக்கண்டு கலங்கிக் கன்மேற்
சிந்தமுடி புடைப்பளவிற் றிருவேகம்பர் திருக்கைகொடு
பிடித்துயர்வான் சேர்த்தினாரே.

20. சண்டேசுவர நாயனார்

[தை - உத்திரம்]

குலமே றியசேய்ஞ் லூரில் குரிசில் குரைகடல்சூழ்
தலமே றியவிறல் சண்டிகண் டீர்தந்தை தாள்இரண்டும்
வலமே றியமழு வால்எறிந் தீசன் மணிமுடிமேல்
நலமே றியபால் சொரிந்தலர் சூட்டிய நன்னிதியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

திருச்சேய்ஞலூர் என்பது சோழநாட்டைச் சார்ந்த ஒரு மூதூராகும். அங்கு காசிப கோத்திரத்தில் எச்சதத்தன் என்பவருக்கும் பவித்திரை என்பவருக்கும் விசாரசருமர் மகனாக உதித்தார். அவர் இளமையிலேயே சிவபக்தி நிறைந்து வேதம் முதலியன கற்று வித்தகராக விளங்கினார்.

ஒரு சமயம் இடையன் ஒருவன் தன்மீது பாயவந்த பசுவினைக் கோலால் அடித்தான். அதுகண்டு விசாரசருமர் மனம் வருந்தி அவனை இனி பசு மேய்க்காமல் இருக்கக் கட்டளையிட்டார். அவ்வூரார் அனுமதி பெற்றுத் தாமே அப்பசுக்களை மேய்த்து வந்தார். விசாரசருமர் பசுக்களிடம் மிகவும் அன்பு பூண்டு முன்னிலும் சீராட்டிப் பாராட்டிப் பசுக்களை மேய்த்து வந்தார். பசுக்களும் தம் கன்றுகளை மறந்து விசாரசருமரை விட்டு நீங்காமல் அன்பு நிறைந்தனவாய் தாமே பால் சொரியலாயின. அதனைக் கண்ட விசாரசருமர் அந்தப் பாலால் சிவபூசை செய்ய எண்ணி ஓர் ஆத்தி மரத்தின் கீழ் மணலால் சிவலிங்கம் ஒன்றைச் செய்தார். அதனைச் சுற்றித் திருக்கோயிலும் கோபுரமும் மதிலும் மண்ணினாலேயே அமைத்தார்.

இவர் நல்ல மலர்களைப் பறித்து பசுக்கள் சொரிந்த பாலைக் குடங்களில் ஏந்திச் சிவபூசை செய்து வந்தார். இவ்வாறு விசாரசருமர் நடத்தி வந்தும் பசுக்களுக்குரியவர்களுக்குப் பால் குறைவின்றி இருந்தது. இதைக் கண்ட ஒருவன் விசாரசருமர் பாலைக் கறந்து



திருக்குறிப்புத் தொண்ட நாயனார்



சண்டேசுவர நாயனார்

வீணாக மணலில் ஊற்றி விளையாடுகிறார் என்று ஊரில் உள்ளாரிடம் கோள் கூறினான். ஊரார் எச்சதத்தனிடம் கூறினர். விசாரசருமரின் தந்தையாகிய எச்சதத்தன் அவர்கள் பேச்சை நம்பவில்லை. தன் மகன் செயலைத் தானே நேரில் கண்டறிய விரும்பினான். அருகிலிருந்த குரா மரத்தின்மீது ஏறி ஒளிந்து கொண்டிருந்தான். விசாரசருமர் வழக்கம்போல் பாற்குடங்களை எடுத்துச் சிவலிங்கத்தைத் திருமஞ்சனம் ஆட்டினார்.

தன் மகனாரின் செயலைக் கண்ட எச்சதத்தன் மரத்தினின்று இறங்கி ஆத்திரத்தோடு ஓடி வந்தான். கையிலிருந்த கோலால் விசாரசருமரின் முதுகில் ஓங்கி அடித்தான். வாயில் வந்தவாறு அவரை வைதான். அப்பொழுதும் அவர் எழுந்திராமை கண்ட அவன் அங்கு இருந்த பாற்குடங்களைக் காலினால் இடறிச் சிந்தினான். அதனால் சீற்றம் கொண்ட விசாரசருமர் அருகிலிருந்த கோலை எடுத்தார். அக்கோல் அவருக்கு மழுப்படையாக மாறிற்று. அதனால் தம் தந்தையின் உதைத்த காலை அவர் துண்டாக்கி வீழ்த்தினார். எச்சதத்ன் தரையில் விழுந்து இறந்தான். விசாரசருமர் மீண்டும் சிவ பூசையில் ஈடுபட்டார்.

விசாரசருமரின் பூசைக்கு மகிழ்ந்து சிவபெருமான் உமாதேவியாரோடு விடையின் மீதேறி வந்து காட்சியளித்தார். அவர் விசாரசருமரைத் தம் திருக்கரங்களால் எடுத்து "எமக்காக உன் தந்தையின் கால்களை வெட்டிக் கொன்றாய். இனி யாமே உனக்குத் தந்தையானோம்" என்று கூறி அவருக்குத் தாம் உண்ட பரிகலம், உடுக்கும் உடை, சூடும் மாலை, அணிகலன்கள் முதலியவற்றைக் கொடுத்து திருத்தொண்டர்களுக்கெல்லாம் தலைவராக்கி சண்டீசப் பதவியை அளித்தருளினார். தம் சடை முடியிலிருந்த கொன்றை மலர் மாலையை அவருக்குச் சூட்டினார். எச்சதத்தன் சண்டேசுவரரால் தண்டிக்கப்பட்டதால் திருக்கயிலாயத்தை அடையும் பேறு பெற்றான்.

வேதமலி சேய்ஞலூ ரெச்சதத்தன் விளங்கியசேய்
மறைபயிலும் விசாரசன்மர்
கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாதுதாமே
கொண்டுநிரை மண்ணியின்றென் கரையினீழற்
றாதகியின் மணலிலிங்கத் தான்பாலாட்டத் தாதைபொறா
தவையிடறுந் தாள்கள்மாளக்
காதிமலர்த் தாமமுயர் நாமமுண்ட கலமகனாம்
பதமருளாற் கைக்கொண்டாரே.

21. திருநாவுக்கரசு சுவாமிகள்

[சித்திரை - சதயம்]

நற்றவன் நல்லூர்ச் சிவன்திருப் பாதம்தன் சென்னிவைக்கப்
பெற்றவன் மற்றிப் பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன் உற்ற விடம்அடை யார்இட ஒள்ளமுதாத்
துற்றவன் ஆமூரில் நாவுக் கரசெனும் தூமணியே.

மணியினை மாமறைக் காட்டு மருந்தினை வண்மொழியால்
திணியன நீள்கத வந்திறப் பித்தன தெண்கடலிற்
பிணியன கல்மிதப் பித்தன சைவப் பெருநெறிக்கே
அணியன நாவுக் கரையர் பிரான்தன் அருந்தமிழே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

திருநாவுக்கரசர் சோழ நாட்டுக்கும் தொண்டை நாட்டுக்கும் இடையிலுள்ள நடு நாடாகிய திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரிலே சைவ வேளாளர் மரபிலே குறுக்கையார் குடியிலே புகழனார், மாதினியார் என்னும் இருவர்க்கும் அருள் நலம் சிறந்த அருமைப் புதல்வராக அவதரித்தருளினார். அவருக்கு முற்பிறந்தார் திலகவதியார் என்னும் கற்பரசியாராவார். திருநாவுக்கரசருக்கு அவர்தம் பெற்றோர் இட்ட

பிள்ளைத் திருநாமம் மருணீக்கியார் என்பது. மருணீக்கியார் அன்பு, அருள், அறம் முதலிய அருங்குணங்கள் வளர வளர்ந்து கற்கத் தக்க கலைகளைக் கசடறக் கற்றுத் திகழ்ந்தார். அவர்தம் தமக்கையார் மணப்பருவம் அடையவே புகழனாரும் மாதினியாரும் அரசனிடத்தில் சேனாபதியாக விளங்கும் கலிப்பகையாருக்கு மணமுடிக்க நிச்சயித்த பின் புகழனார் இறந்தார். உடனே மாதினியாரும் உடன்கட்டை ஏறினார்.

பெற்றோர் பிரிந்த துன்பத்தில் மூழ்கி இருக்கும் சமயத்தில் வெந்த புண்ணில் வேல் புகுவதே போன்று அரசனின் ஆணை தாங்கிப் பகைவர்களுடன் போர் புரிய வடநாடு சென்ற கலிப்பகையார் போரில் உயிர் துறந்தார். இச்செய்தியைக் கேட்ட திலகவதியார் 'எனக்கென நிச்சயித்த கணவர் இறந்தார். ஆதலின் யானும் இறப்பேன்' எனத் துணிந்து பின்னர் மருணீக்கியார் வேண்டுகோளுக்கிணங்கி உயிருடன் இருந்தார்.

பின்னர் மருணீக்கியார் பாடலிபுத்திரம் அடைந்து சமண சமயம் சார்ந்தார். அச்சமய நூல்களைக் கற்றுணர்ந்தார். தருமசேனர் என்னும் பட்டம் பெற்று விளங்கினார். திருவதிகையில் சிவபெருமானுக்குத் தொண்டு செய்துவரும் திலகவதியார் இதனை அறிந்து மனம் வருந்தினார். சிவபெருமான்பால் விண்ணப்பித்துக் கொள்ளவே அப்பெருமான் தருமசேனரது வயிற்றில் சூலை நோய் உண்டாக்கினார். தருமசேனரது வயிற்றுச் சூலை நோயைச் சமணர்கள் போக்க முடியாமையால் அவர் யாரும் அறியாமல் ஒரு நள்ளிரவில் தம் தமக்கையார் இருப்பிடமடைந்து அவர் காலில் விழுந்து வணங்கினார். திலகவதியார் திருநீறு கொடுக்கவே அந்நோய் நீங்கிற்று. பின் மருணீக்கியார் சிவபெருமானை வணங்கி அவர் அருளால் பாடல் பாடும் வன்மை பெற்று அவர்மேல் பதிகம் பாடினார். அப்பொழுது சிவனருளால், 'நீ அற்புதமான பதிகத்தைப் பாடினமையால் உனக்கு இனி நாவுக்கரசு என்னும் பெயர் வழங்குக' என அசரீரி தோன்றிற்று. பின்னர் திருநாவுக்கரசர் சிவத்தொண்டு செய்வதிலேயே காலம் கழித்து வந்தார்.

தருமசேனரின் மத மாற்றத்தை உணர்ந்த பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் அடங்காக் கோபம் கொண்டு அவரைத் தம்பால் அழைத்துச் சுண்ணாம்பு நிரம்பிய நீற்றறையினுள் அடைக்கும்படி அமணர்க்கு ஆணையிட்டான். அவர்களும் அதனை நிறைவேற்றினர். அச்சமயத்தில் நாவரசர் சிவபெருமானைத் தொழுது திருப்பதிகம் பாடினார். அந்த நீற்றறை, அவருக்கு வெம்மை அளிக்காது பொய்கைக் கரைபோலக் குளிர்ந்தது.

அது கண்ட அரசன் அவருக்கு நஞ்சு கலந்த பாலுணவை ஊட்ட அவ்வுணவு நஞ்சுண்ட கண்டன் அருளால் அமுதாயிற்று. பின்னர் அரசன் நாவரசரைக் கொல்ல யானைகளை ஏவினன். அவை அவரை வலம் வந்து வணங்கிச் சமணர்களைக் கொல்லத் தொடங்கின.

பின்பு சமணர்கள் நாயனாரைக் கற்றூணில் கட்டிப் படகிலேற்றிச் சென்று நடுக்கடலில் தள்ளினர். அதுபோழ்து நாயனார், 'சொற்றுணை வேதியன்' எனத் தொடங்கி, "கற்றுணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும் நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று முடியும் பதிகத்தைப் பாடக் கற்றூண் தெப்பமாக மிதந்து சென்று நாவரசரைத் திருப்பாதிரிப் புலியூரின் அருகே சேர்த்தது. நாயனார் கரையேறிச் சிவத்தலங்களைத் தரிசித்துத் திருவதிகை சார்ந்தார்.

பல்லவ மன்னன் மகேந்திரவர்மன் நாவரசரின் பெருமை உணர்ந்து அவரை வணங்கித் தானும் சைவ நெறியை மேற்கொண்டான். அன்றியும் திருவதிகையில் சிவபெருமானுக்குப் புதியதொரு கோயிலும் கட்டுவித்தான்.

பின்னர் நாவுக்கரசர் பற்பல தலங்கட்குச் சென்று பதிகம் பாடிச் சிதம்பரத்தை அடைந்து நடராசப் பெருமானைத் தொழுது அங்கேயே சில காலம் தங்கியிருந்தார். அச்சமயம் நாயனார் திருஞானசம்பந்தரின் பெருமைகளைக் கேள்வியுற்று அவரைக் காணச் சீர்காழிக்குச் சென்றார். எதிர் சென்று தரையில் வீழ்ந்து அவரை வணங்கினார்.

உடனே ஞானசம்பந்தர், 'அப்பரே, எழுந்திரும்' என்றார். அதனால் இவருக்கு அப்பர் என்னும் ஒரு பெயரும் வழங்கலாயிற்று.

நாவுக்கரசர் ஞானசம்பந்தருடன் சிலநாள் தங்கிப் பின்னர் அவரிடம் விடைபெற்றுத் தல யாத்திரை செய்யத் தொடங்கினார். அவர் திங்களூர் வழியே செல்லுகையில் தம்மிடம் பேரன்புடையராய்த் திகழ்ந்த அப்பூதியடிகளின் திருமாளிகையில் எழுந்தருளினார். அதுசமயம் தமக்கு அமுது படைத்தற் பொருட்டுத் தோட்டத்திற்குச் சென்று வாழைக் குருத்து கொய்கையிற் பாம்பு தீண்டி இறந்த அப்பூதியடிகளின் மகனைப் பதிகம் பாடி உயிர்ப்பித்தார். பின்பு அமுது செய்து, பல தலங்களைத் தரிசித்துத் திருவாரூர் சென்று, திருப்புகலூரை அடைந்தார். முருக நாயனாருடைய திருமாளிகையில் ஆங்குற்ற ஞானசம்பந்தரோடு தங்கியிருந்தார்.

பின்னர் இரு நாயன்மாரும் திருவீழிமிழலையை அடைந்தனர். அங்குப் பஞ்சமேற்பட்டமையின் கடவுளைத் தொழுது படிக்காசு பெற்றுச் சிவனடியார்களை உண்பித்தனர். அதன்பின் அவ்விருவரும் வேதாரணியத்தை அடைந்தனர். ஆங்கு நாவுக்கரசர் அத்தலத்தே வேதங்களால் பூசிக்கப் பெற்று மூடியே கிடந்த கோயில் திருக்கதவு திறக்குமாறு பாடினார். பின்பு நாவுக்கரசர் நித்திரை செய்கையில் சிவபெருமான் கனவில் தோன்றி, 'நாம் வாய்மூரிலிருப்போம், வா' என்று அருள் செய்ய, அவர் வேதாரணியத்தினின்றும் செல்லுங்கால் சிவபெருமான் இவருக்குத் தரிசனம் தந்த கோலத்துடன் முன்னால் நடந்து சென்று அருகேயிருந்த ஆலயத்தில் மறைந்தனர். பின்னர் திருஞானசம்பந்தரும் வாய்மூரை அடைந்தபோது சிவபெருமான் இருவருக்கும் காட்சியளித்தார்.

நாவரசர் பல தலங்களையும் கண்டு திருப்பைஞ்ஞீலிக்குச் செல்லும் வழியில் பசி தாகங்களால் பெரிதும் அல்லலுற்றுக் களைப்படைந்தார். அச்சமயத்தில் சிவபெருமான் ஓர் அந்தணர் உருவில் காட்சியளித்துத் தம் பொதி சோற்றைக் கொடுத்து உண்ணச் செய்து

அவருடைய களைப்பை நீக்கினார்.



திருநாவுக்கரசர் வடகயிலையைத் தரிசிக்க நடந்தும் தவழ்ந்தும் உருண்டும் செல்லுதல்.

அதன் பின்னர் நாவுக்கரசர் வடகயிலையில் சிவபெருமான் வீற்றிருக்கும் திருக்கோலத்தைக் கண்டு தொழ விரும்பித் திருக்காளத்தி முதலிய தலங்களைக் கடந்து, பாலை நிலத்தில் சாக மூல பலங்கள் புசித்தலையும் ஒழித்து, இரவும் பகலும் இடைவிடாது நடந்தார். இதனால் அவருடைய திருவடிகள் மணிக்கட்டுகள் வரை தேய்ந்தன. தேய்ந்தும் ஆசை மேலீட்டினால் தம் இரு கைளையும் ஆதரவாகக் கொண்டு அவர் தாவிச் சென்றார். அக்கைகளும் மணிக்கட்டுகளும் நைந்து கரைந்து சிதைந்தன. மேலும் ஆசை சிறிதும் குன்றுதலின்றி மேலிட்டமையால் கொடிய பருக்கைக் கற்கள் பொருந்திய வழியில் மார்பினால் நகர்ந்து நகர்ந்து போனார். மார்புத் தசையும் நைந்தது. எலும்புகள் முறியலுற்றன. பின் புரண்டு புரண்டு போனார். அதனால் உடல் முழுமையும் தேய்ந்துவிட நாயனார் கயிலைநாதனிடம் கொண்ட பேரன்பினால் மெல்ல நகருவதற்கு

முயன்றும் முடியாமையின் வழியிலே கிடந்தார். இவருடைய பக்தி மேம்பாட்டை உணர்ந்த பரமனார் திருவுளங் கொண்டு அவ்விடத்தில் தடாகம் ஒன்றுண்டாக்கி ஒரு முனிவர் வடிவம் கொண்டு அவர்முன் தோன்றி, 'தேவர்களாலும் அடைதற்கரிய அம்மலை மனிதர்களால் அடைதற்கெளிதோ? இனி நீர் திரும்பி விடுதலே உத்தமம்' என்றார். அதுகேட்ட நாவுக்கரசர், "திருக்கயிலையில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருக்கோலத்தைக் கண்டாலன்றி அநித்தியமாகிய இவ்வுடலைக் கொண்டு திரும்பேன்" என மறுத்தார். சிவபெருமான் அவருடைய துணிவைக் கண்டு மறைந்தருளி விண்ணில் அசரீரியாக நின்று, "நாவுக்கரசா நீ எழுந்து இத்தடாகத்தில் மூழ்கித் திருவையாறு அடைந்து நம்மைக் கயிலாய மலையில் வீற்றிருந்தபடி அத்தலத்தில் கண்டு வணங்கு" என்று பணித்தருளினார். அதன்படியே நாவுக்கரசரும் அத்தடாகத்தில் படிந்து, திருவையாற்றை அடைந்து அங்கு உமாதேவியோடும் சிவபெருமான் வீற்றிருத்தலைக் கண்டு ஆனந்தக் கூத்தாடினார். தேவாரப் பதிகங்கள் பாடினார். பின்னர் சிவபெருமான் மறைந்தருள, நாயனார் மனம் வருந்தித் தேவாரத் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு அங்கேயே சிவத்தொண்டுகள் செய்து கொண்டிருந்தார்.

நாவுக்கரசர் பாண்டிய நாட்டை அடைந்து குலச்சிறையாரும் பாண்டிமாதேவியாரும் தம்மை வணங்கச் சில நாட்கள் அங்கிருந்து மீண்டும் திருப்புகலூரை அடைந்தார். ஆங்கு உழவாரத் தொண்டு செய்கையில், இவர்தம் வைராக்கியத்தை உலகோர்க்கு உணர்த்தற் பொருட்டுச் சிவபெருமான் உழவாரப் படைதோறும் பொன்னும் நவமணியுமாகத் தோன்றச் செய்தார். நாவரசர் அவையனைத்தையும் பருக்கைக் கற்களாக எண்ணிக் குளத்திலே எறிந்தார். மேலும் சிவபெருமான் அரம்பையர்களை ஏவி நாயனாரை மயக்குமாறு செய்தார். நாயனார் சிறிதும் மனம் மாறாமல், "பொய்ம்மாயப் பெருங்கடலில்" என்னும் திருத்தாண்டகம் பாடிச் சிவத் தொண்டிலேயே ஈடுபட்டு இருந்தார். பின்னர் தமது எண்பத்தொன்றாவது வயதில் சித்திரைத்

திங்கள் சதயத் திருநாளில் நாவுக்கரசர் சிவபெருமான் திருவடிகளை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

போற்றுதிரு வாமூரில் வேளாண்டொன்மைப்
பொருவில்கொறுக் கையரதிபர் புகழனார்பால்
மாற்றருமன் பினிற்றிலக வதியாமாது வந்துதித்த
பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயரநீங்கத் துணைவரரு
டரவந்த சூலைநோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத்திரத்திற் பாழியொழித்
தரனதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமக் கையரருளா னீறுசாத்தி வண்டமிழா
னோய்தீர்ந்து வாக்கின்மன்னா[illegible]
வெந்தபொடி விடம்வேழம் வேலைநீ[illegible]
வியன்சூலங் கொடியிடபம் விளங்கச்சாத்தி
அந்தமிலப் பூதிமக னரவுமாற்றி யருட்காசு
பெற்றுமறை யடைப்புநீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலைகண்டு பூம்புகலூ
ரரன்பாதம் பொருந்தினாரே.

22. குலச்சிறை நாயனார்

[ஆவணி - அனுஷம்]

அருந்தமிழ் ஆகரன் வாதில் அமணைக் கழுநுதிமேல்
இருந்தமிழ் நாட்டிடை ஏற்றுவித் தோன்எழிற் சங்கம்வைத்த
பெருந்தமிழ் மீனவன் தன்அதி காரிபிரசம்மல்கு
குருந்தவிழ் சாரல் மணமேற் குடிமன் குலச்சிறையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

பாண்டிய நாட்டில் மணமேற்குடி என்னும் ஊரில் சிவபக்தியில் சிறந்த குலச்சிறையார் வாழ்ந்து வந்தார். அவர் பாண்டியருக்கு முதல் அமைச்சராக இருந்து மங்கையர்க்கரசியார் செய்து வந்த சிவத்தொண்டுகளுக்குப் பேருதவி புரிந்து வந்தார். அவரே திருஞானசம்பந்த சுவாமிகளை மதுரைக்கு வரவேற்றுச் சைவநெறி தழைக்குமாறு செய்தவர். சமயப் போர் செய்த சமணர்களைக் கழுவிலேற்றியவர்.

திருத்தொண்டர் புராண சாரம்

கோதில்புகழ் தருமணமேற் குடியார்கோவண்
குலச்சிறையார் தென்னர்குல வமைச்சர்குன்றா
மாதவர்க ளடிபரவு மரபார்பாண்டி மாதேவி
யாரருள்வான் பயிர்க்கு வேலி
காதன்மிகு கவுணியர்கோன் வாதிற்றோற்ற கையரைவை
கைக்கரை சேர் கழுவிலேற்று
நீதியினா ராலவாய் நிமலர்ச்சேர்ந்த நின்மலனா
ரென்மலங்க ணீக்கினாரே.


23. பெருமிழலைக் குறும்ப நாயனார்

[ஆடி - சித்திரை]


சிறைநன் புனல்திரு நாவலூர் ஆளி செழுங்கயிலைக்(கு)
இறைநன் கழல்நாளை எய்தும் இவனருள் போற்றஇன்றே
பிறைநன் முடியன் உ யடை வேன்என்(று) உடல்பிரிந்தான்
நறைநன் மலர்த்தார் மிழலைக் குறும்பன் எனும் நம்பியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் பெருமிழலை என்னும் ஊரில் அவதரித்தார். சிவபக்தியிலும் அடியவர் பக்தியிலும் சிறந்து விளங்கினார். சுந்தரமூர்த்தி நாயனாரின் திருவடிகளையே எப்போதும் தியானம் செய்து



குலச்சிறை நாயனார்



பெருமிழலைக் குறும்ப நாயனார்

வந்தார். சிவபெருமான் சுந்தரருக்குத் திருவஞ்சைக்களம் என்னும் ஊரில் உத்தர கைலாயத்தை அடையக் கட்டளையிட்டார். அதனை யோகத்தால் அறிந்த பெருமிழலைக் குறும்பர், 'அவரைப் பிரிந்து உயிர் வாழேன்' என்று அவருக்கு முன் தமது யோகத்தால் பிரமரந்திர வாயிலைத் திறந்து சிவபெருமானின் திருவடி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கொண்டல்பனி வளர்சோலை மிழலைநாட்டுக் கோதில்புகழ்ப்
பெருமிழலைக் குறும்பனார்சீ
ரண்டர்பிரா னடியவருக் கடியாராகு மாதரவால்
அணுக்க வன் றொண்டர்க் காளாய்
மண்டொழுமெண் டருசித்தி வாய்த்துளார்தாம்
வன்றொண்டர் வடகயிலை மருவுநாண்மு
னெண்டிகழு மறைமூல நெறியூடேகி
இலங்கொளிசேர் வடகயிலை எய்தினாரே.

24. காரைக்காலம்மையார்

(பங்குனி - சுவாதி)

நம்பன் திருமலை நான்மிதி யேன்என்று தாள்இரண்டும்
உம்பர் மிசைத்தலை யால்நடந்(து) ஏற உமைநகலும்
செம்பொன் உருவன்என் அம்மை எனப்பெற் றவள்செழுந்தேன்
கொம்பின் உருகாரைக் காலினின் மேய குலதனமே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ நாட்டில், காரைக்கால் என்னும் திருநகரில் தனதத்தனார் என்னும் வணிகர் ஒருவர் இருந்தார். அவருக்குப் புனிதவதியார் என்னும் திருமகளார் அவதரித்தார். அவ்வம்மையார் பரமதத்தன் என்னும் வணிகரை மணந்து அன்புற்று இன்புற்று இல்லறம் நடத்தி வந்தார்.

ஒருநாள் பரமதத்தனைத் தொழில் காரணமாகக் காணவந்த சிலர், அவனுக்கு இரண்டு மாங்கனிகளைக் கொடுத்தனர். பரமதத்தன் அவற்றை வீட்டுக்கு அனுப்பினான். புனிதவதியார் அவற்றை வாங்கிப் பத்திரமாக வைத்தார். அச்சமயம் சிவனடியார் ஒருவர் வந்தார். மிகுந்த பசியுடன் வந்த அடியவரைப் புனிதவதியார் முகமலர்ந்து வரவேற்று அன்போடு அமுதிட்டார். கணவனார் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றை அவருக்களித்தார். சிவனடியார் வயிறார அமுதுண்டு சென்றார்.

பின்னர், பரமதத்தன் வீட்டுக்கு வந்து உணவருந்தினான். புனிதவதியார் எஞ்சியிருந்த ஒரு மாங்கனியைக் கணவனுக்குப் படைத்தார். அதனை உண்ட பரமதத்தன் அது மிகமிக இனிமையாக இருந்ததால் மற்றொன்றையும் கேட்டான். புனிதவதியார் ஒன்றும் தோன்றாமல் கடவுளை வேண்டி மாங்கனி ஒன்றினைப் பெற்றுக் கணவனிடம் கொடுத்தார். அக்கனியோ முன் உண்ட கனியை விடப் பலமடங்கு இனிமையாக இருப்பதைக் கண்டு அவன், "இது நான் அனுப்பிய பழம் அன்று; இப்பழம் உனக்கு ஏது?" என்று கேட்டான். அம்மையார் அக்கனியின் வரலாற்றைக் கூற, பரமதத்தன் வியப்படைந்து, "அப்படியாயின் மற்றொரு கனியை வரவழை, பார்க்கலாம்" என்றான். அம்மையார் முன்போலவே இறைவனை வேண்டினார். அதிமதுர மாங்கனி ஒன்று மீண்டும் அவர் கையில் வந்து நின்றது. பரமதத்தன் அதனைக் கையில் வாங்கினான். அது திடீரென்று மறைந்தது. அந்த அற்புதத்தைக் கண்ட பரமதத்தன் அவர் தெய்வப் பிறவியே என எண்ணி, அவருடன் வாழ அஞ்சி வாணிகம் செய்வதற்குச் செல்வானைப் போலக் கடற்கரைப் பட்டினமொன்றை அடைந்து அங்கு வேறு ஒரு பெண்ணைத் திருமணம் புரிந்து கொண்டு இல்லறம் இயற்றினான். அவள் வயிற்றில் பிறந்த பெண்ணுக்குப் புனிதவதி என்றே பெயரிட்டு அன்போடு வளர்த்து வந்தான்.

புனிதவதியாரின் சுற்றத்தார்கள் பரமதத்தன் பாண்டி நாட்டில் இருப்பதைக் கேள்விப்பட்டு அவரை அங்கு அழைத்துக் கொண்டு

சென்றனர். புனிதவதியாரின் வருகையை அறிந்த பரமதத்தன் தன் குடும்பத்துடன் சென்று அவரை வணங்கி வரவேற்றான். அது கண்ட உறவினர், "உன் மனைவியை நீ வணங்குவது ஏன்?" என்று கேட்டனர். பரமதத்தன் அவர்களைப் பார்த்து, 'இவர் மானிடர் அல்லர். நான் வணங்கும் தெய்வம். நீங்களும் வணங்குங்கள்' என்றான். புனிதவதியார் அச்சொற்களைக் கேட்டவுடன் இறைவனை வணங்கித் தம் கணவனுக்காகத் தாங்கியிருந்த மனித உருவம் நீங்கிப் பேயுருவம் பெற்றார்.

அதன் பின்னர், அம்மையார் பல பிரபந்தங்கள் பாடிச் சிவபெருமானைத் தரிசிக்கத் திருக்கயிலைக்குத் தலையால் நடந்து சென்றார். சிவபெருமான் அவரை, "அம்மையே வா" என்று அழைத்தார். புனிதவதியார், 'அப்பா' என்று அலறி அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினார். பின்னர் அம்மையார் அவரை நோக்கி, 'ஐயனே! எக்காலத்தும் மாறாத அன்பு வேண்டும், இனி உலகில் பிறவாதிருக்க வேண்டும். பிறந்தாலும் உன்னை என்றும் மறவாதிருக்க வேண்டும். நீ ஆடுகின்றபோது நான் மகிழ்ந்து பாடிக் கொண்டு உன் திருவடிக் கீழே இருத்தலும் வேண்டும்' என்று வேண்டினார். பின்னர் சிவபெருமானின் கட்டளைப்படி திருவாலங்காட்டிற்குச் சென்று அவருடைய திருநடனம் கண்டு சிவப்பேறு பெற்றார். அவர் சிவபெருமானால் அம்மையே என்று அழைக்கப்பட்டதால் காரைக்கால் அம்மையார் என்று வழங்கப் பெற்றார்.

திருத்தொண்டர் புராண சாரம்

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க தனதத்தன்
　　தரும்புனித வதியார்மாவின்
செங்கனிகள் திருவருளால் அழைப்பக்கண்டு திகழ்கணவன்
　　அதிசயித்துத் தேசநீங்க
பங்கவுட லிழந்துமுடி நடையாலேறி அம்மையே
　　எனநாதன் அப்பாவென்று



காரைக்காலம்மை. ர்



அப்பூதியடிகள் நாயனார்

பொங்குலவு வடகயிலை பணிந் தாலங்காட்டிற்
புனிதநடம் அனவரதம் போற்றினாரே.

25. அப்பூதி அடிகள் நாயனார்

(தை - சதயம்)

தனமா வதுதிரு நாவுக்(கு) அரசின் சரணம்என்னா
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத் தாங்கவன் வண்தமிழ்க்கே
இனமாத் தனது பெயரிடப் பெற்றவன் எங்கள்பிரான்
அனமார் வயல்திங்கள் ஊரினில் வேதியன் அப்பூதியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

அப்பூதியடிகள் சோழ மண்டலத்தில் திங்களூரில் அவதரித்தார். இவர் அந்தணர் குலத்தைச் சார்ந்தவர். திருநாவுக்கரசரை நேரில் காணாதவராயினும் அவர்மீது மிகுந்த பக்தி பூண்டு அவர் பெயரையே தம் மக்களுக்கும் வைத்திருந்தார். தாம் அமைத்த திருமடம், தண்ணீர்ப் பந்தல், சாலை, குளம் முதலியவைகளுக்கும் திருநாவுக்கரசர் பெயரையே இட்டு வழங்கினார்.

ஒரு சமயம் நாவுக்கரசர் திங்களூருக்கு வந்திருந்தார். அங்கு அப்பூதியடிகளாரின் செயல்களை அறிந்து அவரைப் பார்த்து, "உம்முடைய பெயரால் தண்ணீர்ப் பந்தர் முதலியவற்றை வையாமல் வேறொரு பெயரால் வைத்த காரணம் என்ன ?" என்றார். அப்பூதியடிகள் அவரை இன்னாரென்று அறியாதவராய், "சமண சமயத்தினின்று நீங்கிக் கல்லையே தெப்பமாகக் கொண்டு கடந்தவர் திருப்பெயரோ வேறொரு பெயர் என்று சொல்லத் தக்கது ? திருநாவுக்கரசரின் பெருமையை உணராமல் சிவ வேடந் தாங்கியுள்ள நீர் யார் ? என்றார். 'அச்சிறுமையாளன் நான்தான்' என்றார் நாவுக்கரசர். வந்தவர் நாவரசரே என்பதை அறிந்த அப்பூதியடிகள் இன்பக் கடலில் திளைத்து அவரடிகளில் வீழ்ந்து வணங்கினார். அவரைத் தம் இல்லத்தில் திருவமுது செய்யுமாறு வேண்டினார். அரசர் அதற்கு இணங்கினார்.

அப்பூதியடிகள் திருநாவுக்கரசருக்கு அன்னம் பரிமாறுவதற்காகத் தம் மகனாகிய மூத்த திருநாவுக்கரசை அனுப்பி வீட்டின் புறத்தில் இருக்கும் வாழை மரத்திலிருந்து இலை பறித்து வருமாறு அனுப்பினார். அச்சிறுவன் வாழையிலை பறிக்கும் போது பாம்பு ஒன்று அவனைத் தீண்டியது. அவன் அரிந்த இலையை ஒடிச் சென்று பெற்றோரிடம் கொடுத்து விஷம் தலைக்கேற மரணம் அடைந்தான். அப்பூதியடிகள் அவன் உடலை மறைத்து வைத்து திருநாவுக்கரசருக்கு அமுது பரிமாறினார்.

நாவரசர் உண்பதற்கு முன் யாவருக்கும் திருநீறு அளித்தார். அப்பூதியடிகள் கவலை கொண்டிருத்தலை இறையருளால் உணர்ந்த நாவுக்கரசர் "உங்கள் மூத்த மைந்தன் எங்கே?" என்று கேட்டார். பெற்றோர்கள் இருவரும் அவரைப் பார்த்து 'பெரியீர்' அவன் இப்போது இங்கு உதவ மாட்டான்' என்றனர். நாவரசர் செய்தியை அறிந்து ஆலயத்துக்குச் சென்று 'ஒன்றுகொலாம்' என்னும் திருப்பதிகம் பாடினார். பிள்ளை தூங்கி விழிப்பவன் போல உயிர் பெற்று எழுந்தான். பின்னர் திருநாவுக்கரசர் திருவமுது உண்டு சென்றார். அப்பூதியடிகள் திருநாவுக்கரசரின் திருவடிகளையே நினைந்து நினைந்து சிவபரம்பொருளின் திருவடிகளை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

அந்தமில் நற் திங்களூர் வருமப்பூதி அருமறையோர்
திருநாவுக் கரசினாமம்
பந்தரிடை யெழுதக்கண் டரசுமெய்தப் பணிந்துபரி
கலநேடிப் படப்பை சேர்ந்த
மைந்தனுயிர் உயர்கதலி யிலைமேற்றுஞ்சும் வாளரவு
கவரவுடல் மறைத்தல்கேட்டுச்
சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தால் தீர்த்துத்
திருவமுது செயவருளைச் சேர்ந்துளாரே.

26. திருநீலநக்க நாயனார்

[வைகாசி - மூலம்]

பூதிப் புயத்தர் புயத்திற் சிலந்தி புகலும் அஞ்சி
ஊதித் துமிந்த மனைவியை நீப்பஉப் பாலவெல்லாம்
பேதித்(து) எழுந்தன காணென்று பிஞ்ஞகன் காட்டுமவன்
நீதித் திகழ்சாத்தை நீலநக் கன்எனும் வேதியனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வள நாட்டில் சாத்தமங்கை என்னும் சிற்றூரில் திருநீலநக்க நாயனார் தோன்றினார். அவர் ஓர் அந்தணர். அவர் சிவ வழிபாடு புரியும் சமயங்களில் அவருடைய துணைவியார் பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தாங்கி வருவார்.

ஒருநாள் நாயனார் அயவந்தி ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்தார். அப்போது சுவாமி மீது சிலந்தியொன்று விழுந்தது. அம்மையார் அதுகண்டு வாயால் ஊதிச் சிலந்தியை அப்புறப்படுத்தினார். நாயனார், வாய் நீர் இறைவன்மீது படுமாறு ஊதியதால் மனைவியார் மீது ஆத்திரம் கொண்டு, மனைவியாரை நோக்கி, "உன்னை நான் இனித் துறந்தேன்" என்றார். அவ்வம்மையார் பயந்து ஆலயத்திலேயே தங்கி இருந்தார். நாயனார் வீட்டுக்குச் சென்றார்.

சிவபெருமான் நாயனாரின் கனவில் தோன்றி, "அன்பனே! என் மேனியைப் பார். உன் மனைவி ஊதிய இடம் தவிர மற்ற இடம் எல்லாம் சிலந்தியின் கொப்புளங்கள் தோன்றியுள்ளன" என்றார். விழித்தெழுந்த நாயனார் மிகவும் வியப்படைந்து விரைந்து சென்று ஆலயத்திலிருந்த தம் அருமைத் துணைவியாரை அகத்துக்கு அழைத்து வந்தார். இறைவனை மனமார வாயாரப் பாடித் துதித்தார்.

ஒருசமயம், திருஞானசம்பந்தர் அவ்வூருக்கு எழுந்தருளினார். நாயனார் அவரை வரவேற்றுத் திருவமுது செய்வித்து அவரோடு வந்த

பாணரையும் உபசரித்தார். சிலகாலங் கழித்துத் திருஞானசம்பந்தரின் திருமணத்தைத் தரிசித்துச் சிவப்பேற்றை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

நீதிதரு மறையோர்வாழ் சாத்தமங்கை நீலநக்க
ரயவந்தி நிமலர்மேனி
ஊதிவிழுஞ் சிலம்பிகடிந் தவளைநீத்தார்க் குமியாத
விடநாத னுறுநோய்காட்டக்
காதன்மிகு மனைவியையு மகிழ்ந்துமேவிக் காழியர்கோ
னமுதுசெயக் களித்துவாழ்ந்து
வேதிகையிற் பாணனார்க் கிடமுநல்கி
விளங்குபெரு மணத்தரனை மேவினாரே.

27. நமிநந்தியடிகள் நாயனார்

[வைகாசி - பூசம்]

வேத மறிக்கரத் தாரூர் அரற்கு விளக்குநெய்யைத்
தீது செறிஅமண் கையர்அட் டாவிடத் தெண்புனலால்
ஏத முறுக அருகரென் றன்று விளக்கெரித்தான்
நாதன் எழில்ஏமப் பேறூர் அதிபன் நமிநந்தியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சோழநாட்டிலுள்ள ஏமாப்பேறூரில் தோன்றினார். இவர் ஓர் அந்தணர். சிவத்தொண்டிலும் சிவனடியார் தொண்டிலும் வழுவாது வாழ்ந்தவர்.

நமிநந்தியடிகள் திருவாரூரில் கோயில் கொண்டிருக்கும் வன்மீக நாதரை வழிபட்டு அரநெறி ஆலயத்தில் விளக்குகள் ஏற்ற எண்ணினார். மாலைக்காலம் நெருங்கியவுடன் அருகிலுள்ள சமணர் வீடுகளில் சென்று சிவபெருமானுக்கு விளக்கு எரிக்க எண்ணெய் வேண்டுமெனக் கேட்டார். அவர்கள், "உங்கள் கடவுளின் கையில்



திருநீலநக்க நாயனார்



நமிநந்தியடிகள் நாயனார்

நெருப்பு இருக்கும்போது விளக்கு எதற்கு?" என்று கேட்டனர். அவர்கள் பேச்சைக் கேட்டு மனம் உடைந்த நாயனார் சிவபெருமானிடம் முறையிட்டார். அப்போது, "குளத்து நீரையே கொண்டு விளக்கு எரிப்பாயாக" என்று சிவபெருமான் அசரீரியாக மொழிந்தார். அடியவர் அவ்வாறே செய்து, பொழுது விடியுமளவும் விளக்கு எரித்து வந்தார்.

ஒருசமயம் திருவாரூர் வீதி விடங்கப் பெருமான் திருவிழாவைக் கண்டு மகிழ்ந்து, பலரைத் தொட்டதால் தீட்டு உண்டாயிற்று என்று எண்ணி, அவர் மனைவியார் அழைத்தும் வீட்டினுள் செல்லாமல் வெளியிலேயே இருந்தார். அதற்குள் கடவுள் திருவருளால் அவருக்குத் தூக்கம் உண்டாயிற்று. அயர்ந்து தூங்கும்போது அவர் கனவில் சிவபெருமான் தோன்றி, "திருவாரூரில் பிறந்தவர்கள் அனைவரும் சிவகணங்களே; அதை நீ காண்பாய்" என்று கூறி மறைந்தார்.

நாயனார் விழித்தெழுந்து தாம் நினைத்தது குற்றம் என்று அறிந்து திருவாரூருக்குச் சென்று அவ்வூரில் பிறந்தவர்களையெல்லாம் சிவகணங்களாகக் கண்டு வணங்கி, அவர்கள் அந்த உருவம் நீங்கப் பெற்று முன்போல் ஆனமையும் பார்த்துச் சிவபெருமானை மனமார ஓதினார். பின்னர் தம் குடும்பத்துடன் அவர் திருவாரூரில் குடிபுகுந்து சிவப்பணி செய்து முத்தி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

நண்ணுபுகழ் மறையோர்வாழ் ஏமப்பேறூர்
நமிநந்தி யடிகடிரு விளக்குநல்க
எண்ணெய் அமணர்கள் விலக்க நீராலாரூர்
இலங்குமர ணெறியாருக் கேற்றுநாளிற்
கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள்வாழக் காவலனால்
நிபந்தங்கள் கட்டுவித்தே
அண்ணலருள் கண்டாரூ ரமர்ந்துதொண்டர்க்
காணியெனு மரசினருளடைந்துளாரே.

28. திருஞானசம்பந்தர்

[வைகாசி - மூலம்]


வையம் மகிழயாம் வாழ அமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற்(கு) அம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தையல் அருள்பெற் றனன்என்பர் ஞானசம் பந்தனையே.

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகன்நல்ல
சந்தார் அகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தில் இட்டடி யேன் கொடுத்த
அந்தாதி கொண்ட பிரான் அருட் காழியர் கொற்றவனே.


– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வளநாட்டில் சைவ நெறி தழைத்தோங்கும் சீகாழி எனும் சிறந்த தலம் ஒன்று உண்டு. அங்குச் செந்தண்மை பூண்டொழுகும் அந்தணராகிய சிவபாத இருதயர் என்னும் ஒரு பெரியார் இருந்தார். அவர்தம் வாழ்க்கைத் துணைவியார் பகவதியார் என்னும் பண்புடைய நங்கையார். இருவரும் சிவனடியை மறவாத சிந்தையாளர்கள். இருவரின் இல்லறமென்னும் நல்லறத்தின் பயனாக ஓர் அழகிய புதல்வர் தோன்றினார். பெற்றோர் தம் அருமைப் பிள்ளையாரை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள்.

பிள்ளையார் அறிவிலும் திருவிலும் உயர்ந்து விளங்கினார். பிள்ளையாருக்கு வயது மூன்று ஆயிற்று. ஒருநாள் சிவபாத இருதயர் பிள்ளையாரையும் உடன் கூட்டிக்கொண்டு கோயிலுக்குச் சென்றார். குழந்தையைக் கரையில் இருக்கச் செய்து தாம் மட்டும் குளத்தில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்தார். பிள்ளையார் தம் தந்தையைக் காணாமல் திகைத்து, "அம்மா, அப்பா" என்று அழத் தொடங்கினார். அவர் அழுகை கேட்டுச் சிவபெருமான் பார்வதியோடு அவர் முன்பு தோன்றினார். உடனே பார்வதி தேவியார் ஒரு பொற்கிண்ணத்தில்



திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்



திருஞானசம்பந்தர் அடியார்களுடன் சோதியில் கலந்தது.

அவருக்கு ஞானப்பால் கொடுத்தார். அந்தப் பாலை உண்டதும் பிள்ளையாரின் அறிவும் வளர்ந்தது. அவர் அழுகையை நிறுத்தி இறைவனையே எண்ணிக் கொண்டிருந்தார்.

சிவபாத இருதயர் நீராடியபின் குளக்கரைக்கு வந்து குழந்தையின் வாயில் பால் வடிவதைக் கண்டார். ஆத்திரம் கொண்டார். "உனக்குப் பால் தந்தவர் யார்?" என்று ஒரு கொம்பை எடுத்து ஓங்கினார். பிள்ளையார் வானத்தில் சுட்டிக் காட்டிச் சிவபெருமானின் அருளால் உமாதேவியார் தமக்குப் பால் கொடுத்த தன்மையை ஒரு பதிகமாகப் பாடினார்.

அத் தெய்வத் திருப்பாட்டைக் கேட்டுச் சிவபாத இருதயர் பெருவியப்புக் கொண்டார். அன்று முதல் பிள்ளையாருக்குத் திருஞான சம்பந்தர் என்பது பெயராயிற்று.

திருஞானசம்பந்தர் இளம் பருவத்திலேயே தம் தந்தையாரின் தோள்மேல் ஏறிக்கொண்டு பற்பல சிவத்தலங்களையும் கண்டு பதிகங்கள் பாடினார். திருநீலகண்டப் பெரும்பாணர் என்பவரும் எப்போதும் அவருடனே சென்று அவர் பாடல்களை யாழில் இட்டு வாசித்தார்.

சம்பந்தர் பற்பல தலங்களுக்கும் சென்று அற்புதங்கள் பல நிகழ்த்தினார். சிவபெருமானின் திருவருளால் அவருக்குத் திருவரத்துறை என்னும் ஊரில் முத்துச் சிவிகையும் முத்துக் குடையும் முத்துச் சின்னங்களும் கிடைத்தன. தகுந்த வயதில் சம்பந்தருக்கு உபநயனமும் நடைபெற்றது.

பின்னர் அவர் திருவையாறு முதலிய தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருப்பாச்சிலாச்சிராமம் என்னும் ஊரை அடைந்தார். அங்குக் கொல்லி மழவன் என்பவனுடைய மகள் முயலகன் என்னும் நோயால் துன்புற்றிருப்பதைக் கண்டு பதிகம் பாடி அந்நோயை நீக்கினார். சம்பந்தர் அவ்வூரை விட்டுப் புறப்பட்டுத் திருவலஞ்சுழி, பட்டீச்சுரம்

முதலிய தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை அடைந்தார். அங்குத் தம் தந்தையார் சிவபாத இருதயர் செய்ய விரும்பிய யாகத்திற்குப் பொருள் இல்லாமையை உணர்ந்து இறைவனின் அருளை வேண்டிப் பதிகம் பாடினார். இறைவன் திருவருளால் ஒரு பூதம் அவருக்கு வேண்டிய பொன்னைக் கொண்டுவந்து கொடுத்துச் சென்றது.

ஒருசமயம் திருஞானசம்பந்தர் திருமருகல் என்னும் ஊருக்குச் சென்றிருந்தார். அங்குப் பாம்பினால் தீண்டப்பட்டு ஒரு வணிகன் உயிர் துறந்தான். அதனால் அவன் மனைவி கதறி அழுவதைக் கண்ணுற்று மனம் இரங்கிச் சிவபெருமானைக் குறித்து ஒரு பதிகம் பாடினார். அந்த வணிகன் தூங்கி எழுபவனைப்போல உயிர் பெற்று விழித்தெழுந்தான். அதன் பின்னர், சம்பந்தர் திருவாரூர், திருப்புகலூர் முதலிய ஊர்களுக்குச் சென்று திருவீழிமிழலை அடைந்தார். அங்கு திருநாவுக்கரசரைக் கண்டு அளவளாவினார். இருவரும் திருமறைக்காடு என்னும் வேதாரணியத்தை அடைந்தனர். அங்குச் சிவாலயம் வேதங்களால் எப்போதும் மூடப்பட்டிருந்தது. திருநாவுக்கரசர் பதிகம் பாடிக் கதவைத் திறப்பித்தார். இருவரும் இறைவனை மனமார வழிபட்டனர். பின்னர் சம்பந்தர் பதிகம் பாடிக் கதவை அடைப்பித்தார். அன்று முதல் அக்கதவும் திறப்பதும் அடைப்பதுமாக இருந்தது.

அக்காலத்தே பாண்டியன் சமண சமயத்தில் மூழ்கிக் கிடந்தான். அவன் மனைவியாராகிய மங்கையர்க்கரசியாரும், அமைச்சராகிய குலச்சிறை நாயனாரும் சைவ மதத்தைத் தழுவிச் சிவத் தொண்டில் ஈடுபட்டிருந்தனர். அவர்களிருவரின் வேண்டுகோளுக்கிணங்கி, சம்பந்தர் பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையை அடைந்தார். அவர் தம்மை வாதில் வெல்வதற்கு வந்திருப்பதாக அறிந்த சமணர்கள், அவர் தங்கியிருந்த மடத்துக்குத் தீ வைத்தனர். அத்தீ அவரை ஒன்றும் செய்யவில்லை. அது வெப்பு நோயாகி அரசனைப் பற்றிக் கொண்டது. சமணர்கள் அந்த நோயைத் தீர்க்க எவ்வளவோ பாடுபட்டும்

பயனில்லை. சம்பந்தர் 'மந்திரமாவது நீறு' என்ற பதிகம் பாடித் திருநீறு பூசினார். அரசனின் வெப்பு நோய் நீங்கிற்று.

பின்னர் சமண சமய ஆசாரியர்களுடன் திருஞானசம்பந்தர் அனல் வாதத்திலும் புனல் வாதத்திலும் வெற்றி பெற்றார். பாண்டியன் அன்றுமுதல் நல்லறிவு வாய்ந்து சைவ சமயத்தைத் தழுவினான். சம்பந்தர் பாண்டியனிடம் விடை பெற்றுச் சீகாழி வந்தடைந்தார். பிறகு அத்தலத்தை விட்டுப் புறப்பட்டு திருக்களர், பாதாளீச்சுரம் முதலிய தலங்களை வழிபட்டுச் சென்றார். பிறகு போதிமங்கை என்னும் ஊரில் புத்தநந்தி என்பவன் அவரை எதிர்த்ததால் அவன் தலையில் இடிவிழுந்து மாண்டான். அவருடன் வாதிட்ட பௌத்தர்கள் எல்லோரும் தோல்வியடைந்து சைவர்கள் ஆனார்கள். பின்பு சம்பந்தர் திருவோத்தூரை அடைந்தார். அங்கு ஒரு சிவனடியார் வைக்கும் பனை மரங்கள் எல்லாம் ஆண் பனைகளாகிக் காயாமல் இருப்பதைக் கண்டு சமணர்கள் அவரை இகழ்ந்தார்கள்.

திருஞானசம்பந்தர் 'பூத்தேர்ந்தாயன' என்னும் பதிகம் பாடி அவற்றைப் பெண் பனைகளாக மாற்றிக் காய்க்கும்படி செய்தார். மயிலாப்பூரில் சிவநேசச் செட்டியார் என்பவர் திருஞானசம்பந்தருக்கு மணம் முடிக்க எண்ணி இருந்த தம் பெண் பாம்பு கடித்து இறந்ததால் அவள் எலும்புகளைக் குடத்திலிட்டுச் சம்பந்தர் மயிலாப்பூருக்கு வந்தபோது அவரிடம் அக்குடத்தைப் படைத்தார். திருஞானசம்பந்தர் இறைவன் திருவருளை எண்ணி 'மட்டிட்ட புன்னை' என்ற பதிகத்தைப் பாடினார். பூம்பாவை என்னும் அப்பெண் உயிருடன் எழுந்தாள். சம்பந்தர் தம்மால் உயிர்ப்பிக்கப்பட்ட பெண்ணை மணக்க மறுத்துவிட்டார்.

அதன் பின்னர் திருஞானசம்பந்தர் சீகாழிக்கு மீண்டார். அங்கு ஒரு நல்ல நாளில் நம்பாண்டார் நம்பி என்பவரின் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் செய்து கொண்ட அன்றே சம்பந்தர் திருநல்லூர் பெருமணத்திலுள்ள சிவாலயத்தில் தம் மனைவியாருடன் சென்று இறைவனை வழிபட்டார். அங்கு தோன்றிய

பேரொளியில் ஞானசம்பந்தர் தம் மனைவியாருடன் சென்று சுற்றத்தாரும் அடியார்களும் பின் தொடர மரணமில்லாப் பெருவாழ்வை அடைந்தார். திருமணத்துக்கு வந்திருந்தோரும் அப்பேரொளியில் கலந்து பேரின்பப் பெருவாழ்வை அடைந்தார்கள்.

திருத்தொண்டர் புராண சாரம்

காழிநகர்ச் சிவபாத விதயர்தந்த கவுணியர்கோன்
அமுதுமையாள் கருதியூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி யிலங்கியநித்
திலச்சிவிகை யிசையவேறி
வாழுமுய லகனகற்றிப் பந்தரேய்ந்து வளர்கிழிபெற்
றரவின்விட மருகற்றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம்பிணித்து மீனவன்
மேனியின் வெப்பு விடுவித்தாரே.

ஆறெரியிட் டெடுத்த ஏடவைமுன்னேற்றி ஆற்றிலிடும்
ஏடெதிர் போயணைய ஏற்றி
ஓரமணர் ஒழியாமே கழுவிலேற்றி ஓதுதிருப்
பதிகத்தால் ஓடமேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையிலேற்றிக் காயாத
பனையின்முது கனிகளேற்றி
ஈரமிலா வங்கமுயிர் எய்தவேற்றி
யிலங்குபெரு மணத்தரனை எய்தினாரே.

29. ஏயர்கோன் கலிக்காம நாயனார்

[ஆனி - ரேவதி]

கொற்றத் திறல்எந்தை தந்தைதன் தந்தைஎங் கூட்டமெல்லாம்
தெற்றச் சடையாய் நினதடி யேம்திகழ் வன்தொண்டனே
மற்றிப் பிணிதவிர்ப் பான் என்(று) உடைவாள் உருவிஅந்நோய்
செற்றுத் தவிர்கலிக் காமன் குடிஏயர் சீர்க்குடியே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழவள நாட்டில் பெருமங்கலம் என்னும் திருப்பதியில் கலிக்காம நாயனார் தோன்றினார். இவர் வேளாளர் மரபினர் திருப்புன்கூர்ச் சிவபிரானிடத்தே அளவிலா அன்பு பூண்டு வழிபட்டவர்.

ஒருசமயம் சுந்தரமூர்த்தி நாயனார் சிவபிரானையே தமது மூத்த மனைவியாரிடம் தூதாக அனுப்பினார் என்ற செய்தி கேட்டு, அதுமுதல் சுந்தரரிடத்தில் கலிக்காமர் வெறுப்புக் கொண்டிருந்தார். இச்செய்தியைக் கேள்வியுற்ற சுந்தரர், தாம் செய்த செயல் தவறு என்று உணர்ந்து சிவபிரானிடம் முறையிட்டார். சிவபிரான் தம் அன்பர்கள் இருவரும் நட்புக் கொள்ளுமாறு செய்ய விரும்பிக் கலிக்காமருக்குச் சூலை நோய் தந்தருளினார்.

ஏயர்கோன் கலிக்காமர், நோய் நீங்குமாறு இறைவனை வேண்டினார். சிவபெருமான் அவர்முன் தோன்றி, "இந்நோய் சுந்தரனால் நீங்கும்" என்று கூறி மறைந்தார். அவ்வாறே சுந்தரரிடமும் சென்று கலிக்காமரின் நோயைத் தீர்க்குமாறு கட்டளையிட்டார். சுந்தரர் மனம் மகிழ்ந்து கலிக்காமரைக் காணச் சென்றார். அவரது வருகையைக் கேள்விப்பட்ட கலிக்காமனார் அவரைப் பர்ர்க்க மனமின்றி உடைவாளால் தம் வயிற்றைக் கிழித்துக் கொண்டு உயிர் துறந்தார். நம்பியாரூரர் "நானும் உயிர் துறப்பேன்" என்று உடைவாளை எடுத்தார். இறைவன் திருவருளால் கலிக்காமர் உயிர் பெற்று எழுந்து ஆரூரரைத் தடுத்தார். இருவரும் நண்பராயினர். சுந்தரர் திருவாரூருக்குத் திரும்பினார். ஏயர்கோன் கலிக்காமர் திருத்தொண்டு புரிந்து சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

ஏதமில்சீ வளாளர்பெரு மங்கலத்துள் ஏயர்கோன்
கலிக்காமர் இறையைநேரே
தூதுகொளு மவனணுகில் என்னா மென்னும்
துணிவினர்பா லிறைவனருஞ்சூலையேவி



ஏயர்கோன் கலிக்காம நாயனார்



திருமூல நாயனார்

வேதனைவன் றொண்டன்வரி னீங்குமென்ன
வெகுண்டுடல்வாள் கொடுதுறந்து மேயநாவற்
போதகமுமுடலிகழ வெழுந்து தாழ்ந்து
போற்றியது விலக்கியருள் பொருந்தினாரே.

30. திருமூல நாயனார்

[ஐப்பசி - அசுவனி]

குடிமன்னு சாத்தனூர்க் கோக்குலம் மேய்ப்போன் குரம்பைபுக்கு
முடிமன்னு கூனற் பிறையாளன் தன்னை முழுத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டென்உச்சி
அடிமன்ன வைத்த பிரான்மூலன் ஆகின்ற அங்கணனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருக்கயிலையில் வாழ்ந்த ஒரு சித்தர். இவர் நிலவுலகத்தில் அகத்திய முனிவருடன் வாழ விரும்பிப் பல தலங்களைக் கண்டு வணங்கித் திருவாவடுதுறையை அடைந்தார். அங்கு மூலன் என்ற இடையன் இறந்து கிடக்க அவன் பசுக்களின் பொருட்டுத் தம் உடலை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி அவன் உடலில் நுழைந்தார். மூலனின் மனைவி அவரைத் தன் கணவனாகவே எண்ணி நெருங்கினாள். பின்னர் சிவயோகியார் என்று அறிந்து அகன்றாள். மூலன் உடம்பில் நுழைந்ததால் இவருக்குத் திருமூலர் என்ற பெயர் வந்தது. இவர் பாடிய மூவாயிரம் திருப்பாடல்களின் தொகுப்பே 'திருமந்திரம்' எனப்படும். பின்னர் சிவபெருமானின் திருவருளினால் திருமூலர் திருக்கயிலையை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கயிலாயத் தொருசித்தர் பொதியிற்சேர்வார் காவிரிசூழ்
சாத்தனூர் கருதுமூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயரநீடும் பசுக்களைக்கண்டு
அவனுடலிற் பாய்ந்துபோத

அயலாகப் பண்டையுடல் அருளால்மேவி யாவடுதண்
துறையாண்டுக் கொருபாவாகக்
குயிலாரும் அரசடியி லிருந்துகூறிக்
கோதிலா வடகயிலை குறுகினாரே.

31. தண்டியடிகள் நாயனார்

(பங்குனி - சதயம்)

கண்ணார் மணிஒன்றும் இன்றிக் கயிறு பிடித்தரற்குத்
தண்ணார் புனல்தடம் தொட்டலும் தன்னை நகும்அமணர்
கண்ணாங் கிழப்ப அமணர் கலக்கங்கண் டம்மலர்க்கண்
விண்ணா யகனிடைப் பெற்றவன் ஆரூர் விறல்தண்டியே.


– திருத்தொண்டர் திருவந்தாதி

தண்டியடிகள் நாயனார் திருவாரூரில் பிறவிக் குருடராகத் தோன்றியும் சிவத்தொண்டில் சிறிதும் வழுவாது வாழ்ந்து வந்தார். இவர் ஒருசமயம் கமலாலயக் குளத்தில் நீர் கு றைவாக இருப்பது கண்டு கீழ்க் கரைக்கும் மேல் கரைக்கும் தறி நட்டு அதில் கயிறு கட்டி அந்தக் கயிற்றையே கண்ணாகக் கொண்டு குளத்தைச் சீர்திருத்தினார். அது கண்டு அங்கிருந்த சமணர்கள், "நீர் இப்படிச் செய்வதால் குளத்தில் உள்ள உயிர்கள் இறந்து போகுமே, கண் தான் தெரியவில்லை, காதுகளும் கேட்கவில்லையோ?" என்றார்கள். அவர் வைத்திருந்த கூடை, மண்வெட்டி முதலியவற்றையும் பிடுங்கி எறிந்தார்கள்.


தண்டிய்டிகள் உள்ளம் உடைந்து இறைவனிடம் முறையிட்டார். சமணர்கள் குருடர்களாகி ஊரை விட்டு அகன்றனர். தண்டியடிகள் இவ்வாறு தொண்டு செய்து இறைவன் திருவடியடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

திருவாரூர் வருந்தண்டி யடிகள்காட்சி சேராதார்
குளந்தொட்டற் கமணர்சீறிக்



தண்டியடிகள் நாயனார்



மூர்க்க நாயனார்

குருடாநீ முன் செவிடுங் கூடிற்றென்று
குறித்தறியைப் பறித்தெறியக் கொதித்துத்தங்கண்
அருளாலே விழித்தெவரு மந்தராக அமணர்கலக்
கம்பலகண் டவர்கள் பாழிப்
பருவான கற்பறித்தா விக்கரையுங்கட்டிப்
பரனருளா லமருலகம் பற்றினாரே.

32. மூர்க்க நாயனார்
[கார்த்திகை - மூலம்]

தண்டலை சூழ்திரு வேற்காட்டூர் மன்னன் தகுகவற்றால்
கொண்டவல்லாயம்வன்சூதரைவென்றுமுன் கொண்டபொருள்
முண்டநன் னீற்றன் அடியவர்க் கீபவன் மூர்க்கனென்பர்
நண்டலை நீரொண் குடந்தையில் மேவுநற் சூதனையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் தொண்டை மண்டலத்தில் திருவேற்காடு என்ற ஊரில் வேளாளர் குலத்தில் பிறந்தார். சிவனடியார்களுக்கு அமுது படைக்கச் செல்வம் குறைந்ததால் இவர் சூதாடி வென்ற பொருளைக் கொண்டு அடியவர்களை ஆதரித்து வந்தார்.

ஒருசமயம் கும்பகோணம் சென்று பலரிடம் சூதாடி வென்று அப்பொருளால் சிவனடியார்களுக்கு அன்னமிட்டுத் தாம் கடைப்பந்தியில் இருந்து உண்டார். சூதாட்டத்தில் தம்முடன் மாறு பேசுவோரைக் கையிலிருக்கும் உடைவாளால் குத்தி வந்ததால் இவரை மூர்க்க நாயனார் என்று அழைத்தார்கள். திருப்பணிகள் பல புரிந்து இவர் சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

தொண்டைவள நாட்டுவளர் வேற்காட்டூர்வாழ்
தொல்லுழவர் நற்சூதர் சூதுவென்று

கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுதளிக்குங்
கொள்கையினார் திருக்குடந்தை குறுகியுள்ளார்
விண்டிசைவு குழறுமொழி வீணர்மாள வெகுண்டிடலான்
மூர்க்கரென விளம்புநாமம்
எண்டிசையு மிகவுடையார் அண்டர்போற்றும்
ஏழுலகும் உடனாளும் இயல்பினாரே.

33. சோமாசி மாற நாயனார்

[வைகாசி - ஆயில்யம்]

சூதப் பொழில் அம்பர் அந்தணன் சோமாசி மாறன்என்பான்
வேதப் பொருள்அஞ் செழுத்தும் விளம்பியல் லால்மொழியான்
நீதிப் பரன்மன்னு நித்த நியமன் பரவையென்னும்
மாதுக்குக் காந்தன்வன் தொண்டன் தனக்கு மகிழ்துணையே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வளநாட்டில் திருவம்பர் என்னும் ஊரில் சோமாசி மாறனார் தோன்றினார். இவர் சிவ வேள்விகள் பல செய்து திருவாரூரை அடைந்தார். அங்குச் சுந்தரமூர்த்தி நாயனாரை வழிபட்டுச் சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

அம்பர்நக ரந்தணர்சோ மாசிமாறர் அன்பர்களாம்
யாவர்க்கும் அன்பின் அமுதளிப்பார்
உம்பர்நிகழ் வகையாகம் பலவுஞ்செய்யு முண்மையினார்
ஐந்தெழுத்து மோவாநாவார்
நம்பர்திகழ் திருவாரூர் நயந்துபோற்று
நாவலர்கோன் அடிபரவு நன்மையாலே
இம்பர்தொழ உம்பர்பணிந் தேத்த மேலை
ஏழுலகும் உடனாளும் இயல்பினாரே.



சோமாசி மாற நாயனார்



சாக்கிய நாயனார்

34. சாக்கிய நாயனார்

[மார்கழி - பூராடம்]

தகடன ஆடையன் சாக்கியன் மாக்கல் தடவரையின்
மகடனந்தாக்கக் குழைந்ததிண் தோளர்வண் கம்பர்செம்பொன்
திகழ்தரு மேனியிற் செங்கல் எறிந்து சிவபுரத்துப்
புகழ்தரப் புக்கவன் ஊர்சங்க மங்கை புவனியிலே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சங்கமங்கை என்னும் சிற்றூரில் பௌத்தர் குலத்தில் அவதரித்தார். இவர் தமது சமயம் பொய் என்று அறிந்து புறத்தே புத்த சமயத்தவரைப் போல நடித்து அகத்தே சிவபெருமானை வழிபட்டு வந்தார்.

சாக்கிய நாயனார் கற்களையே மலராக எண்ணித் தினந்தோறும் சிவலிங்கத்தின் மீது அவற்றை எறிந்து வழிபட்டு வந்தார். இறைவனும் அதனை அன்பின் செயல் என ஏற்றுக் கொண்டார்.

ஒருநாள் சாக்கியர் சிவலிங்கத்தின் மீது கல்லெறிந்து வழிபட மறந்து உணவு உண்ணச் சென்றார். பின்னர் நினைவு தோன்றி ஓடிச் சென்று, கல் ஒன்றை எடுத்து சிவபெருமான் மீது எறிந்தார், சிவபெருமான் இடபவாகனத்தின் மீது காட்சி தந்து அவரை ஆட்கொண்டார்.

திருத்தொண்டர் புராண சாரம்

சங்கமங்கை வரும்வேளாண் டலைவர்காஞ்சிச்
சாக்கியரோ டியைந்தவர்ந் தவறுஞ்சைவத்
துங்கமலி பொருளுமுணர்ந் தந்தவேடந்
துறவாதே சிவலிங்கந்தொழு வோர்கண்டோர்
அங்கன்மலர் திருமேனி அழுந்தச்சாத்தி யமருநாண்
மறந்தொருநா ளருந்தாதோடிச்
செங்கலெறிந் திடுமளவின் மகிழ்ந்தநாதன்
திருவருளா லமருலகஞ் சேர்ந்துளாரே.

35. சிறப்புலி நாயனார்

[கார்த்திகை - பூராடம்]

புவனியில் பூதியும் சாதன மும்பொலி வார்ந்துவந்த
தவநிய மற்குச் சிறப்புச் செய் தத்துவ காரணனாம்
அவனியில் கீர்த்தித்தென் னாக்கூர் அதிபன் அருமறையோன்
சிவனிய மந்தலை நின்றதொல் சீர்நஞ் சிறப்புலியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருவாக்கூர் என்னும் ஊரில் அந்தணர் குலத்தில் தோன்றிச் சிவபக்தியிலும் சிவனடியார் பக்தியிலும் சிறந்து விளங்கினார். திருவைந்தெழுத்தை ஓதி வேள்வி புரிந்து அதன் பயனைச் சிவபெருமானுக்கே தத்தம் செய்து அவர் திருவடி நிழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

திருவாக்கூ ரருமறையோர் உலகமேத்துஞ் சிறப்புலியார்
மறப்புலியா ருரிமேற் செங்க
ணரவார்த்தார் வருமேற்றார்க் கன்பரானார்க்
கமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்தமார்பர்
பெருவாக்கான் மறைபரவி யாகம்போற்றும்
பெற்றியினா ரைந்தெழுத்தும் பிறழாதோதிக்
கருவாக்கா லிறைவன்றா ளிணைகள்சேர்ந்த
கருத்தினாரெனையாவுந் திருத்தினாரே.

36. சிறுத்தொண்ட நாயனார்

[சித்திரை - பரணி]

புலியின் அதளுடைப் புண்ணியற்(கு) இன்னமு தாத்தனதோர்
ஒலியின் சதங்கைக் குதலைப் புதல்வன் உடல்துணித்துக்

கலியின்வலிகெடுத்தோங்கும் புகழ்ச்சிறுத் தொண்டன்கண்டீர்
மலியும் பொழில்ஒண்செங் காட்டம் குடியவர் மன்னவனே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருச்செங்காட்டங்குடியில் மாமாத்திரர் குலத்தில் தோன்றிப் பரஞ்சோதியார் என்னும் பெயருடன் வேதமும் வில்வித்தைகளும் கற்றுச் சோழ மன்னனின் அமைச்சராய் விளங்கினார். இவர் ஒருசமயம் வடநாடு சென்று வாதாபியை வென்று மிகுந்த திறைகள் கொண்டு வந்தார்.

அரசன் பரஞ்சோதியாருக்குத் திரளான செல்வம் கொடுத்து சிவத்தொண்டில் ஈடுபடுத்தினான். இவர் வெண்காட்டு நங்கை என்னும் தம் மனைவியாருடன் இல்லறம் நடத்தி வந்தார். தம்மைத் தொண்டர்களில் சிறியவர் என்று மதித்துச் சிறுத்தொண்டர் என்னும் திருப்பெயர் பெற்றார்.

சிவபெருமான் சிறுத்தொண்டரின் அன்பை உலகறியச் செய்ய விரும்பிப் பைரவ வேடம் பூண்டு அவர் இல்லத்தை அடைந்தார். அவர் நாயனாரை நோக்கி, ஒரு தாய்க்கு ஒரு மகனாக அங்கம் பழுதில்லா மைந்தன் ஒருவனை அறுத்துக் கறி சமைத்துத் தர வேண்டும் என்று கேட்டார். சிறுத்தொண்டர் சிறிதும் மனம் தளராமல் தன் மகன் சீராளனை அவர் விரும்பியபடி செய்து உண்கலத்தில் இட்டார். பைரவர் எல்லா உறுப்பும் சரியாகச் சமைக்கப் பட்டனவா என்று கேட்க நாயனார் தலையைத் தவிர எல்லா உறுப்புகளும் சமைக்கப்பட்டன என்றார்.

பைரவர் அதுகேட்டு அதனையும் சமைத்துக் கொண்டு வருக என்றார். அவ்வாறு நேரும் என்று முன்னரே எண்ணியிருந்த தோழி ஒருத்தி முன்பே சமைத்து வைத்திருந்த தலைக்கறியையும் படைத்தாள். பைரவர் நாயனாரையும் தம்முடன் உட்கார்ந்து உண்ணுமாறு கட்டளையிட்டார். நாயனாரும் அதற்கு உடன்பட்டார். உண்பதற்கு முன் பைரவர் அவரைத் தடுத்து, 'உமக்கு மைந்தர் இருப்பின் அழையுங்கள்'



சிறப்புலி நாயனார்



சிறுத்தொண்ட நாயனார்

என்றார். நாயனார் அவர் சொல்லைத் தட்டாமல் தெருவில் அவர்தம் மனைவியாருடன் சென்று 'சீராளா' என்று அழைத்தார்.

அப்போது சிவபெருமானின் திருவருளால் சீராளன் பள்ளிக்கூடத்திலிருந்து ஓடிவருபவன் போல ஓடி வந்தான். அன்னையார் அவனைத் தழுவி எடுத்து கணவர் கையில் கொடுத்தார். நாயனார் சிறுவனை எடுத்துக் கொண்டு வீட்டில் நுழைந்தார். அதற்குள் அங்கு இலைகளிலிருந்த உணவுகளுடன் பைரவர் மறைந்து விட்டார். சிவபெருமான் இடபவாகனத்தில் ஏறிக் காட்சி கொடுத்துச் சிறுத்தொண்டரைக் குடும்பத்தினருடன் திருவடியில் சேர்த்துக் கொண்டார்.

சிறுத்தொண்டரின் தொண்டு சிறியதொரு தொண்டோ? பெருந்தொண்டன்றோ?

திருத்தொண்டர் புராண சாரம்

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங்குடிவாழ்
படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ் சோதியார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழிநாடன் திருவருள்சேர்ந்
தவர் வளருஞ் சீராளன்றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத்திடப்பின்
னன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட்டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்துமக வருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தினாரே.

37. கழறிற்றறிவார் நாயனார்

(ஆடி - சுவாதி)

மன்னர் பிரான்எதிர் வண்ணான் உடல்உவர் ஊறிநீறார்
தன்னர் பிரான்தமர் போல வருதலும் தான்வணங்க
என்னர் பிரான் அடி வண்ணான் எனஅடிச் சேரன்என்னும்
தென்னர் பிரான்கழ றிற்றறி வான் எனும் சேரலனே.

சேரற்குத் தென்னா வலர்பெரு மாற்குச் சிவன்அளித்த
வீரக் கடகரி முன்புதன் பந்தி இவுளி வைத்த
வீரற்கு வென்றிக் கருப்புவில் வீரனை வெற்றிகொண்ட
சூரற்கு எனதுள்ளம் நன்றுசெய் தாய் இன்று தொண்டுபட்டே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சேரநாட்டில் மகோதை என்னும் நகரத்தை ஆண்டு வந்த சேரமன்னர். இவருக்குச் சேரமான் பெருமாள் நாயனார் என்னும் வேறு பெயரும் உண்டு. இறைவன் திருவருளால் எல்லா உயிர்களும் பேசுவதை அறியும் தன்மை பெற்றிருந்ததால் இவரைக் கழறிற்றறிவார் என்று அழைத்தார்கள்.

ஒருநாள் இவர் யானைமீது பவனி செல்கையில் வண்ணான் ஒருவன் தன் தலையில் தாங்கிய உவர்மண் மழைநீரால் கரையப் பெற்று உடம்பெல்லாம் திருநீறு பூசியவன் போல் இருந்தான். அவன் சிவவேடத்தினை நினைவூட்டியதாகக் கூறி அவனை வணங்கிச் சென்றார்.

சேரமான் பெருமாள் தினந்தோறும் பூசை வேளையில் நடராசப் பெருமானின் சிலம்பொலி கேட்பது வழக்கம். ஒருநாள் அவர் சிவபெருமானிடமிருந்து திருமுகம் கொணர்ந்த பாணபத்திரர் என்பவருக்கு வேண்டிய பொருள்களை அளித்தனுப்பினார். மற்றொரு சமயம், சிவபெருமான் வன்றொண்டர் பாடலைக் கேட்டு இன்புற்றிருந்ததால் சேரமான் பெருமாள் வழக்கம்போல் சிலம்போசை கேளாமல் காலந்தாழ்த்திக் கேட்டுத் திகைத்தார். பின்னர் சிவபெருமானால் செய்தியறிந்து தில்லை சென்று சுந்தரமூர்த்தியை வணங்கிப் பொன் வண்ணத்தந்தாதி பாடினார். பின்னர் திருவாரூர் சென்று, திருவாரூர் மும்மணிக்கோவை பாடித் துதித்தார்.

அவர் சுந்தரருடன் பல தலங்களுக்கும் சென்று இறைவனை வழிபட்டார். சுந்தரர் ஒரு சமயம் திருவஞ்சைக் களத்துச்

சிவபெருமானை வழிபட்டார். இறைவன் கட்டளைப்படி வெள்ளை யானையின்மீது ஏறிச் சிவகணங்கள் எதிர்கொள்ளத் திருக்கயிலைக்குப் புறப்பட்டார். போகும்போது சேரமான் பெருமாளின் நினைவாகவே சென்றார். சேரமான் இதனை யோகத்தால் உணர்ந்தார். உடனே அவர் ஒரு குதிரையின்மீது ஏறித் திருவைந்தெழுத்தை ஓதினார். குதிரை விரைவாகப் பறந்து சென்றது. ஆனால் அது நந்தி தேவரால் தடைப்பட்டு நின்றது. அப்போது சேரமான் பெருமாளால் திரு ஆதிவுலா என்னும் நூல் இயற்றப்பட்டது. அவர் சிவபெருமான் திருவருளால் சிவகணங்களுள் ஒருவரானார்.

திருத்தொண்டர் புராண சாரம்

காவலர்ம கோதையார் கொடுங்கோளூர்க்கோக்
கழறியவை யறிந்தகோச்சிலம் போசைக்கருத்தார்
நாவலர்கோ ன்நண்பரடிச் சேரனென்றே நவின்றுவரும்
வண்ணானை நயந்தகோநற்
பாவலர்கோப் பாணபத் திரனால்வாய்ந்த பரமர்திரு
முகம்வாங்கிப் பணிகோவெற்பின்
மேவியகோ ஆனைக்குக் குதிரைவைத்த வீரர்கோ
எனையா ளுஞ் சேரர்கோவே.

38. கணநாத நாயனார்

[பங்குனி - திருவாதிரை]


தொண்டரை யாக்கி அவரவர்க் கேற்ற தொழில்கள் செய்வித்து
அண்டர்தங் கோன்அக் கணத்துக்கு நாயகம் பெற்றவன்காண்
கொண்டல்கொண் டேறியமின்னுக்குக் கோல மடல்கள்தொறும்
கண்டல்வெண் சோறளிக் குங்கடல் காழிக் கணநாதனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வள நாட்டில் சீர்காழி என்னும் திருப்பதியில் கணநாதர்



கழறிற்றறிவார் நாயனார்



கணநாத நாயனார்

தோன்றினார். இவர் செந்தண்மை மிக்க அந்தணர். சிவபெருமானிடம் அன்பு பூண்டவர்களிடத்தில் இவர் மிகவும் நேசம் கொண்டு உதவி புரிந்தார். திருஞானசம்பந்தரை வழிபட்டுத் திருக்கயிலையை அடைந்தார். அங்குச் சிவகணங்களின் தலைவராகி வழித்தொண்டில் நிலைபெற்று நின்றார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கந்தமலி வயற்காழி மறையோ ரேத்துங் கணநாதர்
திருத்தோணிக் கடவுளார்க்கு
நந்தவனம் பலவமைத்து மலருங்கொய்து
நற்றாமஞ் சொற்றாம நயந்துசாத்தி
வந்தவரைத் தொண்டாக்கிப் பணிகள்பூட்டி
வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்துவாழ்த்திப்
புந்திமகிழ்ந் தரனருளாற் கயிலைமேவிப்
பொருவில்கணத் தவர்காவல் பொருந்தினாரே.

39. கூற்றுவ நாயனார்
(ஆடி - திருவாதிரை)

நாதன் திருவடி யேமுடி யாகக் கவித்துநல்ல
போதங் கருத்திற் பொறித்தமை யால்அது கைகொடுப்ப
ஓதந் தழுவிய ஞாலம் எல்லாமொரு கோலின்வைத்தான்
கோதை நெடுவேற் காப்பாளன் ஆகிய கூற்றுவனே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருக்களந்தை என்னும் பதியில் உதித்த ஒரு குறுநில மன்னர். இவர் பற்பல அரசர்களையும் வென்றார். தமக்கு நவரத்தின முடியொன்றைச் சூட்டுமாறு தில்லைவாழ் அந்தணர்களை வேண்டினார். அவர்கள் மறுத்தனர். முடிவில் கூற்றுவ நாயனார் நடராசப் பெருமானின் திருவடிகளே தமது மணிமுடியாகட்டும் என்று வழிபட்டுத் துயின்றார்.

அவர் விரும்பியவாறே சிவபெருமான் கனவில் தோன்றித் தம் திருவடிகளைச் சூட்டினார். நல்லாட்சி புரிந்து வந்த கூற்றுவனார் சில ஆண்டுகள் கழித்துச் சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

குன்றாத புகழாளர் களந்தைவேந்தர் கூற்றுவனார்
மாற்றலர்மண் கொண்டுசூடப்
பொன்றாழு முடிவேண்டப் புலியூர்வாழும் பூசுரர்கள்
கொடாதகலப் புனிதனீந்த
மன்றாடுந் திருவடியே முடியாச்சூடி மாநிலங்காத்து
இறைவனுறை மாடக்கோயிற்
சென்றாசை யுடன்வணங்கிப் பணிகள்செய்து
திருவருளால் அமருலகஞ் சேர்ந்துளாரே.

40. பொய்யடிமை இல்லாத புலவர்


தரணியிற் பொய்ம்மை இலாத்தமிழ்ச் சங்க மதிற்கபிலர்
பரணர்நக் கீரர் முதல்நாற்பத் தொன்பது பல்புலவோர்
அருள்நமக் கீயும் திருஆல வாய்அரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே.

– திருத்தொண்டர் திருவந்தாதி


இவர்கள் நாற்பத்தொன்பது சிவனடியார்கள். இவர்கள் கடைச் சங்கத்தைச் சார்ந்தவர்கள். இவர்களில் நக்கீரர், கபிலர், பரணர், கல்லாடர் முதலியோர் முக்கியமானவர்கள். இவர்கள் சிவபெருமானிடம் அன்பு பூண்டு சிவபதவி அடைந்தார்கள்.

திருத்தொண்டர் புராண சாரம்

பொய்யறியாக் கபிலரொடு பரணராதிப் புலவோர்பொற்
பார்கலைகள் பொருந்தவோதிச்
செய்யுளிடை வளராசு மதுரநல்ல சித்திரம்வித்
தாரமெனத் தெரிக்குஞ்செம்மை



கூற்றுவ நாயனார்



பொய்யடிமை இல்லாத புலவர்

மெய்யுடைய தொடைகளெல்லா மன்றுளாடன்
மேவியகோனிருதாளில் விரவச் சாத்திக்
கையுடை அஞ்சலியினராய் அருளால் மேலைக்
கருதரிய அமருலகங் கைக்கொண்டாரே.

41. புகழ்ச்சோழ நாயனார்

[ஆடி - கார்த்திகை]

புலமன் னியமன்னைச் சிங்கள நாடு பொடிபடுத்த
குலமன் னியபுகழ்க் கோகன நாதன் குலமுதலோன்
நலமன் னியபுகழ்ச் சோழன தென்பர் நகுசுடர்வாள்
வலமன் னியஎறி பத்தனுக்(கு) ஈந்ததொர் வண்புகழே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சோழர் குலத்திலே அவதரித்தவர். சிவபக்தி மிக்கவர். இவர் எல்லா மன்னர்களும் தமக்குத் திறை செலுத்த அதிகன் என்னும் மலைநாட்டரசன் மாத்திரம் தமக்கு அடங்காது இருக்கிறான் என அறிந்து அவனை அடக்குதற்குத் தம் சேனையை அனுப்பினார். அவர்கள் பகைவர்களை வென்று அவர்தம் தலைகளை வெட்டி அரசன் முன் வைத்தனர். அரசன் அத்தலைகளுள் ஒன்று சடைமுடி தரித்திருப்பதை அறிந்து மனம் நொந்து, தாம் சிவபெருமானுக்குத் தீங்கிழைத்ததாக எண்ணி அத்தலையை ஒரு தட்டில் ஏந்தித் தீ வளர்த்து அதில் புகுந்தார். அதனால் இவர் சிவபெருமான் திருவடியடைந்து பேரின்பப் பெருவாழ்வை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

பொழின்மருவுங் கருவூர்வாழ் புகழார்சோழர்
போதகம்போ லென்னுயிரும் போக்குமென்றே
அழலவிர்வாள் கொடுத்தபிரா னதிகமான்மே
லடர்ந்தபெரும் படையேவ அவர்கொண்டேய்ந்த

தழல்விழிகொள் தலைகாண்பார் கண்டதோர்புன்
சடைத்தலையை முடித்தலையால் தாழ்ந்துவாங்கிக்
கழல்பரவி யதுசிரத்தி னேந்திவாய் ந்த கனல்மூழ்கி
இறைவனடி கைக்கொண்டாரே.

42. நரசிங்க முனையரைய நாயனார்
[புரட்டாசி - சதயம்]

புகழும் படிஎம் பரமே தவர்க்குநற் பொன்னிடுவோன்
இகழும் படியோர் தவன்மட வார்புனை கோலமெங்கும்
நிகழும் படிகண் டவனுக்(கு) இரட்டிபொன் இட்டவன்நீள்
திகழு முடிநர சிங்க முனையர சன்திறமே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருமுனைப்பாடி நாட்டை ஆண்ட ஓர் அரசர். சிவனடியாரிடத்தில் மிகுந்த அன்பு பூண்டு ஆதரிக்கும் உள்ளம் படைத்தவர். இவர் திருவாதிரை நாளில் வரும் சிவனடியார்களுக்கு அமுதளித்து நூறு பொன் கொடுத்து வருவார். ஒருசமயம் போலிச் சிவபக்தன் ஒருவன் வந்தான். அவனை யாவரும் இகழ்ந்து பேசினார்கள். ஆனால் நரசிங்க முனையரையர் அவனுக்கு இனிய உணவளித்து இருநூறு பொன் கொடுத்து அனுப்பினார். இவ்வாறு இவர் சிவவேடம் பூண்ட அடியவர்களிடத்திலும் அன்பு காட்டி இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

நாடுபுகழ் முனைப்பாடி நாடுமேய
நரசிங்க முனையர்புவி நயந்துமன்றுள்
ஆடுமவர் ஆதிரை நாள்அடியார்க் கம்பொன் அமுதளிப்பார்
ஒளிவெண்ணீ றணிந்துதூர்த்த
வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொனீந்து
விடுத்தழகா ராலயங்கள் விளங்கச் செய்து
தோடலர்தா ருடையபிரா னருளையாளத்
தோன்றினா ரெனையருளி ல்ஊன்றினாரே.



புகழ்ச்சோழ நாயனார்



நரசிங்க முனையரைய நாயனார்

43. அதிபத்த நாயனார்

[ஆவணி - ஆயில்யம்]

திறம்அமர் மீன்படுக் கும்பொழு தாங்கொரு மீன்சிவற்குஎன்(று)
உறவமர் மாகடற் கேவிடு வோன்ஒரு நாட்கனக
நிறமமர் மீன்பட நின்மலற்(கு) என்றுவிட் டோன்கமலம்
புறமமர் நாகை அதிபத்த னாகிய பொய்யிலியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் ஒரு செம்படவர். சோழ நாட்டில் நாகப்பட்டினத்துக் கடற்கரையை அடுத்த ஒரூரில் தோன்றினார். இவர் தினந்தோறும் தம் வலையில் அகப்படும் முதல் மீனைச் சிவபெருமானுக்கு என்று விட்டுவிடுவது வழக்கம். இவ்வாறு நடைபெறும் காலத்தில் சில நாட்கள் ஒரு மீனே கிடைத்து வந்தது. இதனால் நாயனார் வறுமைக் கடலில் ஆழ்ந்தார். பின்னர் ஒருநாள் பொன் மீன் ஒன்று அகப்பட்டது. அதனையும் நாயனார் சிவபெருமானுக்கே படைத்து விட்டார். அதனால் சிவபெருமான் இடப வாகனராகத் தோன்றிக் காட்சி தந்து மறைந்தார். இறுதியில் அதிபத்தர் இறைவன் திருவடி நிழலை எய்தினார்.

திருத்தொண்டர் புராண சாரம்

அலையாருங் கடல்நாகை நகருள்வாழும் அதிபத்தர்
பரதவர்க ளதிபர்வேலை
வலைவாரி வருமீனிற் றலைமீனீசன் வார்கழற்கே
யென்றுவிடு மரபார்பன்னாள்
தலையான தொருமீனே சாரநாளுந் தந்தொழிலால்
விடுத்துமிடி சாரச் செம்பொன்
நிலையாரு மணிநயந்த மீனொன்றெய்த
நீத்தருளால் இறைவனடி நேர்ந்துளாரே.



அதிபத்த நாயனார்



கலிக்கம்ப நாயனார்

44. கலிக்கம்ப நாயனார்

[தை - ரேவதி]

பொய்யைக் கடிந்துநம் புண்ணியர்க் காட்பட்டுத் தன்அடியான்
சைவத் திருவுரு வாய்வரத் தான்அவன் தாள்கழுவ
வையத் தவர்முன்பு வெள்கிநீர் வாரா விடமனைவி
கையைத் தடிந்தவன் பெண்ணா கடத்துக் கலிக்கம்பனே.

— திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருப்பெண்ணாகடம் என்னும் திருத்தலத்தில் தோன்றினார். இவர் ஒரு வைசியர். கலிக்கம்பர் நாடோறும் சிவனடியார் திருவடிகளை மனைவியார் நீர் வார்க்கத் தாம் தூய்மைப்படுத்தி அவர்களுக்கு அமுது படைப்பார்.

ஒருநாள் இவரிடமிருந்து நீங்கிய பணியாளன் ஒருவன் சிவனடியார் வேடம் கொண்டு வந்தான். அவனையும் இவர் வழிபடக் கால்களைப் பிடித்தார். ஆனால் இவர்தம் மனைவியார், "இவன் நம் வேலைக்காரனாவான்" என்று நீர் வார்க்காமல் கால தாமதம் செய்தார். அதனால் ஆத்திரம் கொண்ட கலிக்கம்பர் மனைவியாரின் கையை வெட்டி எறிந்தார். அடியாரைப் பூசித்து அமுது படைத்தார். சில நாட்களுக்குப் பின்னர் இவர் சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கடவுளருட் கண்ணார்கள் பயிலுந்தொல்லைக்
கடந்தைநகர் வணிகர்கலிக் கம்பரன்பர்க்
கடிமையுற வமுதளிப்பா ரடியாஎீங்கி யருளுருவா
யன்பருட னணையவேத்தி
யிடையிலவ ரடியிணையும் விளக்காநிற்ப
இகழ்மனைவி கரகமலி யிரண்டுகையும்
படியில்விழ வெறிந்தவள்செய் பணியுந்தாமே
பரிந்துபுரிந் தரனருளே பற்றினாரே.

45. கலிய நாயனார்

[ஆடி - கேட்டை]

கம்பக் கரிக்கும் சிலந்திக்கும் நல்கிய கண்ணுதலோன்
உம்பர்க்கு நாதற்(கு) ஒளிவிளக்(கு) ஏற்றற்(கு) உடல்இலனாய்க்
கும்பத் தயிலம்விற் றுஞ்செக் குழன்றும்கொள் கூலியினால்
நம்பற்(கு) எரித்த கலிஒற்றி மாநகர்ச் சக்கிரியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் தொண்டை நாட்டில் திருவொற்றியூரில் எண்ணெய் ஆட்டும் தொழிலாளர் மரபில் தோன்றினார். பெருஞ்செல்வம் படைத்துப் பெருவாழ்வில் வாழ்ந்தார். ஒற்றீசப் பெருமான் திருக்கோயிலில் உள்ளும் புறமும் இரவும் பகலும் பலப்பல திருவிளக்குகள் ஏற்றி அருந்தொண்டு புரிந்து வந்தார். செல்வம் வினைப் பயனால் குறைந்தது. செக்காட்டி அதன் பயனைக் கொண்டு திருவிளக்கேற்றினார். பின் வீட்டை விற்று விளக்கேற்றினார். மனைவியாரை விற்க முயன்றார். மனைவியாரை வாங்க யாரும் முன்வரவில்லை. எண்ணெய் வாங்க ஆற்றல் இல்லாத போது தம் தலைமயிரை எரித்துக் கோயிலில் ஒளியை உண்டாக்கினார். இவ்வாறு எதற்கும் அஞ்சாத அடியாரின் வேண்டுகோளின்படியே சிவபெருமான் திருக்கோயிலுடன் புஷ்பக விமானத்தில் திருக்கயிலையை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

தடமதில்சூழ் ஒற்றியூர் நகருள்வாழுஞ் சக்கரப்பா
டியர்குலமெய்த தவமாயுள்ளார்
படர்புகழார் கலியனார் நலியுங்கூற்றைப் பாய்ந்தவர்க்கு
விளக்கெரிக்கும்பரிவான் மற்றோர்
உடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவுநேரா துயர்மனைவி
யைக்கொள்வாருளருமின்றி
மிடறுதிர மகனிறைய வரியநாதன் வியன்கைகொடு
பிடிப்பஅருள் மேவினாரே.



கலிய நாயனார்



சத்தி நாயனார்

46. சத்தி நாயனார்

[ஐப்பசி - பூசம்]

கிரிவில் லவர்தம் அடியரைத் தன்முன்பு கீழ்மைசொன்ன
திருவில் லவரைஅந் நாவரி வோன்திருந் தாரைவெல்லும்
வரிவில் லவன்வயற் செங்கழு நீரின் மருவுதென்றல்
தெருவில் விரைகம ழுந்தென் வரிஞ்சைத் திகழ் சத்தியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சோழ நாட்டில் வரிஞ்சையூர் என்னும் திருத்தலத்தில் வேளாளர் குலதிலகராகத் தோன்றினார். சிவனடியார்களை இகழ்ந்து கூறும் பாதகர்களின் நாவை இடுக்கியினால் இழுத்துக் கத்தியால் அரிந்து திருத்தொண்டில் சிறந்து விளங்கினார். இவ்வாறு சிறப்புற விளங்கிச் சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சியூர்வாழ் வேளாளர்
சத்தியார் விமலர்பாதத்
துரியவர்க ளடிபரவு மொருமையார்நா வோவாமே
ஐந்தெழுத்தும் உரைக்குநீரார்
இருளின்மிட றுடையபிரா னடியார்தம்மை
இகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கிவாங்கி
அரியுமது திருத்தொழிலா வுடையார்மன்றுள்
ஆடியசே வடிநீழ லடைந்துளாரே.

47. ஐயடிகள் காடவர்கோன் நாயனார்

[ஐப்பசி - மூலம்]

சத்தித் தடக்கைக் குமரன்நல் தாதைதன் தானம் எல்லாம்
முத்திப் பதம்ஒரொர் வெண்பா மொழிந்து முடியரசா

மத்திற்கு மும்மைநன் தாளரற் காய்ஐயம் ஏற்றலென்னும்
பத்திக் கடல்ஐ யடிகளா கின்றநம் பல்லவனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவருக்கு ஐயடிகள் என்னும் வேறொரு பெயரும் உண்டு. இவர் காஞ்சிபுரத்தில் தோன்றினார். இவர் பல்லவர் குலத்தில் தோன்றிச் சிறந்த சிவத்தொண்டு புரிந்தவர். அரசாட்சி துன்பத்துக்கே காரணம் என்று உணர்ந்த நாயனார் தமது ஆட்சியைத் தம் மைந்தனிடம் ஒப்படைத்துவிட்டு சிவத்தலங்களைக் கண்டு வழிபடப் புறப்பட்டார். க்ஷேத்திரத் திருவெண்பா என்னும் அரிய நூலை இயற்றினார். முடிவில் சிவபதவி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

வையநிகழ் பல்லவர்தங் குலத்துவந்த மாமணிமா
நிலமுழுது மகிழ்ந்துகாக்கும்
ஐயடிகள் காடவர்கோ னருளானூல்க ளறிந்தரசு
புரிந்தடுத லமையுமென்றே
பொய்யனைய வுடல்வாழ்வு கழியுமாறு பொருந்தியிடும்
புகழ்வெண்பாப் புலியூர்மேவுஞ்
செய்யதிரு வடிமுதலாப் பதிகடோறுஞ்
செப்பினா ரென்வினைகள் தப்பினாரே.

48. கணம்புல்ல நாயனார்
(கார்த்திகை - கார்த்திகை)

நன்னக ராய இருக்குவே ளூர்தனில் நல்குரவாய்ப்
பொன்னக ராயநற் றில்லை புகுந்து புலீச்சரத்து
மன்னவ ராய சுரர்க்குநற் புல்லால் விளக்கெரித்தான்
கன்னவில் தோள்எந்தை தந்தை பிரான்எம் கணம்புல்லனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி



ஐயடிகள் காடவர்கோன் நாயனார்



கணம்புல்ல நாயனார்

இவர் இருக்குவேளூர் என்னும் வளம் மிகுந்த ஊரில் வாழ்ந்து வந்தார். இவர் திருக்கோயிலில் திருவிளக்கு ஏற்றும் திருப்பணியில் ஈடுபட்டவர். இவ்வாறு நடைபெறும் நாளில் இறைவன் திருவருளால் இவர்தம் செல்வம் குறைந்தது. அதனால் நாயனார் புலீச்சரம் சென்று தம்மிடம் மிகுதியாக உள்ள பொருள் முதலியன விற்று தீபத் திருப்பணி புரிந்து வந்தார். சில நாளில் பொருள் முட்டுப்பாடு அதிகமாகவே நாயனார் கணம்புல்லை விற்றுத் திருப்பணி புரிந்தார். ஒரு நாள் அந்தப் புல்லும் விற்பனையாகவில்லை. அதனால் நாயனார் அப்புல்லையே விளக்காக எரித்தார். அது போதாமையால் தம் திருமுடியை எரிக்கத் தொடங்கினார். அதற்குள் சிவபெருமான் காட்சி தந்து முத்தியளித்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

இலகுவட வெள்ளாற்றுத் தென்பால்வாழு
மிருக்குவே ளூரதிப ரெழிலார்சென்னிக்
கலைநிலவா ரடிபரவுங் கணம்புல்லர் தில்லைக்
கருதுபுலீச் சரத்தரற்குக் காதற்றீப
நிலைதரத்தா மிடமிடியா லொருநாட்புல்லா
னீடுவிளக் கிடல்அதுவு நேராதாகத்
தலைமயிரி னெரிகொளுவு மளவில்நாதன்
தாவாத வாழ்வருளுந் தன்மையாரே.

49. காரி நாயனார்

(மாசி - பூராடம்)

புல்லன வாகா வகைஉல கத்துப் புணர்ந்தனவும்
சொல்லின வும்நய மாக்கிச் சுடர்பொற் குவடுதனி
வில்லனை வாழ்த்தி விளங்கும் கயிலைபுக் கான்என்பரால்
கல்லன மாமதில் சூழ்கட வூரினிற் காரியையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் திருக்கடவூரில் தோன்றிய சிவனடியார் ஆவார். இவர் காரிக்கோவை என்னும் தமிழ் நூல் இயற்றி அதனைத் தமிழ் நாட்டரசர்களுக்கு விளக்கிக் கூறி அதனால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு திருப்பணிகள் புரிந்து வந்தார். முடிவில் இவர் இறைவன் திருவுள்ளப்படி முத்தியடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

திருக்கடவூர் வருமுரவோர் காரியாராந் திகழ்தொண்டர்
வண்டமிழ்நூ ல்திருந்த ஒதி
விருப்பொடுதம் பெயராற்பா விளம்பிமும்மை
வேந்தரையு முறைமுறையே மேவியங்கண்
உரைத்தவுரை நயமாக்கி யவர்பாலேய்ந்த
வொண்பொருளால் ஆலயங்கள் ஓங்கச்செய்து.
தரைக்குளருந் தவர்க்கேவ ல்தகமுன்போற்றுந்
தன்மையா லருள் சேர்ந்த நன்மையாரே.

50. நின்றசீர் நெடுமாற நாயனார்

[ஐப்பசி - பரணி]

கார்த்தண் முகில்கைக் கடற்காழி யர்பெரு மாற்கெதிரா
ஆர்த்த அமணர் அழிந்தது கண்டுமற் றாங்கவரைக்
கூர்த்த கழுவின் நுதிவைத்த பஞ்சவன் என்றுரைக்கும்
வார்த்தை யதுபண்டு நெல்வேலி யில்வென்ற மாறனுக்கே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் பாண்டி நாட்டை ஆண்ட மன்னர். இப்பாண்டிய மன்னர் சைன சமயத்தில் மூழ்கி இருத்தலைக் கண்டு இவர் தம் பத்தினியாராகிய மங்கையர்க்கரசியார் சைவ நெறிக்கு இவரைத் திருப்ப எண்ணித் திருஞான சம்பந்தரை மதுரைக்கு வரவேற்றார். அவர் சமணர்களை வாதில் வென்றார். அதனால் இப்பாண்டியர்



காரி நாயனார்



நின்றசீர் நெடுமாற நாயனார்

சைவராயினார். நெடுங்காலம் திருநீற்றுநெறி விளங்க வாழ்ந்தபின் நெடுமாறர் முத்தியடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கன்னன்மலி நெல்வேலிக் கவினார்மாறர்
கவுரியர்கோ னமணருறு கலக்கமெல்லாம்
பொன்னெயில்சூழ் சிரபுரக்கோ னணையமாற்றிப்
புனிதமிகு நீறணிந்து போற்றிசெய்து
மன்னுபுகழ் மங்கையருக் கரசியாரா மலர்மாது
மணிமார்ப மகிழ்ந்துமாற்றார்
வெந்நிடுதல் கண்டரசு புரிந்துகாழி
வேந்தரருள் சேர்ந்தபெரு விறலினாரே.

51. வாயிலார் நாயனார்

(மார்கழி - ரேவதி)

மாறா அருளரன் தன்னை மனஆ லயத்திருத்தி
ஆறா அறிவாம் ஒளிவிளக்(கு) ஏற்றி அகமலர்வாம்
வீறா மலரளித்(து) அன்பெனும் மெய்யமிர் தம்கொடுத்தான்
வீறார் மயிலையுள் வாயிலான் என்று விளம்புவரே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் தொண்டை நாட்டில் உள்ள மயிலாப்பூரில் தோன்றினார். இவர் இல்லறத்தில் இருந்து சிவமூர்த்திக்கு மனத்தினாலேயே திருக்கோயில் முதலியன அமைத்துத் திருமஞ்சனம், தூபதீபம் செய்து வந்தார். இவ்வாறு தம் மனத்தினாலேயே இவர் எல்லாத் தொண்டுகளையும் செய்து வந்த பான்மையைச் சேக்கிழார்,

மறவாமை யான் அமைத்த மனக்கோயில் உள்ளிருத்தி
உறவாதி தனை உணரும் ஒளிவிளக்குச் சுடர் ஏற்றி
இறவாத ஆனந்தம் எனும்திருமஞ் சனம் ஆட்டி
அறவாணர்க்கு அன்பு என்னும் அமுதுஅமைத் துஅர்ச் சனை செய்வார்.

என்று புகழ்ந்து பாடியுள்ளார். இத்தொண்டுகளால் இவர் பேரானந்தம் அடைந்து சிவபதவியை எய்தினார்.

திருத்தொண்டர் புராண சாரம்

ஞாயிலார் மதிற்றொண்டைநாட்டு மேன்மை
நண்ணுமயிலா புரியின் வேளாண்டொன்மை
வாயிலார் மலைவில்லா னடியேபோற்றி மறவாமை
தலைநின்ற மனமேசெம்பொற்
கோயிலா வுயர்ஞானம் விளக்காநீராக்
குலவியவா னந்தமன்பே அமுதாக்கொண்டு
தாயிலா னிருசரண நிகழவேத்துந் தன்மையார்
அருள்சேர்ந்த நன்மையாரே.

52. முனையடுவார் நாயனார்
(பங்குனி - பூசம்)


என்று விளம்புவர் நீடூர் அதிபன் முனையடுவோன்
என்றும் அமருள் அழிந்தவர்க் காக்கூலி ஏற்றெறிந்து
வென்று பெருஞ்செல்வம் எல்லாம் கனகநன் மேருவென்னும்
குன்று வளைத்த சிலையான் தமர்க்குக் கொடுத்தனனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சோழ வளநாட்டில் திருநீடூர் என்னும் ஊரில் பிறந்தார். இவர் ஒரு வேளாளர். இவர் தம் பகைவர்களை வென்று திரட்டிய பொருளையெல்லாம் சிவனடியார்களுக்குக் கொடுத்து சிவனருளால் முத்தி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

பொன்னிவளந் தருநாட்டுப் புகழுநீடூர்ப் பொருவில்திரு
மலிவேளாண் தொன்மை மிக்கார்



வாயிலார் நாயனார்



முனையடுவார் நாயனார்

முன்னியவர் முனையடுவா ரிகலார்போரின்
முரணழிவார் தமக்காக மொழிந்தகூலி
மன்னுநிதி கொண்டுசயங் கொடுத்துவந்த
வளர்பொருளால் இறைவனடி வழுவாவன்பர்க்
கன்னமவர் நசையின்மிக மிசையநல்கும் அன்பர்துன்பம்
அவையாவும் அகன்றுளாரே.

53. கழற்சிங்க நாயனார்
[வைகாசி - பரணி]

மாதவத் தோர்தங்கள் வைப்பினுக்கு ஆரூர் மணிக்கு வைத்த
போதினைத் தான்மோந்த தேவிதன் மூக்கை அரியப்பொற்கை
காதிவைத் தன்றோ அரிவதென்(று) ஆங்கவள் கைதடிந்தான்
நாதமொய்த்தார்வண்டு கிண்டுபைங் கோதைக் கழற்சிங்கனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் ஒரு பல்லவ மன்னர். சிவபெருமான் திருவருளால் நாட்டை ஆண்டு வந்தார். இவர் பல சிவத்தலங்களையும் வழிபட்டு வருகையில் ஒரு சமயம் திருவாரூரில் புற்றிடங் கொண்டார் சந்நிதியில் வழிபட்டு ஆலயத்தைச் சுற்றி வரும்போது அவரது மனைவியார் பூமண்டபத்தின் கீழே விழுந்த ஒரு மலரை எடுத்து முகர்ந்தார். செருத்துணையார் என்னும் சிவனடியார் அதுகண்டு ஆத்திரம் கொண்டு தம் உடைவாளால் அவரது மூக்கினை வெட்டி வீழ்த்தினார். கழற்சிங்கரும் தம் வாளை எடுத்து அவ்வம்மையாரின் கையை வெட்டி வீழ்த்தினார். இவ்வாறு நீதியுடன் அரசாண்டு முத்தி நெறியடைந்தார் கழற்சிங்கர்.

திருத்தொண்டர் புராண சாரம்

காடவர்தங் குலமுவந்த கழலார்சிங்கர் காதன்மிகு
தேவியுடன் காவலாரூர்
ஆடவல்ல பெருமானைப் பணிவாரங்கோர்
அகன்றமலர் தனைமோந்த அரிவைமூக்கைச்

சேடுடைய செருத்துணையார் அரியக்கேட்டுத்
திறலரசர் மலரெடுத்த செங்கையென்றே
சூடகமுன் கைதடிந்து ஞாலங்காத்த தூய்மையார்
அருள்சேர்ந்த வாய்மையாரே.

54. இடங்கழி நாயனார்

[ஐப்பசி - கார்த்திகை]

சிங்கத்(து) உருவனைச் செற்றவன் சிற்றம் பலமுகடு
கொங்கிற் கனகம் அணிந்தஆ தித்தன் குலமுதலோன்
திங்கட் சடையர் தமரதென் செல்வம் எனப்பறைபோக்(கு)
எங்கட்(கு) இறைவன் இருக்குவே ளூர்மன் இடங்கழியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

கோனாடு என்னும் நாட்டில் கொடும்பாளூர் என்னும் ஊரில் இவர் அவதரித்தார். இவர் சூரிய வமிசத்தைச் சார்ந்த ஒரு குறுநில மன்னர். சிவபக்தியில் சிறந்த இம் மன்னர் சிவனடியார்களுக்குத் திருவமுது படைக்கும் நியமம் பூண்டிருந்தார். அடியார் ஒருவர் சிவனடியார்க்குப் படைக்க அமுதில்லாமல் அரசரின் நெற்களத்தில் திருடலானார். காவலர்கள் அவரை அரசர் முன் அழைத்துச் சென்று நிறுத்தினர். அரசர் உண்மை நிலையறிந்து பொக்கிஷத்தையும் அம்பாரத்தையும் சிவனடியார் தம் மனம் போலக் கொள்ளையிடுமாறு செய்து சில நாள் அரசாண்டு முத்தி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

கோநாட்டுக் கொடும்பாளூ ரிருக்கும்வேளிர் குலத்தலைவர்
இடங்கழியார் கொங்கிற்செம்பொன்
ஆனேற்றார் மன்றின்முக டம்பொன்மேய்ந்த ஆதித்தன்
மரபோர்நெற் கவர்ந்தோ ரன்பர்



கழற்சிங்க நாயனார்



இடங்கழி நாயனார்

போநாப்ப ணிருளின்கண் காவலாளர் புரலவர்முன்
கொணர அவர்புகலக் கேட்டு
மானேற்றா ரடியாரே கொள்க்வென்று வழங்கியர
சாண்டருளின் மன்னினாரே.

55. செருத்துணை நாயனார்

[ஆவணி - பூசம்]

கழிநீள் கடல்நஞ்(சு) அயின்றார்க்(கு) இருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க் கழற் சிங்கன்தன் தேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தானென்(று) இயம்புவரால்
செழுநீர் மருகல் நன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

வளம் மிக்க காவிரி பாயும் சோழ நாட்டிலே உள்ள மருகல் நாட்டில் தஞ்சாவூர் என்னும் சிறந்த பதி ஒன்று உண்டு. இங்கு வேளாளர் குலத்தில் செருத்துணையார் என்னும் சிவபக்தர் வசித்து வந்தார்.

இவர் சிவாலயத்துக்குச் சென்று இறைவனுக்கு வேண்டிய திருப்பணிகள் செய்வதிலேயே தம் காலத்தைக் கழித்து வந்தார். இத்தொண்டு செய்துவரும் நாளிலே, காடவர்கோன் கழற்சிங்கருடைய பட்டத்தரசி சிவபெருமான் ஆலயத்தில் மலர் மண்டபத்தில் வீழ்ந்திருந்த ஒரு புது மலரை எடுத்து முகர்ந்தார். இதைக் கண்ட செருத்துணையார் மிகவும் கோபம் கொண்டு இப்பட்டத்தரசியைக் கீழே தள்ளி மூக்கினைப் பிடித்து 'சிவபெருமான் திருமுடியிலே அணிகின்ற இப்பூவை முகர்ந்து பார்த்த உன் மூக்கினை அறுப்பேன்' என்று கூறிக் கத்தியினால் அரிந்தார்.

இத்தொண்டினை உலகறியச் செய்த செருத்துணையார் பல ஆண்டுகள் சிவத் தொண்டிலேயே தம் காலத்தைக் கழித்து இறைவன்

திருவடி அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

இரைத்தணையார் புனற்பொன்னி மருகனன்னாட் டெழிலாருந்
தஞ்சைநக ருழவ ரேத்துஞ்
செருத்துணையார் திருவாரூர் சேர்ந்துவாழ்வார்
செல்வமிகும் பல்லவர்கோன் றேவிவீழ்ந்த
மருத்துணையார் மலரெடுத்து மோப்பக்கண்டு
வளமலிபூங் கத்தியா லவள்மூக்கீர்ந்த
கருத்துணையார் விறல்திருத்தொண் டினையேசெய்து
கருத லரும் அமருலகங் கைக்கொண்டாரே.

56. புகழ்த்துணை நாயனார்
(ஆவணி - ஆயில்யம்)

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையம் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி உமைகோனை மஞ்சனம்செய்
தருவதோர் போதுகை சோர்ந்து கலசம் விழத்தரியாப்
பருவரை வில்லி அருளும் நிதியது பெற்றனனே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

செருவிலிபுத்தூரிலே சிவவேதியர் குலத்திலே புகழ்த்துணையார் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார்.

இவர் சிவபெருமானைத் தொழுது வரும் நாளிலே உலகிலே பஞ்சம் தோன்றியது. மக்கள் யாவரும் பஞ்சத்தால் வாடினர். புகழ்த்துணையார் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டாலும் இறைவனுக்குச் செய்யும் தொண்டிலிருந்து சிறிதும் பிறழ்ந்தாரல்லர். நாடோறும் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும்பொழுது மிகுந்த பசியினால் இவர் வருந்தினார்.

ஒருநாள் இவர் சிவபெருமானுக்குத் திருமஞ்சனம் ஆட்டும்போது பசி மயக்கத்தினால் களைப்புற்றுக் குடத்தைக் கைதவறி சிவபெருமானுடைய தலையின்மீது விட்டு மயங்கி விழுந்தார். அதனால் சிறு உறக்கம் கொண்டார். அப்போது பெருமான் இவர் கனவில் தோன்றி, "இப்பஞ்சம் தீரும் வரையில் யாம் உனக்குத் தினம் ஒரு பொற்காசு அளிக்கின்றோம். அதைக் கொண்டு உன் பசியைத் தீர்க்க" என்று சொல்லி மறைந்தார்.

விழித்தெழுந்த புகழ்த்துணையார் இறைவனின் திருவடிகளில் ஒரு பொற்காசு இருக்கக் கண்டு மகிழ்ந்து அதை எடுத்துக் கொண்டார். பஞ்சத்தில் தம்மைக் காப்பாற்றிய சிவபெருமானுக்குத் தொண்டுகள் பல புரிந்து சிவலோகத்தை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

புண்ணியர்கள் புகழழகார் திருப்பத்தூர்வாழ்
புகழ்த்துணையா ரகத்தடிமைப் புனிதர்சின்னாள்
மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால் வருந்துடல
நடுங்கிடவும் அணிநீரேந்தி
யண்ணல்முடி பொழிகலச முடிமேல்வீழ
அயர்ந்தொருநாட் புலம்பஅர னருளாலீந்த
நண்ணலரு மொருகாசுப் படியால்வாழ்ந்து
நலமலிசீர் அமருலக நண்ணினாரே.

57. கோட்புலி நாயனார்

[ஆடி - கேட்டை]

பெற்றம் உயர்த்தோன் விரையாக் கலிபிழைத் தோர்தமது
சுற்றம் அறுக்கும் தொழில்திரு நாட்டியத் தான்குடிக்கோன்
குற்றம் அறுக்குநங் கோட்புலி நாவற் குரிசில் அருள்
பெற்ற அருட்கடல் என்றுல(கு) ஏத்தும் பெருந்தகையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சோழ வள நாட்டில் திருநாட்டியத்தான் குடியில் வேளாளருடைய மரபிலே கோட்புலியார் என்ற சிவபக்தர் அவதரித்தார். இவர் சோழ மன்னரது படைத் தலைவராக விளங்கிப் பகைவர்களை வென்று புகழ் பெற்றவர். இவர் தாம் பெறும் ஊதியங்களை எல்லாம் சிவபெருமானுக்குச் செந்நெல் வாங்கி அவற்றைச் சேகரித்து வைப்பதிலேயே செலவழித்தார். ஒரு சமயம் இவர் அரசனது ஆணைப்படி போருக்குச் செல்ல நேர்ந்தபோது, தமது சுற்றத்தினரிடம் சிவபெருமானுக்கு அமுது படைப்பதற்காகத் தாம் சேமித்து வைத்த நெற்களஞ்சியங்களை எல்லாம் கொடுத்துச் சிவபெருமானுக்குப் படைக்கச் சொல்லிப் போயினார்.

ஆயின் இவர் சென்ற சிறிது காலத்திற்கெல்லாம் நாட்டில் பஞ்சம் ஏற்படவே இவருடைய சுற்றத்தினர் கோட்புலியார் கொடுத்த நெல்லைத் தம் செலவுக்கு உபயோகித்து விட்டனர்.

போருக்குச் சென்ற கோட்புலியார் தம் ஊருக்குத் திரும்பினார். திரும்பியதும் தம் சுற்றத்தினர் செய்த தீங்கை அறிந்தார். மனத்திலே மிகுந்த பகைமை கொண்டு அவர்தம் சுற்றத்தினரைத் தமது மாளிகைக்கு வரும்படி அழைத்தார். ஆசையுடன் வந்த சுற்றத்தினரை எல்லாம் தமது வாளினால் இவர் கொன்றார். தாம் சிவனுக்களித்த உணவை உண்டதால் பசுங்குழவி ஒன்றையும் தூக்கி எறிந்து கொன்றார்.

இவரது செய்கையைக் கண்டு, தம்பால் இவர் கொண்ட அன்பை எண்ணி வியந்து சிவபெருமான் இவர்முன் தோன்றி, "அன்பனே! நின்னால் கொல்லப்பட்ட அனைவரும் சிறந்த உலகினை அடைந்து பின் நமது உலகத்தை அடைவார்கள். நீ இப்போதுள்ள நிலைமையிலேயே நம்முடன் வருவாயாக" என்று கூறி இவருக்கு இணையில்லா முத்தி அளித்தனர்.



செருத்துணை நாயனார்



புகழ்த்துணை நாயனார்



கோட்புலி நாயனார்

திருத்தொண்டர் புராண சாரம்

குலவுபுகழ் நாட்டியத்தான் குடிவேளாளர் கோட்புலியார்
குவித்துயர்த்த செந்நெற்கூடு
நிலவணிவார்க் கமைத்தாணை நிறுத்தியொன்னார்
நேர்மலைவார் திருவாணை நினையாதேநெற்
சிலமிடியால் அழித்தபடி யறிந்துவாளாற் சேர்ந்தபெருங்
கிளைஞருடல் சிதறவீசி
இலகுமொரு குழவியையு மெறிந்துநாதன்
எண்ணரிய கருணைநிழ லெய்தினாரே.

58. பத்தராய்ப் பணிவார்கள்

அரசினை ஆரூர் அமரர் பிரானை அடிபணிந்திட்(டு)
உரைசெய்து வாய்தடு மாறி உரோம புளகம்வந்து
கரசர ணாதி அவயவம் கம்பித்துக் கண்ணருவி
சொரிதரும் அங்கத்தி னோர்பத்தர் என்று தொகுத்தவரே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர்கள் தொகையடியார்கள். சிவதரிசனம் செய்வதும் சிவ கதைகள் கேட்டலும், சிவத்தொண்டு புரிதலுமே இவர்களின் முக்கியமான தொழில்கள். இவர்கள் திருவாரூரில் புற்றிடங் கொண்ட பெருமானை வழிபட்டு முத்தியடைந்தனர்.

திருத்தொண்டர் புராண சாரம்

தொண்டரடித் தொழல்பூசைத் தொழின்மகிழ்த லழகார்
துளங்கியவர்ச் சனை புரிதல் தொகுதி நியமங்கள்
கொண்டபணி திருவடிக்கே கொடுத்தலீசன்
குணமருவு மருங்கதையைக் குலவிக்கேட்டு
மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்பல்உன்னன்
மருவுதிருப் பணிகாட்டி வருபவாங்கி
உண்டிகொளா தொழிதலென விவையோரெட்டும்
உடையரவர் பத்தரென வுரைத்துளாரே.

59. பரமனையே பாடுவார்

தொகுத்த வடமொழி தென்மொழி யாதொன்று தோன்றியதே
மிகுந்த இயலிசை வல்ல வகையில்விண் தோயும் நெற்றி
வகுத்த மதில்தில்லை அம்பலத் தான்மலர்ப் பாதங்கள் மேல்
உகுத்த மனத்தொடும் பாடவல்லோர்என்பர் உத்தமரே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர்கள் தமிழும் வடமொழியும் கற்றவர்கள். இவர்கள் சிவபெருமானையே பொருளாகக் கொண்டு இயல் இசை பாடியவர்களாதலின் பரமனையே பாடுவார் என்று அழைக்கப்பட்டனர்.

திருத்தொண்டர் புராண சாரம்

அருந்தமிழால் வடகலையா லருளாலொன்றால்
அறிவுநெறி மருவுமருங் கவிகள்யாவுந்
திருந்தியவா னவர்பணிய மன்றுளாடுந்
தேவர்பிரான் கழலிணையே [illegible]ரவோதி
விருந்திடுநா வுடையபயன் மேவினோர்தா
மேலானோ மெனமகிழ்ந்து விழிநீர்சோரப்
பரிந்தருளாற் பரமனையே பாடவல்ல
பான்மையார் எமையாளு மேன்மையாரே.

60. சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

உத்தமத் தானத்(து) அறம்பொருள் இன்பம் ஒடியெறிந்து
வித்தகத் தானத்து ஒருவழிக் கொண்டு விளங்குசென்னி
மத்தம்வைத் தான்திருப் பாத கமல மலரிணைக்கீழ்ச்
சித்தம்வைத் தார்என்பர் வீடுபே(று) எய்திய செல்வர்களே.

– திருத்தொண்டர் திருவந்தாதி


இவர்கள் சிவயோக நெறியில் சித்தத்தை வைத்துப் பெருமானுடைய திருவடித் தொண்டின் வழியில் நின்று முத்தியடைந்தனர். அதனால் இவர்கள் இப்பெயர் பெற்றார்கள்.



பத்தராய்ப் பணிவார்



பரமனையே பாடுவார்



சித்தத்தைச் சிவன்பால் வைத்தார்

திருத்தொண்டர் புராண சாரம்

பாரணவும் புலனந்தக் கரணமொன்றும் படராமே
நடுநாடி பயிலுநாதங்
காரணபங் கயன்முதலா மைவர்வாழ்வுங்
கழியுநெறி வழிபடவுங் கருதிமேலைப்
பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவுநோக்கிப்
புணர்ந்தணைந்த சிவாநுபவபோக மேவுஞ்
சீரணவு மவரன்றோ வெம்மையாளுஞ் சித்தத்தைச்
சிவன்பாலே வைத்துளாரே.

61. திருவாரூர்ப் பிறந்தார்கள்

செல்வம் திகழ்திரு வாரூர் மதில்வட்டத் துட்பிறந்தார்
செல்வன் திருக்கணத் துள்ளவ ரேஅத நால்திகழச்
செல்வம் பெருகுதென் ஆரூர்ப் பிறந்தவர் சேவடியே
செல்வ நெறியுறு வார்க்(கு)அணித் தாய செழுநெறியே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

மிகுந்த சிறப்பினை உடைய திருவாரூரில் பிறந்தவர்கள். திருக்கயிலாயத்தில் உள்ள சிவகணங்களே ஆவர். இவர்கள் ஐம்பொறி அடக்கம் வாய்ந்தவர்கள்.

திருத்தொண்டர் புராண சாரம்

பொங்கியமா தவமுடையார் வருணநான்கிற்
பொருந்தினர்க ளல்லாத புகழினுள்ளார்
சங்கையிலா அருந்தவமுன் புரிந்தாரிங்குச்
சார்விலா ரிறைவனருள் சார்தலாலே
கங்கைவாழ் சடைமுடியா னருளை நீங்காக்
கணநாத ரெனவாழுங் கருத்தர்கன்னிச்
செங்கண்வரால் வளர்வாவி திகழுமாரூர்ச் சிறந்துளார்
எமையாளப் பிறந்துளாரே.

62. முப்போதும் திருமேனி தீண்டுவார்

நெறிவார் சடையரைத் தீண்டிமுப் போதும்நீ(டு) ஆகமத்தின்
அறிவால் வணங்கிஅர்ச் சிப்பவர் நம்மையும் ஆண்டமரர்க்(கு)
இறையாய்முக் கண்ணும்எண் தோளும் தரித்தீறில் செல்வத்தொடும்
உறைவார் சிவபெரு மாற்(கு)உறை வாய உலகினிலே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சிவாகம முறைப்படி இவர்கள் இறைவனைக் காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று காலத்திலும் அர்ச்சிப்பார்கள். இவர்கள் ஆதி சைவர்கள் ஆவர்.

திருத்தொண்டர் புராண சாரம்

செப்பலருந் தவமுடைய செம்மையாளர்
சிறுகாலே மலர்வாவி திகழமூழ்கி
ஒப்பில்திரு நீறணிந்து நியதியாற்றி ஓவாமே
ஐந்தெழுத்து முரைத்துமேன்மைத்
தப்பில்சிவா கமவிதியா லின்பாலன்பாந்
தன்மையா னன்மையாந் தகையாரென்று
முப்பொழுதுந் திருமேனி தீண்டவல்ல
முறைமையார் பிறவிதெறுந் திறமையாரே.

63. முழுநீறு பூசிய முனிவர்

உலகு கலங்கினும் ஊழி திரியினும் உள்ளொருகால்
விலகுதல் இல்லா விதியது பெற்றநல் வித்தகர்காண்
அலகில் பெருங்குணத்(து) ஆரூர் அமர்ந்த அரனடிக்கீழ்
இலகுவெண் ணீறுதம் மேனிக்(கு) அணியும் இறைவர்களே.

– திருத்தொண்டர் திருவந்தாதி



திருவாரூர்ப் பிறந்தார்



முப்போதும் திருமேனி தீண்டுவார்



முழுநீறு பூசியவர்

இவர்கள் கற்பம், அனுகற்பம், உபகற்பம் என்னும் மூவகை விபூதிகளில் ஏதேனும் ஒன்றை உடல் முழுவதும் பூசுவர். இவர்கள் சாதி ஒழுக்கத்தில் சிறந்தவர்கள். மும்மலம் அறுத்தவர்கள். தத்துவ நெறி உணர்ந்தவர்கள்.

திருத்தொண்டர் புராண சாரம்

கற்பமனு கற்பமுப கற்பமென்றிக் கடனணைந்த
திருநீறுங் கனற்கணீறும்
பொற்புடைய வரனாசா னங்கியாறு
பொல்லாத பூமியெதிர் புனைதலாகா
வற்புதமாந் திரிபுண்ட மதியின்பாதி யகிலாங்கந்
தீபமிகு மழகார்வட்ட
முற்பொலிய வுடலணியு முறையாரன்றோ
முழுநீறு பூசவல்ல முனிவர்தாமே.

64. அப்பாலும் அடிச்சார்ந்தார்

வருக்கம் அடைத்துநன் னாவலூர் மன்னவன் வண்தமிழால்
பெருக்கு மதுரத் தொகையில் பிறைசூடி பெய்கழற்கே
ஒருக்கு மனத்தொடப் பாலடிச் சார்ந்தவர் என்றுலகில்
தெரிக்கு மவர்சிவன் பல்கணத் தோர்நஞ் செழுந்தவரே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

சேர சோழ பாண்டிய நாடுகளுக்கு அப்பால் உள்ள நாடுகளில் அவதரித்துச் சிவபெருமான் திருவடியை அடைந்த அடியார்களும், தனியடியார்களுக்கு முன்னும் பின்னும் சிவபெருமான் திருவடியை அடைந்தவர்களும் அப்பாலும் அடிச்சார்ந்தார் ஆவர்.

திருத்தொண்டர் புராண சாரம்

தாராரு மூவேந்தர் பயிலுந்தொல்லைத்
தமிழ்நாட்டப் புறத்திறைவன் சரணஞ்சார்ந்த

சீராருந் தொண்டர்களு மண்டரேத்துந் திருத்தொண்டத்
தொகையருளாற் செப்புங்காலத்து
ஏராருந் தொடையிலுறா திப்பாலப்பா லெந்தைபிரா
னடியடைந்த வியல்பினோரும்
ஆராத காதலுடை யவர்களன்றோ வப்பாலும்
அடிச்சார்ந்த அடியார்தாமே.

65. பூசலார் நாயனார்


[ஐப்பசி - அனுஷம்]

பதுமநற் போதன்ன பாதத்(து) அரற்கொரு கோயிலையான்
கதுமெனச் செய்குவ(து) என்றுகொ லாம்என்று கண்துயிலா(து)
அதுமனத் தேஎல்லி தோறும் நினைந்தருள் பெற்றதென்பர்
புதுமணத் தென்றல் உலாம்நின்ற ஊர்தனில் பூசலையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

தொண்டை நாட்டிலே திருநின்ற ஊரில் அந்தணர் குலத்தில் பூசலார் நாயனார் என்பவர் அவதரித்தார். அவர் சிவபெருமானுடைய நாமத்தையே எப்போதும் சபித்த வண்ணம் இருப்பார். சிவத்தொண்டே தொண்டுகளிலெல்லாம் சிறந்த தொண்டு என்ற உயர்ந்த கொள்கையினை உடையவராய்ச் சிவனடியார்களை ஆதரித்து வந்தார் பூசலார். ஒரு சமயம் அவர் சிவபெருமானுக்கு கோயில் கட்டக் கருதினார். ஆயினும் பணம் இல்லாமையால் மிகவும் வருந்தித் தம் மனத்தினாலேயே கோயில் கட்ட நிச்சயம் செய்து அதற்கேற்ற பொருள்களைத் தேட ஆரம்பித்தார். கோயிலையும் சிறப்பாகத் தம் மனத்தே கட்டியும் முடித்தார். எனவே, சிவபெருமானை வணங்கவும் அவரைத் தம் மனக்கோயிலில் எழுந்தருளவும் ஒரு நல்ல நாளைக் குறித்தார்.

அக்காலத்திலே காஞ்சிபுரத்தை ஆண்ட காடவ மன்னன் ஒரு



அப்பாலும் அடி சார்ந்தார்



பூசலார் நாயனார்

பெரிய கோயிலைக் கட்டுவித்துச் சிவபெருமான் ஆலயத்தே எழுந்தருளுவதற்கும் ஒரு நல்ல நாளைக் குறிப்பிட்டான். அந்நாளைக்கு முதல் நாள் சிவபெருமான் அக்காடவன் கனவிலே தோன்றி, "அன்பனே, நாம் நாளை பூசலாரது ஆலயத்திற்குப் போகப் போகிறோம். ஆதலால் நீ கருதிய இக்கும்பாபிடேகத்தை நாளைக்குச் செய்யாமல் வேறொரு நாளில் செய்க" என்று சொல்லி மறைந்தார்.

இதனால் வியப்படைந்த மன்னன் அப்பூசலாரைக் கண்டு தொழுதல் வேண்டும் என்ற விருப்புடன் திருநின்றவூரை அடைந்தான். அங்கிருந்த முதியோர்களைக் கண்டு, "இங்குப் பூசலார் கட்டிய கோயில் எங்குள்ளது?" என்று வினவ, அதற்கு அவர்கள், 'இங்குப் பூசலார் கட்டிய கோயில் ஒன்றும் இல்லை' என்று சொல்ல, மன்னன் சில பெரியோர்களை அழைத்துக் கொண்டு தானே அவரைக் காணச் சென்றான்.

பூசலாரைக் கண்டதும் காடவன் சிவபெருமான் தன் கனவில் கூறியதையும் எடுத்துச் சொல்லிக் கோயிலைக் காட்டும்படி வேண்டினான். பூசலார் சிவபெருமான் தம்மிடம் கொண்டுள்ள அன்பை எண்ணி மகிழ்ந்து, தாம் மனத்தே கட்டிய கோயிலின் சிறப்பைத் தெரிவித்தார். இதைக் கேட்ட மன்னன் அவருடைய திருவடிகளில் வீழ்ந்து வணக்கம் தெரிவித்துத் தன் ஊர் மீண்டான்.

பின்னர் பூசலார் நல்ல நாளில் சிவபெருமானைத் தம் மனத்தே எழுப்பிய ஆலயத்தில் பிரதிட்டை செய்தார். அவர் நெடுங்காலம் வாழ்ந்து பின் சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

பொருவருந்தண் டகநாட்டு நின்றவூர்வாழ் பூசுரர்கோப்
பூசலார் புந்தியாலே
யிருநிதியந் தேடியா லயமுமாக்கி எழுந்தருளப்
பண்ணுவதா எண்ணுங்காலை

அரனதனைக் காடவர்கோற் கருளமன்ன
ணந்நகர மணைந்தவ்வா றறிந்துதாழ
விரவுமனக் கோயிலுற விருத்தியங்கண்
வேண்டுவகொண்டிறைஞ்சியருள் மேவினாரே.

66. மங்கையர்க்கரசியார்

(சித்திரை - ரோகிணி)


பூசல் அயில்தென்ன னார்க்(கு) அன லாகப் பொறாமையினால்
வாச மலர்க்குழல் பாண்டிமா தேவியாம் மானிகண்டீர்
தேசம் விளங்கத் தமிழா கரர்க்(கு)அறி வித்(து)அவரால்
நாசம் விளைத்தாள் அருகந் தருக்குத்தென் னாட்டகத்தே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் மங்கையர்க்குத் தனியரசி. சோழர் குலக்கொழுந்து போன்றவர். திருஞானசம்பந்தரே இவரைப் பாராட்டிப் பாடியுள்ளார். நின்றசீர் நெடுமாறன் என்னும் தம் கணவர் சைவ நெறி தழுவுவதற்குச் சிறந்த துணைவராக விளங்கினார். தம் கணவரோடு சிவபெருமான் திருவடி நிழலை அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து
மன்னவர்சூழ் தென்னவர்க்கு மாதேவியார்மண்
சங்கைகெட அமணர்சமயஞ் சாடவல்ல சைவசிகா
மணிஞானத் தமிழிற்கோத்த
பொங்குதிரு வருளுடைய போதவல்லி பொருவி
நெடுமாறனார் புயமேல் வாழுஞ்
செங்கலச முலையாள் தன்அருளாலின்பஞ்
சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்தவாறே.



மங்கையர்க்கரசியார்



நேச நாயனார்

67. நேச நாயனார்

(பங்குனி - ரோகிணி)

நாட்டம்இட் டன்றுஅரி வந்திப்ப வெல்படை நல்கினர்தந்
தாட்டரிக் கப்பெற்ற வன்என்பர் சைவத் தவர்அரையில்
கூட்டும்அக் கப்படங் கோவணம் நெய்து கொடுத்துநன்மை
ஈட்டும்அக் காம்பீலிச் சாலிய நேசனை இம்மையிலே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் காம்பீலி என்னும் திருத்தலத்தில் வாழ்ந்த சாலியர். இவர் சிவனடியார்களுக்கு உடை, கோவணம், கீள் முதலியன கொடுத்து ஆதரித்து வந்தார். சிவபெருமானிடத்தில் இடையறாத அன்பு பூண்டு அவர் திருவடிகளில் இரண்டறக் கலந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

சாலியர்கோக் காம்பீலித் தலைவர்மேன்மை
தாவாத புகழ்நேசர் தஞ்சொலென்றுங்
கோலியஜந் தெழுத்தோதிச் சிந்தையுன்னிக்
கொண்டபொரு ளன்பர்கொளக் கொடுத்துவாழ்வார்
சீலமிகுந் திருத்தொண்டர்க் குடையுங்கீளுந்
திருந்தியவெண் கோவணமுஞ் சேரஈந்து
பாலனைய வொளிநீற்றான் பாதமேத்திப்
பரலோக முழுதாண்ட பான்மையாரே.

68. கோச்செங்கட் சோழ நாயனார்

(மாசி - சதயம்)

மைவைத்த கண்டன் நெறியன்றி மற்றோர் நெறிகருதாத்
தெய்வக் குடிச்சோழன் முன்பு சிலந்தியாய்ப் பந்தர்செய்து
சைவத் துருவெய்தி வந்து தரணிநீ டாலயங்கள்
செய்வித்த வன்திருக் கோச்செங்க ணான்எனும் செம்பியனே.

செம்பொன் அணிந்துசிற் றம்பலத் தைச்சிவ லோகம்எய்தி
நம்பன் கழற்கீழ் இருந்தோன் குலமுதல் என்பர்நல்ல
வம்பு மலர்த்தில்லை ஈசனைச் சூழ மறைவளர்த்தான்
நிம்பநறுந்தொங்கல்கோச்செங்க ணான் என்னும் நித்தனையே

– திருத்தொண்டர் திருவந்தாதி

திருவானைக்கா என்னும் திருத்தலத்தில் சிலந்தி ஒன்று சிவபெருமானுக்கு நூலால் பந்தல் அமைத்து வழிபட்டு வந்தது. அங்கு வாழ்ந்த யானையொன்று தானும் சிவபெருமானை வழிபட எண்ணிச் சிலந்தி கட்டிய பந்தலைச் சிதைத்தது. உடனே சிலந்தி அடங்காக் கோபம் கொண்டு யானையின் துதிக்கையில் நுழைந்தது. யானை வலி தாங்கமாட்டாமல் துதிக்கையைத் தரையில் அறைந்தது. யானையும் இறந்தது. சிலந்தியும் இறந்தது.

சிவபெருமான் திருவருளால் சிலந்தி சுபதேவன் என்னும் சோழ மன்னனின் மனைவியாகிய கமலவதி என்பாளுக்குப் புத்திரனாகப் பிறந்தது. கமலவதியின் வயிற்றிலிருந்து இவன் பிறப்பதற்கு முன்பு சோதிடர்கள் இவள் பெறப் போகும் மைந்தன் இன்னும் ஒரு நாழிகை கழித்துப் பிறந்தால் பேரரசனாகத் திகழ்வான் என்றனர். அது கேட்ட அரசி அக்குழந்தையைப் பெறாமல் தாமதித்து ஒரு நாழிகை கழித்தே அப்பிள்ளையைப் பெற்றாள். உரிய காலத்திற்கு மேலும் குழந்தை தாயின் வயிற்றில் இருந்ததால் அக்குழந்தையின் கண்கள் சிவந்து விட்டன. அதனாலேயே அக்குழந்தை கோச் செங்கண்ணன் என அழைக்கப்பட்டான். உரிய காலத்திற்கு மேல் குழந்தை தாயின் வயிற்றில் தங்கியதால் தாய் இறந்து விட்டாள்.

கோச்செங்கட் சோழன் தன் பழம் பிறவி உணர்ந்து திருவானைக்காவில் திருமதிலின் திருப்பணிகளைக் கவனித்து பல ஆலயங்கள் அமைத்து முடிவில் மரணமிலாப் பெருவாழ்வை அடைந்தான்.

வெண்ணாவ லிறைக்கொளிநூற் பந்தர்செய்த
வியன்சிலம்பி யதுவழித்த வெள்ளானைக்கை
உண்ணாடிக் கடித்தவுட லொழியச்சோழ னுயர்குலத்துச்
சுபதேவன் கமலத்தோங்கும்
பெண்ணாகி யவள்வயிற்றில் வைகிச் செங்கட்
பெருமானாய்த் தென்னவராய்ப் பெருங்கோயில் பலவுங்
கண்ணார்வித் துயர்தில்லை மறையவர்க்கு முறையுள்
கனகமய மாக்கியருள் கைக்கொண்டாரே.

69. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்


[வைகாசி - மூலம்]

தனையொப் பரும்எருக் கத்தம் புலியூர்த் தகும்புகழோன்
நினையொப் பருந்திரு நீலகண் டப்பெரும் பாணனை நீள்
சினையொப் பலர்பொழிற் சண்பையர் கோன்செந் தமிழோடிசை
புனையப் பரன்அருள் பெற்றவன் என்பர்இப் பூதலத்தே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

நடுநாட்டில் திருஎருக்கத்தம்புலியூர் என்னும் திருப்பதியொன்று உண்டு. திருநீலகண்ட யாழ்ப்பாணர் அவ்வூரில் அவதரித்தார். அவர் யாழ் வாசிப்பதில் மிகவும் திறமை உடையவர்.

ஒருநாள் அவர் மதுரையில் யாழ் வாசிக்கும்போது மிகுதியாக மழை பொழிந்தது. உடனே அசரீரியால் பலகையிடக் கட்டளை பெற்றுப் பலகை பெற்று, அதன் மேலிருந்து யாழ் வாசித்தார். திருவாரூரில் சிவபெருமானால் ஏற்படுத்தப்பட்ட வடவாயிலால் சென்று இறைவனை வழிபட்டார். பின்னர் சீகாழிக்குச் சென்று திருஞான சம்பந்தரின் ஒப்புதல் பெற்று அவருடைய திருப்பதிகங்களை யாழில் அமைத்துப் பாடினார். திருஞானசம்பந்தரைப் பிரியாமல் அவருடன் பல



கோச்செங்கட்சோழ நாயனார்



திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

தலங்களுக்கும் சென்று வழிபட்டார். அவருடைய திருமணத்தில் சிவபதம் அடைந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

பிறங்கெருக்கத் தம்புலியூர்வாழும் பேரியாழ் பேணுதிரு
நீலகண்டப் பெரும்பாணனார்சீர்
நிறந்தருசெம் பொற்பலகை ஆலவாயில் நிமலன்பாற்
பெற்றாரூர் நேர்ந்து சிவன்வாயில்
திறந்தருளும் வடதிசையே சேர்ந்துபோற்றித்
திருஞானசம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி
அறந்திகழுந் திருப்பதிகம் யாழிலேற்றி ஆசில்திருப்
பெருமணஞ்சேர்ந் தருள்பெற்றாரே.

70. சடைய நாயனார்
(மார்கழி - திருவாதிரை)


தலம்விளங்குந் திரு நாவலூர் தன்னில் சடையன்என்னும்
குலம்விளங் கும்புக ழோனை உரைப்பர் குவலயத்தில்
நலம்விளங் கும்படி நாம்விளங் கும்படி நற்றவத்தின்
பலம்விளங் கும்படி ஆரூரனைமுன் பயந்தமையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி

இவர் சுந்தரமூர்த்தி நாயனாரின் அருமைத் தந்தையார். இவர் திருநாவலூரில் ஆதிசைவர் குலத்தில் தோன்றி அக்குலம் விளங்குமாறு அற வாழ்க்கை வாழ்ந்து வந்தார்.

திருத்தொண்டர் புராண சாரம்

சங்கையிலா வரன்மறையோர் நாவலூர்வாழ்
தவரதிபர் தம்பிரான் தோழராய
எங்கள்பிரான் தவநெறிக்கோ ரிலக்குவாய்த்த
இசைஞானி யார்தனயரெண்ணார்சிங்க



சடைய நாயனார் இசை ஞானியார்

மங்கயர்க டொழும்பரவை மணவாளநம்பி வந்துதிக்க
மாதவங்கள் வருந்திச் செய்தார்
வெங்கணரா விளங்குமிளம் பிறைசேர் சென்னி
விடையினா ரருள்சேர்ந்த சடையனாரே.

71. இசை ஞானியார்
[சித்திரை - சித்திரை]

பயந்தாள்கறுவுடைச்செங்கண்வெள்ளைப்பொள்ளல் நீள்பனைக்கைக்
கயந்தான் உகைத்த நற்காளையை என்றும் கபாலங்கைக்கொண்(டு)
அயந்தான் புகும்அரன் ஆரூர்ப் புனிதன் அவன்திருத்தாள்
நயந்தாள் தனதுள்ளத்(து) என்றும் உரைப்பது ஞானியையே.
– திருத்தொண்டர் திருவந்தாதி

பெருமை மிகுந்த சடைய நாயனாரின் திருமனைவியாராகிய இவரே சுந்தரரின் அன்னையார். அவரைப் பெற்றருளிய பேற்றைப் பெற்றவர்.

திருத்தொண்டர் புராண சாரம்

நாவல் திருப்பதிக்கோர் செல்வச் சைவநாயகமாஞ்
சடையனார் நயந்தவின்பப்
பூவைக் குலமடந்தை பொற்பார்கொம்பு
புனிதமிகு நீறணிந்து போற்றிசெய்தே
யாவிற் றிகழ்தலைவன் வலியவாண்ட வாரூரரவதரிக்க
அருந்தவங் கள்புரிந்தார்
யாவர்க்கு மெட்டாத விசைந்தவின்ப விசைஞானி
எனஞான மெளிதாமன்றே.

திருத்தொண்டர் போற்றிக் கலிவெண்பா

காப்பு

இகபரத்து வாழ்வை யினிதளிக்குஞ் சீர்கற்
பகவிக்கி நேசரருட் பாத – யுகமனமே
நண்பாத் திருத்தொண்டர் நாமத்தைப் போற்றிகலி
வெண்பாவாற் போற்ற விரும்பு.

நூல்

சீரார் திருவாளர் தில்லைவா ழந்தணர்தம்
தாரார் தொழுகுலத்தோர் தாள்போற்றி – நேராச்சொல்
ஆணையைக் காத்த அருளன்பு திருநீலகண்டர்
காணாக் கருணைக் கழல் போற்றி – நாணாரும்
இல்லாளை ஈசற்கே ஈந்த இயற்பகையார்
பொல்லாப் பொலன்றாள் புகழ் போற்றி – வன்முளைநெல்
வான் புழுக்கலாக்கி மகிழ்ந்தளித்து வாழ்ந்த இளை
யான்குடி மாறர் அடிபோற்றி – ஆன்ற கருப்
பொய்ப் பொருளை நாடியுரை போதமுணர் மெய்ப்பொருளார்
செய்ய அடிப்பதுமச் சீர்போற்றி – உய்ய திருத்
தொண்டத் தொகையருளச் சுந்தரரால் பெற்ற விறன்
மிண்டர் மலர்த்தாள் விறல்போற்றி – பண்டையொரு
கோவணக்கு நேர் ஈந்த கோதிலமர் நீதி
மாவணக்குஞ் செந்தாண் மரைபோற்றி – ஏவும்
பரசாற் படிறறியும் பாடில் எறிபத்தர்
புரைசேர் விமலத்தாள் போற்றி – திறமைமிகுஞ்
சத்திய சைவத்தவரே சம்புவென்றெண் ஏனாதி
நித்திய நாதர்தாள் நிலை போற்றி – பத்தியினால்
உண்ணப்ப வெய்யூன் உருசியென்ற காளத்திக்
கண்ணப்ப நாதன் கழல்போற்றி – வண்ணப்பொன்
தாலிதந்த குங்கிலியம் தாணுவை நேராக்கியிடு

மாலிதங் கலையர் மறம் போற்றி – சேவிதங்கண்
எஞ்சா மகள் கேசமீந்த அருள் மானக்
கஞ்சாறர் அன்புக் கடல்போற்றி – செஞ்சாலி
வல்சிவடு செங்கீரை வன்கமர்வாய் வாட்டாயர்
செல்லச் சிவமருவும் சீர்போற்றி – நல்லசரக்
கொன்றை சிவனாக் குழலூதி ஐந்தினருள்
நின்ற ஆனாயர் நிலைபோற்றி – நின்றுரைத்தச்
சாந்தமங்கை பெற்றுச் சாரரசு மூர்த்தியார்
ஏய்ந்தருளால் ஆண்ட எழில்போற்றி – ஆய்ந்தமலர்
ஈசற்கே சாற்றும் இணையின் முருகர் சம்பந்தர்
தேசொளி விவாகம்சேர் சீர்போற்றி – வாசநீரில்
ருத்ரசெபம் செய்திடும் உருத்ர பசுபதியார்
சித்ரவிந்தத் தாளின் திறம் போற்றி – நத்தி தில்லை
மூவாயிரர் முன்னர் மூழ்கி முனியா நாளைப்
போவார் பொலன்தாள் புகழ் போற்றி – சேவேறிச்
சீலையினைத் தப்பாத் திருக்குறிப்புத் தொண்டரடி
ஞாலம் புகழு நலம் போற்றி – பாலிடரும்
தாதைதாள் சாய்த்து எந்தை தாளிணைசேர் சண்டேசர்
நாதமலர்த்தாள் நலம் போற்றி – போதமறும்
புன்சமணப் பாழ்ந்துறையைப் போக்கு திருநாவரசர்
மென்சலசத்தாள் இன்பமின் போற்றி – மன்னுசைவம்
வாழ்க அமணடக்கு மந்திரி குலச்சிறையார்
வீழ்குமருள் பொற்றாள் விறல்போற்றி – சூழ்சித்தி
மீளி மிழலைக் குறும்பர் மீகயிலை நாவலூர்
ஆளியொடு சென்ற அடி போற்றி – கூளிபங்கன்
அம்மையென அப்பா என்று ஆலவனத் தூர்த்தநடம்
செம்மையுடன் காண் பேயார் சீர் போற்றி – நம்மரு
நாவரசின் செல்வமென நாடும் அருள் அப்பூதி
மாவிரைசெய் செந்தாமரை போற்றி – தேவிடர்சீ
நீக்கியமா தோடு நீலநக்கர் காழியர்கோன்
ஆக்க விவாகம் சேர் அருள் போற்றி – வாக்கரசால்
தொண்டருக்கு ஆணியெனும் தூய நமிநந்தியர்நீர்

மண்டு விளக்கேற்று வரம் போற்றி – வண்டமிழால்
வெம்பந்தம் தீர் காழி வேந்தன் திருஞான
சம்பந்த மூர்த்தி அருள் தாள் போற்றி – துள்ளுபசு
வீழ்ந்திரங்கக் காண்யோகி ஈந்தவுடல் மூலனென
வாழ்ந்து திருமந்திரம் சொன் மாண் போற்றி – ஆழ்ந்தடங்
கல்லவுடற் றுஞ்சீனர் கண்போகக் காணுதண்டி
மல்லன் மணத்தாள் மரைபோற்றி – நல்லன்பர்க்கு
இட்டாற் சூதாடியெலாம் ஏற்க அமுதாக்கி தொண்டர்க்கு
இட்டுண்ணு மூர்க்கர் இதம் போற்றி – இட்டமகச்
சோமாசி மாறர் அருட் சுந்தரரைக் கண்ட சிந்தை
காமர்தி வென்ற கனம் போற்றி – நீதியாய்ச்
செய்மகத்தை தத்தஞ் சிவற்கீ சிறப்புலியார்
உய்யும் அருள்தாள் உரம் போற்றி – வைரவராய்
வந்தவற்கு வாளால் மகவை அரிந்தூட்டி மகிழ்
சிந்தாச் சிறுத்தொண்டர் சீர்போற்றி – கந்துகமேல்
ஏறி கழறிற்றறிவார் எந்தை சுந்தரரோடு சென்ற
நாறுகமலத் தாள் நலம் போற்றி – தேறு தொண்டர்
பற்றுகுறை தீர்த்துச் சம்பந்தரை ஆராதித்த
நற்கண நாதர் நலம் போற்றி – கொற்றமுடி
கூற்றுவனார் சூடாது கோன் நடராசன்னடியைப்
போற்றுமுடி சூட்டும் புகழ்போற்றி – கொய்தலையில்
கண்ட சடையால் கனலுட் புகழ்ச் சோழர்
கொண்டு வாழன்பின் குணம் போற்றி – தொண்டிலொரு
புங்கர்க்கு இருநூறு பொன்னை அளித்த நர
சிங்க முனையரையர் சீர் போற்றி – சங்கரற்கென்று
எண்ணி பொலன்ப மீனை கடலிட்ட அதிபத்தர்
வண்ண மலர்த்தாள் வளம்போற்றி – தண்ணீரைத்
தொண்டனார் தாட்கு விடாத் தோமனைவி கைதடிந்த
திண்மை கலிக்கம்பர் திறம் போற்றி – எண்ணெய்யால்
ஏற்றுமுனை முட்டாகாது இன்பாய்க் களத்தை அரிந்து
ஊற்றுகலி நீதி உரன் போற்றி – போற்றுமரன்
நண்பரை இகழ்ந்துரைக்கு நாவரியும் சத்தியார்

தண்பங்கய மலர் மென்றாள் போற்றி – அண்ணல்தலந்
தோறுமொரு வெண்பாவால் தோத்திரம்செய் ஐயடிகள்
வீறு கழற்றாள் விறல்போற்றி – மாறில்தீ
பக்குறைக்கு விற்கப் பகரு கணம் புல்லருந்தஞ்
சிக்கத் தெரிந்த திறம் போற்றி – தக்க பொருள்
தேராத்தன் கோவையால் தீரச் சிவபணிகள்
சீராச்செய் காரிதாள் சீர் போற்றி – தீராத
தீர்வுசம் பந்தரால் தீர்ந்து சைவராய் நின்ற
சீர் நெடுமாறர் தாள் சீர் போற்றி – நீர்தீபம்
அன்ன அருச்சனைக் காமின் பறிவன்பா
வுன்னுவாயி லார்தா ள்உரம் போற்றி – வன்பரைவென்று
ஈட்டுபொருள் அன்பருக்கே ஈந்த முனையடுவார்
வாட்டுவினை தாளின் மணம் போற்றி – நாட்டரசி
மூக்கரி செருத்துணை முன் மோந்த பூக்கை தடிந்த
காக்கு கழற்சிங்கர் கழல் போற்றி – வீக்குநெல்
வாரிச் செல்லன்பருக்கா மன்னர் இடங்கழியார்
பூரிசிறை விட்ட தாள் பூப்போற்றி – தூரிச்செல்
பல்லவரின் ஆசியரிபத்திச் செருத்துணையார்
வல்ல மணத்தாள் மறை போற்றி – சொல்சிவமேல்
சோர்வால் குடம்விடற்குத் தூய்பொன் புகழ்த்துணையார்
தீரத் தினம் பெற்ற சீர் போற்றி – சேர்செந்நெல்
தின்றுண் சுற்றம் சிசுவும் செய்தீமை கோட்புலியார்
பொன்றத் தடிந்த புகழ் போற்றி – நின்றவருள்
ஏயும் திருப்பணிகள் எண்வகை செய் பத்த
ராய்ப் பணிவார் ஈட்ட அடி போற்றி – வீயினொடு
பன்றியும் காணாப் பரமனையே பாடுவார்
வென்றிக் குழு உத்தரள விறல் போற்றி – நின்ற நிலை
சேரும் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்மைந்
தாருந் தொகையார் சரண் போற்றி – நேருதவப்
பீடுதிரு வாரூர்ப் பிறந்தார் சிவகணத்தார்
தேடும் அருள்தாள் திறம் போற்றி – நாடுவிதி
பூத்த முழுநீறு பூசு முனிவர் இருள்

சீத்த வினத்தாளின் சீர் போற்றி – நீத்தனடி
பத்தியால் முன்பின் அப்பாலும் அடிச் சார்ந்தாராம்
சத்திய சீர்த்திரளார் தாள்போற்றி – வைத்த மனக்
கோயிலினிற் சங்கரனைக் கூட்டிநிதம் பூசிக்கும்
தாயினருட் பூசல் சரண் போற்றி – தூயவருள்
ஞானமுண்டோர் வாக்கில் நலம் புனைசீர் மாறர்மனை
மானியார் கற்புணர்வின் மாண் போற்றி – ஆனவன்பர்
கோவணமும் கீளுநிதம் குன்றா தளித்தபுகழ்
பாவு மருள்நேசர் பதம் போற்றி – நாவலுறு
மங்கணர்க்குந் தில்லைவா ழந்தணர்க்குங் கோயில்கோச்
செங்கட்சோ ழன்கட்டுஞ் சீர்போற்றி – தங்கியாழில்
பண் நீலகண்ட யாழ்ப்பாணர் பதிகத்திசைத்துச்
சண்பையர்கோ மானொடு சேர்தாள் போற்றி – அண்ணல்நம்பி
ஆரூரரைப் பெற்ற அன்பர் புகழ்ச்சடையர்
சீரூர் திருத்தாள் திறம் போற்றி – பாரூரோ
தேருஞ் சடையர் திருமனையார் நம்பி பெற்றார்
சாரும் இசை ஞானியார் தாள் போற்றி – சீர் பெருகும்
தொண்டத் தொகை முதல்சொல் சுந்தரர் வெள்ளானைமேல்
அண்டர் தொழச் செல்லருள் போற்றி – தண்டைத்தாள்
தும்பிமுகவன் அருளால் தூத் திருவந்தாதிநவில்
நம்பியாண்டார் நம்பி நலம் போற்றி – செம்பியர்கோன்
பூக்கப் பெரிய புராணம் அருளால் உரைத்த
சேக்கிழார் சீபாதச் சீர்போற்றி – தூக்குதிருத்
தொண்டர் பயனாளுஞ் சொன்ன உமாபதியார்
தண்டா மலர்ப்பதுமத் தாள் போற்றி – விண்டதிரு
நாமக் கோவைசொல் சிவஞான முனிவன் தாளாம்
சேமக் குணமரையின் சீர்போற்றி – நேமமுள
கூட்டமொன்பான் பேராங் கூட்டமேழொன்பதென
நாட்டுமெண் ணொன்பதின்மர் நாமத்தை – நாட்டமுடன்
பத்தியினால் போற்றி செயும் பண்பர் சிவனருளால்
சத்தியமாய்ச் சார்வார் சரண்.

சந்தானகுரவர் தோத்திரங்கள்

அகச்சந்தான குரவர்

அருட்குழக ரெழிற்கயிலை முழுக்காவல் நந்திபிரான் அடிகள் போற்றி
தெருட்சிபெறு மனக்கமல சநற்குமர முனிவன்இரு திருத்தாள் போற்றி
இருட்டுமலத்தகல் சத்ய ஞானதரி சனி சரண இணைகள் போற்றி
மருட்சியறு பரஞ்சோதி அருஞ்சீல குருபரன்கால் மலர்கள் போற்றி.

புறச்சந்தான குரவர்

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த மெய்கண்டார் இணைத்தாள் போற்றி
நாராண்ட பல்லடியார்க் கருள்புரிந்த அருணந்தி நற்றாள் போற்றி
நீராண்ட கடந்தை நகர்மறைஞான சம்பந்தர் நிழற்றாள் போற்றி
சீராண்ட தில்லைநகர் உமாபதியார் செம்பதுமத் திருத்தாள் போற்றி.

மெய்கண்ட தேவர்

அல்லாத பரசமய வலகைத் தேர்விண்
டகலவகல் புனற்பெண்ணை அயல்சூழ் வெண்ணை
பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற்
புனிதசிவா கமப்பொருண்மை பொருந்த வாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
நிற்குநிலை இதுவெனமெய்ந் நெறிதேர்ந் தியாரும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
மெய்கண்டான் சரணமுடி மீதுகொள்வாம்.

சிறிய வாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிவெலா மகப்படுத் தவற்றி
நெறியெ லாம்விளக் கியசிவ ஞானபோ தத்தைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம்.

அருணந்தி சிவாசாரியர்

முப்பொருளி னீரியல்பு மோரியல்பா நுவலாது
முறைவெவ் வேறாய்ச்

செப்புசிவா கமங்களின்றன் பொருளொருமை பெறவுணர்த்து
திறமுன் னூலை
ஒப்பவிரி யாப்பதனாற் சித்தியெனும் வழிநூலாய்
ஒளிர்பிற் காலத்
திப்புவியோர் தெளித்துய்ய மொழிந்தவரு ணந்திசிவன்
இணைத்தாள் போற்றி.

மறைஞானசம்பந்த சிவம்

திருவளரும் சாமமறை திகழ்பரா சரன்மரபோன்
விரசுனர்பான் மறையுணர்வு விரிந்தொளிரப் புணர்த்துவோன்
மருதமொடு கடந்தையையாண் மறைஞான சம்பந்த
குருமணிதன் மருமலர்த்தாள் குறித்துருகிப் பரசிடுவாம்.

உமாபதி சிவம்

அடியார்க் கெளிய னெனத் தில்லை
அண்ண லருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி அப்பொழுதே
உடலுங் கரைவுற் றடைந்திடுவான்
உயர்தீக் கையினை அருள்நோக்கால்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரின் கழல் போற்றி.

வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள்வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்!.

- *கச்சியப்ப சிவாச்சாரியார்*



-: பொருளுதவும் புண்ணியர் :-

அருள்நெறிச் செல்வர் திரு. S.K. செந்தியப்ப நாடார் அவர்கள்

அபிராமி அச்சகம், மதுரை-625 001. ☎ 657 60 80